விலை ரூபா 2-00

16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 மாசி 11 ஜ. ஆகி 13 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (23—2—86) இதழ் 13

UNIVERSITY OF JAFFNA SRI LANKA RECEIVED 25-2-1986 PERIODICALS DIVISION LIBRARY

## அக்கரைப்பற்று கொலைகள்:

## வெளிநாட்டுதூதுவர்கள் ஆழ்ந்த கவலை!

(புதுடில்லி)

அக்கரைப்பற்றுப்பகுதியில் உள்ள உடும்பன்குளத்தில் அறுவடையில் ஈடுபட்டிருந்த சமயம் ஆயுதப் படையினரால் சொல்லப்பட்டதாகக் கருதப்படும் 103 அப்பாவி விவசாயிகளின் மரணத்தையிட்டு இலங்கையிலுள்ள வெளிநாட் (13ம்பக்கம் பார்க்க)

உடும்பன்குள வயற் பரப்பில்

# 3 பிணக் குவியல்களில் 60 மண்டை ஓடுகள்!

## அதிரடிப்படைத்தாக்குதல் விளைவுபற்றி மட்டுநகர் பிரஜைகள் குழு அறிக்கை!!

(ஏ. வி. மாணிக்கம்)

**அக்கரைப்பற்றுப் பகுதியிலுள்ள உடும்பன்குளம் வயல்வெளியில் பயங்கர படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு விஜயம் செய்த மட்டக்களப்பு பிரஜைகள் குழுவினர் 60 பேரின் மண்டை ஓடுகளை மாத்திரம் கைப்பற்றியுள்ளனர்.**

**இவ்வயல் வெளிக்கு கால்மைல் தூரத்திலுள்ள காடு ஒன்றுக்குள் எரிக்கப்பட்ட மூன்று பிணக் குவியல்களிலிருந்து கொலை செய்யப்பட்டவர்களின் மண்டை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.**

மேலும் குவியல்களாக அரைகுறையாக எரிந்தநிலையில் சடலங்கள் கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அளிக்கம்பை, தங்கவேலாயுதபுரம், அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளிலிருந்துசென்ற விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும்ம இக்கதி நேர்ந்துள்ளது

''கடந்த 19ம் திகதி காலை 7 மணிக்கு ஆயுதம் தாங்கிய கொமாண்டோ பொலிஸார் அவ்விடத்திற்கு வந்தனர், அப்பொழுது வயலில் களத்து மேட்டில் சூடடித்துக்கொண்டிருந்தோம், 3 டிராக்டர்கள் சூடடித்துக் கொண்டிருந்தன. திடீரென வந்த படையினர் எங்களைச் சுற்றி வளைத்து எங்களில் என்னுடன் நின்ற இரு பெண்களையும் ஒரு வயோதிபரையும அழைத்து அவ்விடத்தை விட்டு ஓடும்படி பயமுறுத்தினர். நாங்கள் ஓடிச் சென்று ஒரு கற்பாறைக்குள் மறைந்திருந்து பார்த்தோம்.

அப்பொழுது வெடிச் சத்தம் கேட்டது. நால்வர் நிலத்தில் வீழ்ந்தனர். விழுந்த நால்வரையும் மற்றவர்களையும் கால்மைல் தூரத்திலுள்ள காட்டுக்குள் துப்பாக்கி முனையில் கொண்டு சென்றனர். அங்கும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் அவலக் குரலோசைகளும் தொடர்ச்சியாகக் கேட்டவண்ணமிருந்தது.

''சற்று நேரத்தின் பின்னர் வயலிருந்த 3 ட்ராக்டர்களில் வைக்கோல் பிடிகளையும் விறகு கட்டைகளையும் அங்கு ஏற்றிச் சென்றனர். அவ்விடத்தில் ஒரே புகைமண்டலமாக காட்சியளித்தது. குளறல் சத்தங்களும் கேட்டன. இருட்டியதும் நாஙகள் நடந்து சென்று அக்கரைப்பற்று சேர்ந்தோம்''இவ்வாறு உயிர்தப்பி வந்த நால்வரும் பிரஜைகள் குழுவிடம் முறையிட்டனர்.

[13ம் பக்கம் பார்க்க]

## உயிரிழந்தவர்களில் 45 பேர் விபரம்!

அக்கரைப்பற்று உடும்பன் குளம் பகுதியில் கடந்த வியாழனன்று காலை ஆயுதப்படையினரால் கொலை செய்யப்பட்டவர்களில் சிலரின் விபரம் வருமாறு:

குழந்தன் [27] வயது 2பிள்ளைகளின் தந்தை, ரி. ராமலிங்கம் [26 வயது], ஒரு பிள்ளையின் தந்தை, எம். முத்துலிங்கம் [18வயது], ரங்கன் போல் [28 வயது] 3 பிள்ளைகளின் தகப்பன், அளிக்கம்பையைச் சேர்ந்த குறவர்தங்கவேலாயுதபுரத்தைச் சேர்ந்தவர்கள்.

எஸ். சிவபாலன் (28 வயது] 4 பிள்ளைகளின் தந்தை, கே நாகராசா [27 வயது] 4பிள்ளைகளின் தந்தை, சுவானிதேவி [29 வயது] 3 பிள்ளைகளின் தாய், எஸ். தவநாதன் [30 வயது] 2 பிள்ளைகளின் தந்தை எஸ். அருட்செல்வம் [18வயது] கே. வடிவேல் [27 வயது] 2 பிள்ளைகளின் தந்தை, பி யோகராசா [18 வயது], வி. ராஜாராம் [30 வயது] 4பிள்ளைகளின் தந்தை, எம். தியாகராசா (28 வயது) 1 பிள்ளையின் தகப்பன், ஆர். செல்லையா ட்ரக்டர்சாரதி [32வயது 1பிள்ளையின் தந்தை, ஆர். சாமித்தம்பி [30 வயது] 3 பிள்ளைகளின் தந்தை, ஆர். சிவபாலன் [18 வயது], ட்ரக்டர் சாரதி விஸ்வகேதுராசா [விவாகம் செய்து 2 மாதம்], கே. பேரின்பம்[28 வயது] 4 பிள்ளைகளின் தகப்பன், இ. சதாசிவம் [35 வயது] 5 பிள்ளைகளின் தந்தை ரி. சபாரட்ணம் 22 வயது) ஒரு பிள்ளையின் தந்தை கே மோகனராசா (22 வயது) தபேந்திரன் 18 வயது) எஸ். இன்ஞசி (32 வயது) (3 பிள்ளைகளின் தந்தை), எம். தங்க

[-13ம் பக்கம் பார்க்க]

## கொழும்புக்குண்டு மேலும் மூவர் கைது!

## ஜெயசீலன் வெளி நாட்டில் தலைமறைவு

[கொழும்பு]

கொழும்பு நகரில் அமைதியின்மையை ஏற்படுத்த மேற்கொண்ட எத்தனிப்பில் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்பட்ட இருவரைக் கைது செய்த அடுத்த 48 மணித்தியாலங்களில் மேற்படி முஸ்தீபில் சம்பந்தப்பட்ட மேலும் மூவரைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை மேற்படி சதியின் முக்கிய சந்தேக நபரா

(16ம் பக்கம் பார்க்க)

## ''சித்தாந்தரீதியில் எமது பொருளாதாரம் வளரவேண்டும்''

### – துணைவேந்தர் 'வித்தி'

(யாழ்ப்பாணம்

''அரசியல் சித்தாந்தரீதியில் எமது பொருளாதாரம் வளம்படவேண்டும். உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டும். அபிவிருத்தியில் நாம் அனைவரும் ஒன்றுபட்டுழைக்கவேண்டும். கலை கலாசாரங்கள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும். அப்போது தான் எமது இனம் அபிவிருத்தி காணமுடியும்''

ஈழத்தின் இன்றைய பொருளாதார நிலை மாற்றியமைப்பதைத் தொனிப் பொருளாகக் கொண்ட ஒரு கண்காட்சியை நேற்று சென். ஜோன்ஸ் கல்லூரியல் திறந்து வைத்துப் பேசுகையில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. சு வித்தியானந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''இன்றைய கண்காட்சியின் மூலம எதிர்காலத்தில் புதிய தொரு சமூகமாற்றத்தை, வளமான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும். இக் கண்காட்சியை ஒவ்வொரு இளைய தலைமுறையும் கண்டு களிக்கவேண்டும்'' எனத்துணைவேந்தர் தமது உரையின் போது மேலும் கூறினார்.

கண்காட்சியில் பனை அபிவிருத்திச்சபை தவிர்ந்த அத்தனை காட்சிப்பிரிவுகளிலும் நிரம்பலான விளக்கங்களும் தாவுகளும் தரப்படுகின்றன, பதின்மூன்று பிரிவுகளாக கண்காட்சித்திடல் பிரிக்கப்பட்டுள்ளது. குடிசனப்பரம்பல், நிலப்பரம்பலும் பயன்பாடும், மண்நீர் வளங்களும் பயன்பாடும், விவசாயம், மீன் பிடித்துறை, கால்நடை வளர்ச்சி, கைத்தொழில், வலு வளங்கள், தொடர் பாடல் சாதனங்கள், உல்லாசப் பயணத்துறை, வைத்தியத்துறை, பனைவளம், இலத்திறனியல் ஆக வகுக்கப்பட்டுள்ளன.

கண்காட்சியில் யாழ். செயலகம், விவசாயத் திணைக்களம்,

(16-ம பககம பார்க்க)

## 'நீயுமா 'சிங்கர்'?''

(லண்டன்)

உலகப் பிரசித்திபெற்ற ''சிங்கர்'' நிறுவனம் எலெக்ரோனிக் போர்ஆயுதங்கள் உற்பத்தி செய்யவுள்ளது. 135 வருடங்கள் சிங்கர் தையல் மெஷின் உட்பட பல வீட்டுப் பாவனைப்பொருட்களை உற்பத்தி செய்த நிறுவனமே, இவ்வாண்டு போர் ஆயுதங்களை உற்பத்தி செய்ய வுள்ளது. இவ் ஆயுதங்கள் 'சிங்கர்' என்ற பெயரில் விற்பனைக்கு வரும். (கெ)

காங்கேசன்துறையில்

## 'ஷெல்' தாக்குதலும் ராணுவ நடைபவனியும்!

### கடைகள், வீடுகள் சேதம்!!

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறையில் நேற்றுக் காலை இடம்பெற்ற 'ஷெல்' தாக்குதலில் பலர் காயமடைந்தனர். காங்கே சன்துறை உரக் களஞ்சியத்தின் அருகில் உள்ள வீடுகளின் கூரைகளும் சேதமுற்றன.

இன்று காலை காங்கேசன்துறைப் பகுதியில் ஷெல் குண்டுகள் வந்து வீழ்ந்தனவாம் அவை காங்கேசன்துறை இராணுவ முகாம் பகுதியிலிருந்து வந்திருக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தின் போது காங்கேசன்துறை உரக் களஞ்

[13ம் பக்கம் பார்க்க]

## மரண தண்டனை!

[யாழ்ப்பாணம்]

திசாகாமி ரஞ்சித் என்பவர் 'ரூபன்' என்ற புனைபெயருடன் சிறிலங்கா படையிலிருந்து நேற்று உளவு பார்க்க வந்தபொழுது தம்மால்கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டதாகவும், விசாரணையின் பின் தகுந்த ஆதாரங்களுடன் அவருக்கு மரணதண்டனை வழங்கபபட்டதாகவும் தமிழீழ விடுதலை இராணுவம் [டெலா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

[மா]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

250 Love Birds விற்பனைக்குண்டு. தொடர்பு: 20, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். [C 883]

உரும்பராய் சந்திக்கு அருகாமையில் வீட்டுடன் ஐந்து (5) பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி விஜயரட்னம், "College view" [கல்லூரிக்கு முன்பாக], உரும்பராய். [C 868]

நல்ல இன பசுக்களும், தென்னம்பிள்ளைகளும், பனை மரங்களும் விற்பனைக்குண்டு. P V. சூரியா, 'செல்வவேல்', இல, 10, கல்லூரி வீதி, கொக்குவில். [C 831]

புதிய Wheel Chair விற்பனைக்குண்டு. விலை ரூபா 10,000/- வரை. முகவரி: சி. அப்புத்துரை, 'ஆனந்தபவனம்' தேவாலய முன்வீதி, உரும்பராய். [C 871]

நெல்லை க. பேரனின் முதற் பரிசுபெற்ற "விமானங்கள் மீண்டும் வரும்" குறுநாவல் இப்போது யாழ்ப்பாணத்தில் சகல புத்தகக் கடைகளிலும் விற்பனையாகிறது. பிரதி ரூ. 9-50 சதம் மட்டும். [C 459]

எட்டுமுழப் பனைமரங்களும், சிலாகைகளும், வேப்ப மரக்குற்றிகளும் மொத்தமாக விற்பனைக்குண்டு. பிற்பகல் இரண்டு மணிக்குமேல் தினமும் பார்வையிடலாம். பொன்மலர் ஸ்ரோர்ஸ், அளவெட்டி. [C 896]

பூரண விளைத்திறனுடைய புதிய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். [C 911]

சுத்தமான பொக்கட் நாய் குட்டிகள் (Purebred Pommerenian) விற்பனைக்குண்டு, தொடர்பு: நியூ பாமசி, ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய். C-908

வீட்டுத்தளபாடங்கள், தேக்கு அலுமாரிகள், Dressing Table, சிங்கர் மெசின், காரியாலய மேசைகள், விருந்தைக் கதிரைகள், நேசறிக் கதிரைகள், கட்டில்கள் சாப்பாட்டு மேசைகள், Belling Cooker, Oven, வெளியூர் கிளாஸ்வகைகள், Pyrex கோப்பைகள், Hall செற்றி, Bath Tub, Show Case, Baby Cot, மற்றும் கிளாஸ் வகைகள், துணிகள், பெட் சீற் விற்பனைச்குண்டு. தொடர்பு; பத்மநாதன், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு மருத்துவக் கல்லூரிக்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில். (C-864]

## கல்வி

நோர்வேயில் பல்கலைக்கழகம், உயர் பாடசாலை ஆகியவற்றில் அனுமதி, புலமைப் பரிசில், கடனுதவி சம்பந்தமான விபரங்கள் பெறுவதற்கு மாத்திரம். முன்பு வெளியான விளம்பரம் தொடர்பாக சந்திக்கும் முகவரி நேரம்: காலை 9-00—12-00; Development Information Service மாணிக்க இராசகிரி கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். [C 897]

## தேவை

சிங்கப்பூரில் வீட்டுப் பணிப்பாளராக வேலைசெய்வதற்கு பெண்கள் தேவை. நேரில் சந்திக்கவும். T. குணரட்ணம், திருஞானசம்பந்தர் லேன், வட்டுக்கோட்டை. [C 860]

வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறை, சாவகச்சேரி றோட்டில் சகல வசதிகளுமுடைய தும்புத் தொழிற்சாலையை ஏற்று நடத்துவதற்குப் பொறுப்பான அனுபவமுடைய ஆள் தேவை. தொடர்பு: V. P. பொன்னுத்துரை, தபாற் கந்தோர்வீதி, கரவெட்டி? [C 862]

45 அல்லது 50 வயதிற்கு மேற்பட்ட கார் சாரதி ஒருவர் தேவை. நேரில் வரவும் சரஸ்வதி ஸ்ரோர்ஸ், 55, பெரியகடை யாழ்ப்பாணம். [C 891]

தென்னந்தோட்டம் ஒன்றைப் பராமரிப்பதற்கு ஒரு குடும்பம் தேவை. நேரில் வரவும். நா. சதானந்தன், 79, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [C892]

வொக்ஸ் வகன் 1200, 1300 தேவை. தொடர்பு கொள்ளவும். ஆர். ராஜநாயகம் C/O சுலைமான்கண்டு அன்பிறதர்ஸ், 5-7, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். (C-899)

### வைத்தியம்

நாட்பட்ட வியாதிகளுக்கு விசேஷ சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் எம் வி திலைசந்திரன், Registered Homoeopath, 218/5, பலாலி வீதி. கந்தர்மடம், யாழ்ப்பாணம். (C 671)

## வகுப்புகள்

வயறிங், வெல்டிங், ரேடியோ and ரீ. வி. மோட்டார் மெக்கானிசம், மோட்டர் வைன்டிங், ரேடியோ and எலக்ரோனிக், Short Hand Typing புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. கட்டணம் மிகக் குறைவு. சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineering 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 873

பாலர் கல்விக் கழகத்தால் பாலர் பாடசாலை ஆசிரியைகட்கு இலவசமாகபுனர்பயிற்சி வகுப்புகள் (Referesher Course) எதிர்வரும் 24ம் திகதி போயா தொடக்சம் பெருமாள் கோயிலுக்கு முன்னுள்ள சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் நடைபெறும். வருடஇறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். சேரவிரும்புவோர் நேரில் வரவும். (C 815)

### MATRIMONIAL

Hindu vellala parents seek educated tall attractive non-vegetaraian brides below 27 years for two sons mars afflicted Engineer in Australia and, Doctor in U K Proposals from Australia and U. K. too will be considered Contact: Advt. No. C-882, C/o Eelanadu, Jaffna. C-882

## வாடகைக்கு

பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் சகல வசதிகளுடனும் கூடிய அறை பல்கலைக்கழக முதலாம் வருட இரண்டு மாணவ/மாணவிகளுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும் தொடர்பு: 97, பிரவுண் வீதி, கொக்குவில். [C 881]

பிரதான பாடசாலைகளுக்கு அண்மையிலும், சகல வசதிகளைக் கொண்டதுமான வீடு ஒன்று வாடகைக்குண்டு. தொடர்பு: தொலைபேசி இலக்கங்கள்: 22649, 22753. [C 893]

## சோதிடம்

Astrologer and Palmist உங்கள் சாதகங்களைக் கைரேகையுடன் ஒப்பிட்டு, தங்கள் பிறநாட்டுப் பயணம், காதல், கல்யாணம், வரன் உத்தியோகம் மற்றும் விபரங்களும், செவ்வாய் பாவ விதிவிலக்குகளுக்கமையத் திருமணப் பொருத்தங்கள், பிறநாட்டுப் பிள்ளைகள் சாதகங்கள் பலன்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிக்கொள்ளவும், மற்றும் தங்கள் பிரச்சனையாவுக்கும் தீர்க்கமான ஆலோசனைபெற அழைக்கின்றோம். இராசேந்திரன், 'திருவுளம்', அச்சுக்கூட ஒழுங்கை, ஸ்ரேசன் றோட், கொக்குவில். C-910

## மணப்பந்தல்

இந்து வேளாளர் 38 வயது ஆசிரியைக்கு வரன் தேவை. உயர்பதவியிலுள்ள இளைய சகோதரருடனான மாற்று சம்பந்தமும் கவனத்துக்கெடுக்கப்படும், தயவுசெய்து சாதகப் பிரதியுடன் விண்ணப்பிச்கவும். விளம்பர இல. C 8?0 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 830]

28 வயதுடைய இந்துமத A/L படித்த அழகிய மணமகளுக்கு தகுந்த ஒழுக்கமான அரசாங்க, வங்கி அல்லது தனியார் கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்யும் மணமகன் தேவை. சீதனம் ஓரளவு வழங்கப்படும். சாதகக் குறிப்புடனும் மற்றைய சகல விபரங்களுடனும் தொடர்புகொள்க: விளம்பர இல. C 869, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 869]

உயர்குல 36 வயதுடைய இந்துப்பெண்ணுக்கு நல்ல தொழில்புரியும் மணமகன் தேவை. வீட்டோடு தகுந்த சீதனம் கொடுக்கப்படும் தொடர்புகொள்ளவும்: விளம்பர இல. A-281, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். A-281

இந்து வேளாளர் 37 வயது செவ்வாய்க்குற்றமுள்ள பட்டதாரி அரசாங்க உத்தியோகத்தருக்கு மணமகள் தேவை. 1, 2, 4 எண்காரர் விரும்பப்படுவர். சாதகக் குறிப்பு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. C 829, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம், [C 829]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## கேள்விப் பத்திரங்கள்


ஆஸ்பத்திரிகளுக்கும் நிறுவனங்களுக்கும் பாண், விறகு போன்ற பொருட்களை விநியோகம் செய்வதற்கும், வாகன சேவைக்குமான கேள்விப்பத்திரங்கள் 1986ம் ஆண்டு இரண்டாவது காலாண்டுக்கு விற்பனை அபிவிருத்தித்திணைக்களத்தால் கோரப்படுகின்றன. விபரங்களும் விண்ணப்பப்படிவங்களும் 9-3-86 மாலை 3 மணி வரை காரியாலயத்திலும், திணைக்கள ஆஸ்பத்திரி விநியோகக் கிளைகளிலும் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 10-3-86.

**சு. சண்முகரட்ணம்,**

பிராந்திய கணக்காளர்,
விற்பனை அபிவிருத்தித் திணைக்களம்,
250, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். A-270

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**இளையதம்பி சாதுலிங்கம்**

(பிரபல கட்டிட ஒப்பந்தக்காரர், பெரியண்ணை)

மலர்வு: 02-11-1906
உதிர்வு: 26-01-1986

ஆலவிருட்சம் போல் எம் குடும்பத்தைத் தழைக்க வைத்து அன்புடன் எம்மை அரவணைத்து வளர்த்த எம் அன்புத் தெய்வமே! உங்கள் பிரிவால் நாம் துயருறுகின்றோம்.


26-01-86 ஞாயிற்றுக்கிழமை அன்று எம்மை விட்டுப்பிரிந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் கலந்துகொண்டு எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் எல்லோருக்கும் இத்தால் மனப்பூர்வமான எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் 25-02-1986 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறவிருக்கும் 31ம் நாள் சிராத்ததினத்தில் பங்கேற்று அன்னாரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்தித்து ஏகுமாறு இத்தால் தாழ்மையுடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் பிரிவால் துயருறும்

மனைவி, மக்கள்,
சகோதரர்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
இலக்கணாவத்தை,
சமரபாகு,
உடுப்பிட்டி.

[C 901]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**இராமலிங்கம் கலைச்செல்வன்**

தோற்றம்: 28- 0-1965
மறைவு: 15-02-1984

திதி: 23-02-1986

எந்திரங்கள் பூட்டி இறைத்தாலும் ஊற்றெடுக்கும் நீர் எல்லாம் உப்புத்தான் கண்ணா! ஆயிரந்தான் ஆறுதல்கள் குவிந்தாலும் வேதனை தான் எங்களுக்கு, மீட்சி இல்லை கண்ணா!

தாய், தந்தை,
சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(C 8,1)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



**செல்வவினாயகமூர்த்தி காங்கேசபிள்ளை**

[ஓய்வுபெற்ற கூட்டுறவு இலாகா லிகிதர், யாழ்ப்பாணம் ]

தோற்றம்: 23 01-1926
மறைவு: 27-01-1986

27-01-86 அன்று காலமான திரு. செல்வவினாயகமூர்த்தி காங்கேசபிள்ளை அவர்களது இறுதிக் கிரியையில் கலந்துகொண்டவர்கள், அனுதாபச்செய்தி அனுப்பியவர்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு 26-02-86 புதன்கிழமை அதிகாலை வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், வீட்டுக்கிரியையிலும் கலந்துகொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி:
**திருமதி காங்கேசபிள்ளை.**
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.

[C 902]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடுகளில்

# தமது நிலையை விளக்க மார்க்கோஸ் தூதுக்குழுக்களை அனுப்புகிருர்!

### பதவி ஏற்புக்கு மதிப்பளிக்க முக்கிய நாடுகள் தயக்கம்

மணிலா]
பிலிப்பைன்ஸில் நடந்துள்ள சர்ச்சைக்குரிய ஜனதிபதி தேர்தலையடுத்து அந்நாட்டில் காணப்படும் அரசியல் நிலமையை விளக்கும் பொருட்டு ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிற்கு விசேஷ தூதுக்குழுக்களை தாம் அனுப்பி வைப்பதாக ஜனதிபதி மார்க்கோஸ் தெரிவித்துள்ளார்.

அடுத்த புதன்கிழமையன்று நடைபெறவிருக்கும் அதிபர் பதவியேற்பு நிகழ்ச்சிக்கு தாங்கள் கீழ்மட்டபிரதிநிதிகளையே அனுப்பிவைப்பதாக பல நாடுகள் தெரிவித்துள்ளதையடுத்தே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந் நிகழ்ச்சிக்கு தாம் ஒரு பிரதிநிதியையும் அனுப்பி வைக்கப் போவதில்லையென்று கனடா அறிவித்துள்ளது.

இதவேளை திருமதி அக்கினே நேற்றுமுன்தினம் அமெரிக்க அதிபர் றீகனின் விசேஷ தூதுவர் ஹபிப்பைச் சந்தித்து நிலைமையை மதிப்பிடுவதற்கு முன்னல் நாடுதழுவிய ஆட்சேப இயக்கமொன்றை நடத்தவேண்டும் என்று கோரி தாம் விடுத்த அழைப்பைத் தொடர்ந்து மேற்கொண்டும நிலைமையை அவதானிக்குமாறும் திருமதி அக்கினே கேட்டுக் கொண்டார். [து[

---

## சோவியத் செயற்கைக் கோள்

(மாஸ்கோ)
விண்ணில்வலம் வரும் புதிய ஆராய்ச்சிச் செயற்கைக்கோள் ஒன்றை சோவியத் யூனியன் செலுத்தியுள்ளது.

இது காலப்போக்கில் ஆள் இயக்கக்கூடிய நிரந்தர செய்மதியாக மாற்றப்படுமென்று சோவியத் செய்தித் தாபனம் 'டாஸ்' தெரிவித்துள்ளது.

'எம் ஐ.ஆர்' என்று பெயரிடப்பட்ட இந்த விண்வெளி நிலையத்தில் விண்வெளி வீரர்களும் ஏனைய பொருட்களும் கொண்ட விண்கலங்கள் இறக்கக்கூடிய ஆறு இடங்கள் அமைந்திருக்கும். (ச)

---

தென்னபிரிக்காவில் இரு நகரங்களில்

## கறுப்பர்களுக்கும் கடைகளில் சமத்துவம்?

[கேப்டவுன்]
தென்னபிரிக்காவின் இரண்டு பெரிய நகரங்கள் தங்களது வர்த்தக அமைப்புக்களை வெள்ளையரல்லாத வர்த்தகர்களுக்கும் திறந்து விட்டிருப்பதாக தெரிய வருகிறது.

ஜோகனேர்ஸ் பேர்க்கிலும் தர்ப்பனிலும் முன்புவெள்ளையர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு வந்த வர்த்தக மாவட்டங்களில் அனைத்துஇனமக்களும் கலந்து கொள்ளக்கூடிய கயேச்சை வர்த்தகப்பகுதியாக திறக்கப்பட்டுள்ளது.

இதற்க்கிடையே ஜோகனேர்ஸ் பேர்க்கிலுள்ள அலெக்ஸாண்ட நகர்க் குடியிருப்பில் நிகழ்ந்த நால்குநாள் கிளர்ச்சிகளில் 23 பேர் இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [து]

---

## காந்தியின் பேரன் காலமானர்

(போபால்)
மகாத்மா காந்தியின் பேரனன கனுக்காந்தி (70 வயது) கடந்த 20 ம் திகதி மத்திய பிரதேசம் மாநிலத்திலுள்ள அவரது கிராமத்தில் காலமானர்.

---

## உலகச் செய்திகள்

---

## பொதுமக்கள் காயம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி நகர மத்தியில் நேற்று இரு தினங்களுக்கு முன் இடம்பெற்ற துப்பாக்கி வேட்டுக்கள் காரணமாக, நான்கு பொதுமக்கள் காயத்துக்குள்ளாகியுள்ளனர்.

## டாக்கா மோதலில் 50 பேர் காயம்

(டாக்கா)
பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் கிளர்ச்சி நடத்தும் மாணவர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே நடந்த மோதலில் 50 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவருகிறது.

தியாகிகளுக்கு மரியாதை செலுத்தும் விதத்தில் ஜெனரல் ஏர்ஷாத் மலர் வளையம் வைத்த நினைவாலயம் ஒன்றில் தமது தலைவர்களின் உருவப் படங்களை வைப்பதற்கு இரண்டு குழுக்களின் உறுப்பினர்கள் முயன்றபோது சண்டை மூண்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

---

## பஞ்சாப்பில் தொடர்ந்து மோதல்

(புதுடில்லி)
இந்தியாவின் வடபகுதியில் சீக்கியர் களுக்கிடையிலான மோதல்களும், இனக் கலவரங்களும் அதிகரித்து வருவதாகத் தெரியவருகிறது.

பஞ்சாப்பில் இரு மிதவாத சீக்கியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். அரசியல் வன்முறையின்போது சுட்டுக் கொல்லப்பட்ட மற்றுமொரு சீக்கியரின் ஞாபகார்த்த மதச் சடங்கில் கலந்து கொள்வதற்காக செல்லும் வழியில் இந்த இரு மிதவாத சீக்கியர்களும் கொல்லப்பட்டார்கள்.

பஞ்சாப் முதலமைச்சர் திரு சுர்ஜித்திங் பர்ணலா இந்த ஞாபகார்த்த மதச் சடங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அந்த மாநிலத்தில் வன் செயல்கள் தொடர்ந்தும் இடம்பெற்ருல் இராணுவச்சட்டத்தை கொண்டுவர வேண்டிவரும் என்று கூறினர். (து)

---


# தரத்திற்குப் பேர்போன பீ.சீ.சீ. வழங்கும் மற்றுமோர் மாபெரும் விலைக்குறைப்பு!

| சலவை/கழுவு சோப் | ரூ. சதம் |
|---|---|
| சவரின் பார் | 15 . 00 |
| சன் - றே | 4 . 90 |
| ஸ்னே - வைட் | 3 . 10 |
| **வாசனை சோப்** | |
| பீசீசீ சந்தன சோப் | 4 . 75 |
| புதிய சுவேந்திரா | 4 . 50 |
| நைட் அன்ட் டே | 3 . 75 |
| கோல் டார் | 3 . 75 |
| ஏஞ்சல் பேபி சோப் | 4 . 50 |
| ஹெல்த் ஜோய் | 3 . 70 |

| சவரப் பொருள்கள் | ரூ. சதம் |
|---|---|
| சவரச் சவர்க்காரக் கேக் | 5 . 25 |
| சவர மாற்றுச் சவர்க்காரம் | 5 . 00 |
| சவரப் பிளாஸ்திக் | 7 . 00 |
| **வாசனைப் பவுடர்** | |
| புதிய சுவேந்திரா | 17 . 00 |
| நைட் அன்ட் டே | 15 . 50 |
| **பைனேல்** | |
| போத்தல்கள் - (பிளாஸ்திக்) 750 மி. லீ. | 27 . 50 |
| கொள்கலங்கள்-4.5 லீட்டர் | 155 . 00 |

| பேர்மா - ஷாப் | ரூ. சதம் |
|---|---|
| பிளேட்கள் | 1 . 50 |
| பாதுகாப்பான றேசர் | 16 . 95 |
| **சம்பயன் - (கவசத்துடன்)** | |
| பிளேட்கள் | . 65 |
| **சம்பயன் - (கவசமின்றி)** | |
| பிளேட்கள் | . 60 |
| **வில்கின்சன்** | |
| ஒருமுறைப் பாவனை றேசர் | 4 . 10 |
| **கிளீன்** | |
| கழுவு தூள் | 8 . 95 |
| வைற் ஒயில் | 15 . 00 |
| குக்ஸ் ஜோய் | 17 . 00 |

BCC அரச உடைமை ஆக்கப்பட்ட
பிரிட்டிஷ் சிலோன் கோப்பறேஷன்




Ribbs N&L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானக்குண்டுத் தாக்குதலில் தப்ப வழிகள்

# பிரயாணத்தின்போதும், வீடுகள், கடைகளில் நிற்கும்போதும் குண்டு வீசப்பட்டால்....

**விமானக் குண்டுத் தாக்குதல்களிலிருந்து மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றிய கட்டுரையின் முதற்பகுதி நேற்று வெளியிடப்பட்டிருந்தது. இரண்டாம் பகுதி இன்று வெளிவருகிறது.**

குப்புறப் படுக்கும்போது, நெஞ்சுப் பகுதியை நிலத்திலிருந்து சற்று மேலே தூக்கியவாறு முழங்கைகளால் தாங்கிக்கொள்ளுங்கள். காதுகளை பருத்தித் துணித் துண்டுகளினுல் அடைத்துவிடுங்கள். அது இல்லாவிடில் உங்கள் வேட்டியோ, சேலையோ, சட்டையோ எதுவாயினும் ஒன்றினது தலைப்புகளினுல் நன்கு அடைத்துவிடுங்கள் உருட்டிய கைக்குட்டை அல்லது உடைகளின் ஒரு பகுதியைப் பற்களுக்கிடையில் இறுகக் கடித்துக்கொள்ளுங்கள். இவற்றின் மூலம் வெடிப்பதிர்வினுல் செவிப்பறை மென்சவ்வு பாதிப்படைவதோ அல்லது நாக்குக் கடிபடுவதோ தவிர்க்கப்படும். விமானத் தாக்குதலின்போது திறந்த வெளிகளிலிருந்து ஒருபோதும் மேலே பார்க்காதீர்கள். ஏனெனில் வேறெவற்றையும்விட மனித முகங்கள் இலகுவாக அடையாளம் காணக்கூடியனவாகும்.




புகையிரதம் ஒன்றில் உள்ளபோது......

உடனடியாக இருக்கைகளின் அடியில் தவழ்ந்து சென்றுவிடுங்கள். புகையிரதம் நின்றுகொண்டிருக்குமாயின் அதன் அடியில்கூடச் சென்றுவிடுதல் மேலும் பாதுகாப்பானதாகும். ஜன்னல்களினூடாக எட்டிப் பார்த்தலோ அன்றி வெளியே குதித்து ஓடுதலோ தவிர்க்கப்பட வேண்டும். இரவு நேரமாயின் உடனடியாகப் புகையிரத விளக்குகளை அணைத்தல் புத்திசாலித்தனமானதாகும்.

### பஸ்வண்டியொன்றினுள் உள்ளபோது......

உடனடியாகப் பஸ்ஸினை நிறுத்தச் செய்து வெளியே இறங்கி திறந்த வெளியில் உள்ளபோது செய்ய வேண்டியதைப்போற் குப்புற விழுந்து படுக்கவும்.




பூட்டிய கட்டிடமொன்றின் அருகில் உள்ளபோது......

கட்டிடத்தின் வெளிச்சுவருக்கு அருகிலோ அல்லது கதவு வழிகள், வேறு உள்நுழை வழிகள் போன்றவற்றின் அருகிலோ நிற்பது பாதுகாப்பானதாகும். சுவர்களுக்கு அருகில் நிற்கும்போது அவற்றுடன் ஒட்டிுறற்போல சாய்ந்தவாறு நிற்கக் கூடாது.

கட்டிடத்தினுடைய அறையொன்றினுள், ஜன்னல்கள் ஏதுமற்ற. வெளிச் சூழலுடன் தொடர்பில்லாத சுவரொன்றினைத் தெரிவுசெய்து அதன் அருகே நிற்கவும். ஆனுல் கதவு அல்லது ஜன்னல்கள் போன்றவற்றின் நேரே நிற்க வேண்டாம். உடைந்து சிதறும் கண்ணுடித் துண்டுகள் ஆபத்தானவை. இவற்றைத் தவிர்ப்பதற்காகக் கண்ணுடி ஜன்னல், கதவுகளில் இருந்து விலகிச் சுவர்த் திருப்பங்களிலே நிற்பதே சிறந்த வழியாகும்.

### காரொன்றினுள் உள்ளபோது......

வீதியின் இடதுபக்க ஓரமாகக் காரை நிறுத்தி, ஜன்னல்களைத் திறந்தபடியேவிட்டு, கார்க் கதவுகளைப் பூட்டாமல், சாவியை அதற்குரிய இடத்தில் செருகியபடியே விட்டு, காரினைவிட்டு இறங்கி ஓடிச் சென்று வீதியொன்றில் உள்ளபோது செய்வதைப்போற் குப்புறப் படுக்கவேண்டும். கார் திறந்தபடியே சாவியுடன் இருப்பதனுல் தற்செயலாக நீங்கள் காயமுற்றிருந்தால் உங்களை வேறு யாராவது மருத்துவமனைக்குக் கொண்டுசெல்வதற்கு இலகுவாயிருக்கும்.



மாட்டுவண்டி ஒன்றினுள் உள்ளபோது......

உடனடியாகக் கீழே குதித்து ஒரு சில யார் ஓடிச்சென்று குப்புற விழுந்து படுங்கள். சிறிது நேர அவகாசம் கிடைக்குமாயின் மாடுகளை அவிழ்த்து அருகிலுள்ள பெரிய மரமொன்றில் கட்டிவிடவும்.

### மந்தைகளுக்கான பாதுகாப்பு......

மந்தைகளை அருகிலுள்ள காணியொன்றிலோ அல்லது பாவனையற்ற மண்டபங்களிலோ சுற்றிலும் அடைத்து சிதறி ஓடாதவாறு உள்ளே விட்டுவிடுங்கள்.

மேற்கூறியவை அனைத்தும் குண்டுவீச்சின் பொழுது அருகில் பாதுகாப்புக்குரிய விசேட அமைப்புக்கள் எதுவும் காணப்படாதபோது உங்களது செயல்முறைகளாகும். இனி உங்கள் வீடுகளில், கடைகளில், தொழிற்சாலைகளில் உள்ளபோது எவ்வகையான விசேட அமைப்புகளின் மூலம் உங்களைக் காக்க முடியுமெனப் பார்ப்போம்.

முதலில் சாதாரணமாக உள்ள கட்டிடங்கள் ஓரளவாவது வெடிப்பதிர்வுகளில் இருந்து பாதுகாக்கப் படுவதற்கான முறையில் மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும். இவ்வகையில்மாற்றி அமைக்க எடுக்கும் முயற்சிகள் இப்போதுள்ள சூழ்நிலையில் உங்களை அரச படையினர் விஷேடமாகக் கவனிப்பதற்கு வழி வகுத்துவிடும். எனவே அவ்வப்போதுள்ள சூழ்நிலைகளுக்கும், உங்கள் வசதிக்கும் ஏற்றவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

பொதுவாக கட்டிடங்களானவை, குண்டு வீச்சுகளிற்கு எதிராக கட்டப்பட்டவை அல்ல. எனவே வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள் போன்ற மக்களுடன் தினமும் தொடர்புடைய கட்டிடங்கள் குண்டுவீச்சுக்களைத் தாங்கக் கூடியவகையில் புனரமைக்கப்படுதல் வேண்டும். புனரமைத்தல என்னும்போது இங்கு பெரியளவில் பொருட் செலவில் செய்யப்படுபவற்றை குறிப்பிடவில்லை இப்போது இலகுவாகக்கிடைக்க கூடிய பொருள்களையும், மலிவானவற்றையும் கொண்டுசெய்யப்படும் வேலைகளே குறிப்பிடப்படுகின்றன. கட்டிடங்களுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் எனப்படும்போது அவை நேரடியான குண்டு வீச்சுக்கு தாக்குப் பிடிக்கக்கூடியவை என்ற கருத்தைக் கொள்ளலாகாது சிறிய குண்டுகளுக்கும், அருகில் விழுந்து வெடிக்கின்ற குண்டுகளினது வெடிப்பு அதிர்வுகளுக்குப், சிதறு துண்டுகளுக்கும் எதரான பாதுகாப்பே இங்கு தரப்படுகிறது. இருப்பினும் சில முக்கியமான பொருட்களைக் கொண்ட கட்டிடங்கள் போன்றவை விஷேடமாகக் கவனிக்கப்பட்டு, முழுமையான பாதுகாப்புக்கு உட்பட்டவையாக மாற்றவேண்டியதும் அவசியமாகும.

கட்டிடமொன்றின் கண்ணுடி அமைப்புகள் விஷேடமாகக் கவனிக்கப்பட வேண்டியவையாகும். ஏனெனில் கண்ணுடிகள் உடையும்போது பெருமளவில் சிதறக்கூடியவை. அத்துடன் ஆபத்தை ஏற்படுத்தும் கூரான பொருட்களும் கூட. இக்காரணங்களினுல் கதவு ஜன்னல்களில் பொருத்தப்பட்டிருக்கும் கண்ணுடிப் பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டும். அதாவது உடைவுறும் கண்ணுடியின் பகுதிகள் சிதறிப்பறக்கா வண்ணம் காப்பிடுதல் வேண்டும் இதற்காக தடித்ததுணிகளினுல் கண்டியின் மேல் ஒட்டிவிடுதல் ஒரு முறையாகும். அத்துடன் வெளிச் சூழலுடன் தொடர்புள்ள ஜன்னல்களின் ஊடாக அவற்றின் கண்ணுடித் துண்டுகளுடன் பிற சிதறு பொருட்களும் உள் நுழையக் கூடியதால், ஜன்னல் சட்டங்களின் உட்பக்கத்தில் ½ அங்குல கம்பி வலைகள் மூடி அடிக்கப்படுதல் வேண்டும்.

வெளி வாசல்கள் போன்றவைகூட சிதறு துண்டுகளையும், வெடிப்பதிர்வுகளையும் உள்விடக்கூடியன. ஆதலால் அவையும் மூடப்படுதல் வேண்டும். இதற்காக வாசலுக்கு வெளியே நிலமட்டத்திலிருந்து குறைந்தது 6 அடி உயரத்திற்கு சுவர்போன்ற அமைப்பு கட்டப்படுதல் வேண்டும். இதற்காக செங்கள் ஆனது உபயோகப்படுமாயின் 13 1/2 அங்குல தடிப்புள்ளதாகவும் (1 1/2செங்கல்தடிப்பு). கொங்கிறீற் உபயோகப்படுத்தப்பட்டால் 9 அங்குல தடிப்புள்ளதாகவும் அச்சுவர்அமைய வேண்டும். சுவர் கட்டுவதற்குரிய வசதி இல்லாவிடின்மணல் மூட்டைகளோ அல்ல இலகுவில் கிடைக்கக்கூடிய மரங்களோ சுவர் போன்று அடுக்கப்படுதலும் பாதுகாப்பானதாகும்.

தொடர்ச்சியான குண்டுவீச்சுக்கள் நடைபெறும் காலங்களில், பல மணித்தியாலங்கள் வரைகூட வெளியே நடமாடமுடியாத ஒருநிலை ஏற்படும். அக்காலங்களில் உணவு இருப்பிடம், நீர்வசதிகள்கூட ஒழுங்கற்று காணப்படும் இப்படியான சந்தர்ப்பங்களில்உங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பெருட்கள் போன்றன ஓரிடத்தில் சேமிக்கப்பட்டிருப்பின், வீணுன அலைச்சல்களையும், மனக் குழப்பத்தையும், பீதியையும் தவிர்த்துக் கொள்ள முடியும். எனவே இக்காரணங்களுக்காக உங்களது வீடுகளிலோ, தொழிற்சாலைகளிலோ அன்றி கடைகளிலோகூட ஒருஅறையொன்று இதற்காக ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வறையானது நிலத்தின் கீழ் அமைந்திருப்பின் அதுமிகச் சிறந்த ஒரு பாதுகாப்பு வருயாகும் அவ்வகையான வசதிகள் இல்லாவிடின், யாதாயினும்ஒருஅறையொன்று ஆனுல் அதுவீட்டின் நடுப்பகுதியில் அமைந்திருக்கக் கூடியவாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பலமாடிக்கட்டிடமொன்ருயின் அவ்வறையானது கீழ்த் தளத்தில்இருக்க வேண்டும். அதன் மேற்கூரையானது, வலுவாக்கப்பட்ட கொங்கிறீற் (Rein forced Concrete) இதனுல் ஆனதாகவும் அதன் மேல் வேறு இயந்திரசாதனங்கள் போன்ற பாரமான பொருட்கள் எதுவும் இல்லாதவாறும் பார்த்துக் கொள்ளல் வேண்டும். அவ்வறையினுள் கண்ணுடி ஜன்னல்கள் யாதாயினும் இருப்பின் அவற்றுக்கு முன் கூறப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். அல்லது அக்கண்ணுடிப் பகுதிகள் அகற்றப்பட வேண்டும் அத்துடன் எளிதில் தீப்பற்றக் கூடிய பொருட்கள் எதுவும் இல்லாதவாறும் அவ்வறைக்கு அருகில் எங்கும் தீ ஏற்படுத்தும் மூலகங்கள் இல்லாதவாறும் பார்த்துக் கொள்ளல் வேண்டும். அறையினுள் சென்று வரச் காணப்படும் சாதாரண வழியைவிட ஒரு அவசரகால வழி இருப்பதும் அவசியமானதாகும். 10'X10'X8' அளவுகளைக் கொண்ட அறையானது 5 நபர்களையும் 15'X10'X8' அளவு களைக் கொண்ட அறையானது 7 நபர்களையும், 20'X15'X10' அளவுகளைக் காண்ட அறையானது 13 நபர்களையும் தொடர்ச்சியாக 12 மணித்தியாலங்களுக்கு தங்கவைக்கக் கூடியது. மேற்குறிப்பிட்ட அளவுகள் மிகக்குறைந்த அவசியமானவையே யாகும். எனவே சந்தர்ப சூழ்நிலைகளைப் பொறுத்து அதிக ஆட்களோ அன்றி அதிக நேரத்திற்கோ கூட இதனுள் தங்கவேண்டி வரும். எனவே அவ்வறையினுள் தங்கவேண்டி வரக்கூடிய நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அதனுள் சேமிக்கப்படும் பொருட்களின் அளவும் திட்டமிடப்பட வேண்டும். பின்வரும் பொருட்கள் எந்நேரமும் அதனுள்ளே பாதுகாப்பாக, தயாராயிருக்க வேண்டும்.

1. குடிநீர்.
2. உணவு (தகரங்களில் அடைக்கப்பட்டவை விரும்பத்தக்கது.)
3. முதலுதவிப் பெட்டி.
4. உயிர் காப்பு உபகரணங்கள் (அலவாங்கு, பிக்கான், மண்வெட்டி, கயிறு போன்றவை.)
5 தீயணைப்பு கருவி, நீர்.
6 எண்ணெய் விளக்கு, மெழுகுதிரி, டோச், தீப்பெட்டி.

இப்பொருட்கள் நல்ல நிலையில் உள்ளனவா என அடிக்கடி பரிசீலிக்க வேண்டும். இதனுள் இருக்கும் சமயங்களில் கண்டபடி கதைத்து. அசைந்து திரிவதால் அதிகளவு சக்தி இழப்பு ஏற்படும். எனவே ஓரிடத்தில் இருப்பதோ அன்றி படுப்பதேரதான் சிறந்ததாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு வாரமலர்

EELANADU VARA MALAR

## விஜயா - ராஜா - விஜயராஜா

கண்டியில் நடைபெறும் பெரஹரா உண்மையில் ஒரு வைபவமென்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும்.

பெரஹரா என்பது பிரகாரம் என்பதிலிருந்து வந்தது; ஆதியில் இந்து ராஜாக்களின் கொண்டாட்டம் என்ற அனுவசியமான ஆராய்ச்சி இன்று வேண்டப்படாது.

விஜயன் வரமுந்தி இங்கு தமிழர் வாழ்ந்தனர் என்பதும், சிங்கத்தைப் பற்றிய புராணக் கதைகளும், இவ்விரு இனங்களும் இன்று பிணக்குப் படுவதற்கு உறுதுணையாக விருந்தன.

ஹாமில்டன் பாலம் (Hamilton Bridge) அம்பட்டன் பாலமானது மட்டுமல்ல Barber's Bridge என்றுசென்னையில் பிரபலம் பெற்றிருப்பதை நாம் ஒரு பயங்கரமான செய்தி என்று குறிப்பிடவில்லை. ஆனுல் சில ஆராய்ச்சிகள் இவ்வித முட்டாள்தன மாற்றங்களில் எழுகின்றன. பயங்கர நிலைமைகளை உருப்படுத்துகின்றன

பௌத்தசங்கம், தமிழை அதிகம் பகைக்காது. ஒரு காலத்தில் தமிழகம் பௌத்தத்தை கடைப்பிடித்தது; எனவே ஜாக்கிரதை. விடயம் மதத்தில்தான் உள்ளது; சைவம், பௌத்தம் இவ்விரண்டினுக்கும் எவ்விதத் தீங்கும் நேராதிருப்பதே நாட்டின் சுபிட்சத்துக்கு வழிகோலும்.

விஜயன் விடயம் கைவிடப்படவேண்டும். பௌத்த சின்னங்களைச் சுமக்கும் ராஜா வயதாளியாய் விட்டார்; பட்டத்துக்குரிய இளைஞர் - விஜய ராஜா, தாய்லாந்திலிருந்து அமெரிக்க கடற்படைவிமானத்தில் வந்திறங்கியிருக்கிருர். யானை என்றுல் ஐ. தே. ஆட்சியின் சின்னம் என்பது பெரிதல்ல. பௌத்த இந்து மக்கள் வணங்கும் விநாயகர் எம்மதத்தவரின் விக்கினங்கள் தீர்க்கவல்லவர். விஜயராஜனின் சேவையில் நாடு புனரமைக்கப்படுமா?

தத்துவஞானி ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி அண்மையில் கலிபோர்னியாவில் காலமானது தெரிந்ததே. அன்னுர் 'கல்வி' என்ற தலைப்பில் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவுகளில் இருந்து ஒருசிலஅம்சங்களைஇங்குதருகின்றேம்.

'பெ'

### படிப்பது மட்டும் கல்வியல்ல

# பறவைகள் பாடுவதைக் கேட்பதும் கல்விதான்!

— ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி

நூல்களைப்படிப்பது விடயங்களை மனப்பாடம் செய்வது மாத்திரம் கல்வியாகிவிடமாட்டாது. எப்படிப் பார்ப்பது, நூல்கள் என்ன சொல்கின்றன என்பதற்கு எவ்வாறு செவமடுப்பது, அவை உண்மை சொல்கின்றனவா பொய் பேசுகின்றனவா என்பதையெல்லாம் அறிவதும் கூட கல்விதான். சோதனைகளில் சித்தியடைவது, பட்டம் பெறுவது ஒரு தொழிலை பெற்றுக் கொள்வது திருமணம் முடிப்பது குடும்ப வாழ்வில் இறங்குவது மட்டும் கல்வியன்று பறவைகளின் குரல்களுக்கு செவிமடுக்கத் தெரிந்து கொள்வது, வானத்தைப் அவதானிப்பது, பறங்களின் அதீத அழகினைக் காண்பது, மரங்களின் அமைப்பினைக்கவனிப்பது அவைகளின் உணர்வுடன் ஒன்றிணைவது அவைகளோடு நேராக தொடர்புவைப்பது போன்றவையும் கல்விதான். வயது போகப்போக பார்வையும் கேட்கும் சக்தியும் மறைந்து போகின்றன. ஏனெனில் துரதிருஷ்டவசமாக கவலைகள் வந்து சேர்கின்றன; பணம் தேவைப்படுகின்றது. ஒரு நல்லகார் அதிக குழந்தைகள் அல்லது குழந்தை பிறப்பைக் குறைப்பது போன்ற கவலைகள்; பொருமை, அவா, ஆசை, முதலியவை ஆட்கொண்டுவிடுகின்றன. எனவே பூவுலகின் அழகு பற்றிய உணர்வு இல்லாமல் போய் விடுகின்றது. உலகில் என்ன நடக்கிறது என்பது உமக்குத் தெரிகின்றது. இதற்கு உலகில் நடக்கும் சம்பவங்களை அறிந்து கொண்டே இருக்க வேண்டும். யுத்தங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. புரட்சிகள், கிளர்ச்சிகள் தேசத்துக்குத்தேசம் பகைமை நாட்டுக்குநாடு பிரிவினை, தினமும் மக்கள் பெருக்கம், ஏழைமை, இரக்கமற்ற தன்மை, தான் பத்திரமாக இருக்கும் வரை மற்றவனுக்கு என்ன நேர்கிறது என்பது பற்றிய கவலையின்மை, இவ்வாருன உலகில் பொருந்தி வாழும் வகையிலேயே ஒருவனுக்கு இன்று கல்விபயிற்றப் படுகின்றது.

''உலகம் பயித்தியம் பிடித்துள்ளது என்பதை நீங்கள் அறியவில்லையா? இவை அனைத்துமே பயித்தியக்காரத் தனங்கள் என்பது தெரியவில்லையா? இந்தச் சண்டைகள் ஏளனங்கள் எதிர் நடவடிக்கைகள் யாவும் இவைகளுக்கு ஏற்றுற் போல் வாழும் வகையில் நீங்கள் வளர்த்து விடுவீர்கள்?

இது சரிதானு! இதற்காகத் தான் கல்வியா? சமூகம் என்ற பயித்தியக்கார அமைப்பில் விரும்பியோ விரும்பாமலோ பொந்திவாழ்வதற்கு உதவுவதுதான் கல்வியா? உலகில் சமயங்களுக்கு என்னநேர்ந்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? அதிலும் ஒருமைப்பாடு இல்லை எதையும் எவரும் இனிமேலும் நம்புவதாய் இல்லை.



மனிதனுக்கு விசுவாசம் இல்லை. சமயங்கள் பெரும் பிரசாரத்தின் பெறுபேருக எஞ்சிவிட்டன.

★

ஒழுங்கு இல்லாமல் சுதந்திரமில்லை, இரண்டும் ஒன்ருகச் செல்கின்றன. ''நான்விரும்பியதைச் செய்வேன் நான் விரும்பும் போது சாப்பிடப் போவேன் விரும்பும்போது வகுப்புக்குவருவேன் என்று நீங்கள் சொல்வதாய் இருந்தால் ஒழுங்கைக் கெடுக்கிறீர்கள். மற்றவர்களுக்கு என்ன தேவைப்படுகின்றது என்பதை கவனிக்கவேண்டியிருக்கின்றது. விஷயங்கள் ஒழுங்காக நடைபெற சரியான நேரத்தில் செயல்படவேண்டும். இன்று நான் 10 நிமிடம் பிந்தியிருந்தால் நீங்கள் பத்து நிமிடம் காத்துக்கொண்டிரிந்திருப்பீர்கள் எனவே மற்றவர்களைப்பற்றி நான் யோசிக்க வேண்டியிருக்கிறது.

நான் கண்ணியமாக மரியாதையாக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த விதமான முன்யோசனையில், கவனத்தில் உள்ளும் புறமும் ஒழுங்கு உண்டாகின்றது. அந்த ஒழுங்குடன் சுதந்திரமும் வருகின்றது.

★

அனேகர் சலிப்படைந்து காணப்படுகின்ருர்கள் ஏன்? நீ தனிமையில் அரைமணி நேரம் இருக்கிருய் என்று வைத்துக்கொள்வோம். உனக்கு சலிப்பு ஏற்பட்டுவிடுகின்றது. எனவே ஒரு சஞ்சிகையை, ஒருபுத்தகத்தை எடுக்கிருய். சினிமாவுக்கு, போகிருய். ஏதாகிலும் செய்ய முனைகிருய் உன்மனதை ஏதாகிலும் ஒன்றில் செலுத்தப் பார்க்கிருய். உன்னிலிருந்து நீயே தப்பித்துக் கொள்ளும் முயற்சியாகும் இது. அதனுல் சலிப்புக்கொள்கின்ருய். உன்னேடு உன்னை நீ காண்பதாலும் உன்னேடு உன்னை நீ ஒரு போதும் காணுததாலும் சலிப்பு கொள்கிருய்.

''நான் இவ்வளவு சின்னதாக இருக்கிறேன் எனக்கு ஏத்தனைக்கவலைகள், இவைகளிலிருந்து நான் தப்ப வேண்டும்'' என நினைக்கிருய். நீ என்ன மாதிரி யிருக்கிருய் என்பதே பெரும் சலிப்பாக உள்ளது.

''நான் சலிப்படையமாட்டேன், நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்பதைக் கண்டு பிடிக்கப்போகிறேன். நான் உண்மையில் என்னவாய் இருக்கிறேன் என்பதை அறியப் போகிறேன்'' என்று நீ சொல்வாயானுல் அது உன்னையே ஒரு நிலைக்கண்ணாடியில் [illegible]

(12-ம் பக்கம் பார்க்க)

# தனது பெயரில் தனிக்கோட்பாட்டை விரும்பாத தத்துவமேதை

எந்தவொரு நிறுவனத்தினூடாகவும் வரையறுக்கப்பட்ட கோட்பாடினூடாகவும் உண்மையைத் தரிசிக்கமுடியாதென்பதையுணர்ந்த கிருஷ்ணமூர்த்தி தனது பெயரில் எவ்வித ஸ்தாபனமோ கோட்பாடோ இருக்கக்கூடாதென்பதில் கூடிய அக்கறை கொண்டிருந்ததில்வியப்பெதுவுமில்லை. மனத்தின் தொடர்ச்சியான விழிப்புள்ள நிலையே கிருஷ்ணமூர்த்தியின் அடிப்படைத் தத்துவமென்றுல் மிகையாகாது. விழிப்புநிலை தெளிவை உண்டுபண்ணும். ஒருவனுக்குத் தன்னையும் தனக்குப் புறத்தேயுள்ள சகலவற்றையும் எவ்வித விருப்பு வெறுப்புமில்லாது, சலனமில்லாது நேரடியாக நோக்கத் தெரிந்திருக்கவேண்டும். தன்னைத் திருத்தவேண்டுமென ஒருவர் நினைப்பாரேயாஞல், அவரால் விழிப்பாக இருக்கவேமுடியாது. 'திருத்தல்' என்ற செயற்பாட்டில் கண்டித்தலும் ஒரு நிலையை அடையவேண்டுமென்ற அவாவுஞ் சார்ந்து செயற்படும். ஆனுல் விழிப்பு நிலையென்பது 'தான்' என்னும் தனித்தன்மையின் செயற்பாட்டைப் புரிந்துகொள்வதேயாம்.

கந்தையா நவரேந்திரன்

விழிப்புநிலையென்பது கணத்திற்குக்கணம் நிகழ்வதாகையால், அதனை நடைமுறையிற் செயற்படுத்தமுடியாது. நடைமுறைப்படுத்தப்படும் எதுவும் வெறுமனே பழக்கமாகிவிடுகின்றது. ஆனுல் விழிப்பு நிலை என்பது பழக்கமாகாது.

எவ்வித மாறெதிர்ச்செய்கை (Reaction)யுமில்லாமல் எதனையாவது வெறுமனே பார்க்கும் ஆற்றல் எமக்குண்டா? மனத்தின் விருப்பு வெறுப்புக்களுக்கும் ஆசாபாசங்களுக்கும் இடமளிக்காது, பார்க்கப்படுபவற்றை இவையிவை என்ற எண்ணத்தில் குறுக்கீட்டால் அவற்றை உருவகம் செய்தோ தரம்பிரித்தோ பாராமல் வெறுமனே அதனைப் பார்க்க எங்களால் முடிகிறதா? மாறெதிர்ச்செய்கையெதுவுமில்லாமல், மதிப்பீடெதுவுமில்லாமல், உரித்திரிபெதுவுமில்லாமல் ஒன்றைநோக்கும் போதே பார்வையில் தெளிவு ஏற்படுகிறது. இத்தகைய தெளிவான சூழ்நிலையிலேயேகாணும் பொருள் இஃதென்றும் காண்பதென்றும் காண்பானிவன் என்றும் கொண்ட இருமை அகல அவையிரண்டும் ஒன்றென்ற விழிப்புநிலை உறுதி பெறும். இப்படியான இருமையற்றஅழகிய,இதமானபோரானந்தம் நிறைந்த விழிப்புநிலையிலேயே - காண்பவன், சிந்திப்பவன், அனுபவிப்பவன் என்ற போலி நினைவுகள் நிலைகொள்ளால் அகலும்.

மனிதனை எவ்வித நிபந்தனையுமின்றிப் பூரணமாக விடுவிப்பதே ஜே. கே.யின் அடிப்படை நோக்கமாகும் இதன் பொருட்டே ''தேவதூதன்'' என்று தனக்குச் சூட்டப்பட்ட தலையை அறுத்தெறிந்துவிட்டு வெளியே வந்து மக்களோடு மக்களாய் நின்று அவர்களது பிரச்சினைகளை ஆராய முற்பட்டு வெற்றியுங் கண்டார். தனது சொற்பொழிவுகளைக்கேட்கவந்தோர் அனைவரையுஞ் சுயமாகச் சிந்திக்கத்தூண்டும் வகையிலேயே அவரது சொற்பொழிவுகளும் கலந்துரையாடல்களும் அமைந்திருந்தன. தனக்குத் தானே ''முடிவான அறிவு'' என்ற சங்கிலிப் பிணைப்பைப் போட்டுக் காலமெனும் மாயைக்குள் சிக்கிச் சிதறுண்டு கண்டதே காட்சி கொண்டதே கோலமென வாழ்ந்து, எவ்வித ஆக்கபூர்வமுமான அசைவுமற்று மந்தமாய் வாழ்ந்த மனிதனுக்கு அவ்வடிமைத்தளையிலிருந்து விடுபட ஜே. கே. யின் சொற்பொழிவுகள் பெரிதும் உத

(12ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய நம்பிக்கையில் இறுதி நாள்

இப் பூவுலகில் உண்டான ஒவ்வொரு படைப்பினத்துக்கும் அழிவு உண்டென்பது நிதர்சன உண்மையாகும். அதேபோன்று உலகில் மேன்மைமிக்க சிருஷ்டியான மனித வர்க்கத்துக்கும் இறுதி முடிவுண்டு. ''பிறப்போர் இறப்பது இயற்கையே'' என்பது முதுமொழியாகும். இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் மனிதனுக்கு இவ்வுலகில் வாழ்வு இருப்பது போல் மறுமையிலும் வாழ்வு இருக்கின்றது என்பது இஸ்லாமிய விசுவாசத்தில் ஐந்தாவது அம்சமாகும். இவ்வுலகில் வாழும் மனிதர்கள், அவர்கள் செய்து கொண்டிருந்த செயற்களுக்குரிய பிரதிபலன்களைச் சந்திக்கும் நாளே, 'இறுதி நாள்' என இஸ்லாமிய நம்பிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

''ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தை அடைந்தே தீரும். எனினும் உங்கள் [செயல்களுக்குரிய] கூலிகளை நீங்கள் பூரணமாக அடைவதெல்லாம் மறுமைநாளில்தான். ஆகவே [அந்நாளில்] எவர் நரக நெருப்பிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுச் சுவர்க்கத்தில் புகுத்தப் படுகின்றாரோ அவர் நிச்சயமாக [பெரும்] பாக்கியத்தை அடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கையில் மயக்கக்கூடிய [அற்ப] இன்பத்தைத் தவிர வேறில்லை''

[அல்குர் ஆன், அத்: 3, வச: 185]

மனிதகுலம் மரணத்திலிருந்து தப்புவதற்கு எவ்வித மாற்று வழிகளுமில்லை. இறைவனின் இயற்கையான அற்புத அமைப்புக்களில் இதுவுமொன்றாகும். பிறந்த மனிதர் இறப்பினை அடைந்தே தீர வேண்டும். அவர்களுக்கு இறுதி நாளிற்தான் நீதி வழுவாது இறைவனின் தீர்ப்புக்

அல்ஹாஜ் மௌலவி
கே. எம். எச்.
காலித்தீன்

கிடைக்கும். இறைவனின் தீர்ப்பே இறுதியானது நீதியானது என்ற நம்பிக்கையினை முஸ்லிம்கள் உறுதியாக ஏற்றுக் கொள்ள வேண்டிய கடப்பாடுண்டு.

இவ்வுலக வாழ்வைவிட, மறுமை வாழ்வு - மரணத்தின் பின்னுள்ள வாழ்வு மேன்மையானதும் நீண்டதுமாகும் என்பதில் முஸ்லிம்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். மனிதன் புரியும் நற்கிரியைகள் மூலம், மறுமையில் நல் வாழ்க்கைக்கான நற்பலா பலன்களைச் சேர்த்துக்கொள்ள முடியும் என்பதனை நபிகள் நாயகம் [ஸல்) அவர்கள் விளக்கியுள்ளார்கள். மறுமை வாழ்வில் வெற்றி பெற, இஸ்லாமியக் கடமைகளான, இறை விசுவாசம், ஐவேளைத் தொழுகை, ஏழைவரி என்னும் ஸகாத், ஒருமாத நோன்பு என்னும் விரதம், வாழ்க்கையில் ஒருமுறை வசதியும் சக்தியுமுள்ளவர்கள்மக்கா சென்று அங்குள்ள கஃபத்துல்லாஹ் என்னும் இறை ஆலயத்தில் ஹஜ் கடமையை நிறைவேற்றுதல் ஆகியவற்றை ஒழுங்காக நிறைவேற்றுவதன் மூலம் இறை திருப்பதியைப் பெறமுடியும் என்பது அல்லாஹ்வின் திருத்தூதர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் போதனைகளாகும். இதனை அவர்களும் நடைமுறைப் படுத்திக்காட்டினார்கள்.

அல்குர்ஆனில் இறுதிநாளின் முக்கியம் பற்றி அதிக இடங்களில் குறிப்பிடப்படுகின்றன. ''[நபியே!] எவர்கள் [இறுதிநாளில்] தங்கள் இறைவனிடம் [விசாரணைக்காக] ஒன்று சேர்க்கப்படுவோம் என்று பயப்படுகின்றார்களோ அவர்கள், [பாபத்திலிருந்து விலகி] பரிசுத்தவான்களாகும் பொருட்டு, அவர்களுக்கு நீர் எச்சரிக்கை செய்யும். அவர்களுக்கு [அந்நாளில்) உதவி செய்பவனும் பரிந்து பேசுவானும் அவனையன்றி [வேறொருவரும்] இல்லை. [நபியே!) இறைவனின் திருப்பொருத்தத்தை விரும்பி, காலையிலும், மாலையிலும் பிரார்த்தித்துக்கொண்டிருப்போரை நீர் விரட்டி விடாதீர்! அவர்களுடைய கணக்கிலிருந்து யாதொன்றும் உம்முடைய பொறுப்பாகாது. ஆகவே, நீர் அவர்களை விரட்டினால் அக்கிரமக்காரர்களில் நீரும் ஆகிவிடுவீர்.''

[அத்:6, வச: 51, 52] எனக் குறிப்பிடுகின்றது.

இறுதிநாளில் சுவர்க்கம், நரகம் உண்டு என்பதை விளக்கும் அல்குர்ஆன், சுவர்க்கத்துக்குச்செல்பவர்கள் இறைவனை வழிபட்டு நற்செயல் புரிந்தோர் எனவும், நரகத்துக்குச் செல்வோர் ஷைத்தானுக்கு [சாத்தான்] வழிபட்டு இறைவனின் கட்டளைகளுக்கு மாறு செய்தோர் என்றும் குறிப்பிடுகிறது. இதுபற்றிய ஓர் உதாரணத்தையும் அது தருகிறது.

'இப்லீஸ்' என்னும் ஷைத்தானிடம் முதலாவதாகப் படைக்கப்பட்ட மனிதருக்கு சிரம்பணியுமாறு இறைவனால் கட்டளையிடப்பட்டது. அதற்கு 'இப்லீஸ்' சிரம் பணிய மறுத்தான். காரணம் வினவப்பட்டபோது, அவன் நெருப்பால் படைக்கப்பட்டதாகவும், மனிதன் மண்ணால் படைக்கப்பட்டதாகவும், தன்னைவிட தாழ்ந்த ஒன்றுக்குச் சிரம் பணியமுடியாது என்றும் கூறி பெருமை பேசினான். அவனது பெருமைக்காக இறைவனின் சாபம் அவன்மீது உண்டானபோது இறுதிநாள்வரை தனக்கு அவகாசம் தரும்படி அவன் இறைவனிடம் விண்ணப்பித்தான். அது அவனுக்கு வழங்கப்பட்டது அப்போது தன்னை இறைவன் தாழ்வு படுத்தியதற்காக இறைவனின் படைப்பான மனித இனத்தை வழிகெடுக்கப்போவதாக இறைவனிடம் பெருமை பேசினான். அவனையும் அவனைப் பின்பற்றுவோரையும் இறுதி நாளையில் நரகில் புகுத்துவோம் என்று இறைவன் அவனுக்குக் கூறினான்.

ஆகவே இப்லீஸ் முதல் மனிதராகிய ஆதம் (அலை) (ஆதாம்) வழிகெடுத்தான் அதனால் ஆதம் (அலை) சுவர்க்கத்தில் இருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டது. இறைவனிடம் அவர் பாபமன்னிப்புக் கோரி அதனைப் பெற்றுக் கொண்டார். பாபமன்னிப்பு இறைவனிடம் மட்டுமே கேட்கவேண்டும் என அல்குர் ஆன் வலியுறுத்துகின்றது. ஒருவரின் சுமையை இன்னொருவர் சுமக்கமுடியாது. அவரவர் செயல்களுக்கு உரியவர்களே பொறுப்பாக இருப்பதால், இறுதிநாளின் தீர்ப்பின்போது அவற்றிற்குரிய பிரதிபலனை ஒவ்வொருவரும் தெரிந்துகொள்வர். பாபமன்னிப்புப் பெறவிரும்பும் ஒவ்வொருவரும் இறைவனிடம் பிரார்த்தனைமூலம் பெறவேண்டும் என்பது அல்குர் ஆனின் விளக்கமாகும்.

இறுதிநாள் எப்போது ஏற்படும் என நபியவர்களிடம் வினவப்பட்டதற்கு, அல்குர் ஆன் இவ்வாறு பதில் அளிக்கின்றது; ''(நபியே! விசாரணைக்) காலத்தைப் பற்றி— அது எப்பொழுது வரும் என- அவர்கள் உம்மிடம் கேட்கின்றார்கள், [அதற்கு] நீர் கூறும்; அதன் அறிவு இறைவனிடத்தில்தான் இருக்கின்றது. அது வரும் நேரத்தை அவனைத் தவிர மற்றெவரும் தெளிவாக்கவும் முடியாது. [அது சமயம்] வானங்களிலும் பூமியிலும் மகத்தான சம்பவங்கள் நிகழும். திடுகூறாகவன்றி [அது] உங்களிடம் வராது அதனை முற்றிலும் அறிந்து கொண்டவராக உம்மை அவர்கள் மதித்து, [அதனைப் பற்றி] உம்மிடம் கேட்கின்றார்கள். [அதற்கு] நீர் கூறும்: ''அதன் அறிவு அல்லாஹ்விடத்தில்தான் இருக்கின்றது. மனிதரில் பெரும்பாலோர் [அதனை] அறியமாட்டார்கள்.''

இறுதிநாளைப் பற்றிய பூரண அறிவும், முடிவும் இறைவன் வசமே உள்ளது என்பதை மேற்கூறிய கூற்று தெளிவு படுத்துகின்றது. அந்நாளில் மனிதர்கள் அனைவரும் ஒன்றுசேர்க்கப்படுவார்கள். அவர்கள் இவ்வுலகில் எவ்வாறான வாழ்க்கையினை மேற்கொண்டிருந்தார்களோ, அதற்கேற்றவாறு நீதியான தீர்ப்பு வழங்கப்படும் நாள் அதுவாகும். ஆகவேதான் ஒவ்வொரு மனிதரும் தனது இறுதித் தீர்ப்புநாளை எதிர்பார்த்தவராக இருக்கவேண்டும் என்பதை இஸ்லாத்தின் நம்பிக்கையான 'இறுதிநாள்' பற்றிய விசுவாசம் தெளிவு படுத்துகின்றது.

● தவக்காலத்தின் 2வது ஞாயிறு

# பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இணைக்கும் பாலம் இயேசு

இன்று மனிதன் தனது மாண்பையும் மதிப்பையும் இழந்த நிலையில் வாழ்க்கைப் போராட்டம் நடாத்துகின்றான். மனிதனது உருவானது சிதைந்த நிலையில் தனித்துவத்தை இழந்த நிலையில் பாதிப்பிற்குள்ளாகியிருப்பதை எம்மால் உணர முடிகின்றது. மாண்போடும் மகத்துவத்தோடும் வாழவேண்டும் என்ற அடிப்படையில்தான் கிறிஸ்து மனிதனுக்காக மண்ணிலே தன் உயிரை மாய்த்தார். இன்றைய நற்செய்தி வாசகமானது கிறிஸ்து மறுரூபமான சம்பவத்தை விபரிக்கின்றது. கிறிஸ்து தம்முடைய அன்புச் சீடரை அழைத்துச் சென்று தபோர் மலையில் தனது மாட்சிமையை மகிமையை மறுரூபமாகி வெளிப்படுத்தினார். அப்போது இரண்டாவது முறையாக ''இவரே என் அன்பார்ந்த மகன் இவருக்கு செவிசாயுங்கள்'' என்று தந்தையாகிய கடவுள் தன் ஒரே மகனை உலகிற்கு தானே அனுப்பியவர் என்பதை நிரூபித்தார். மறுரூபமான காட்சியிலே இயேசு எலியாசோடும் மோயீசனோடும் தனது யெருசலேம் பயணத்தைப்பற்றி கலந்துரையாடியதாக விபரிக்கப்பட்டுள்ளது. இயேசு பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் தொடர்புபடுத்தும் பாலமாக அமைந்துள்ளார் என்பது இதன் மூலம் புலனாகின்றது. கிறிஸ்துவின் மாட்சியும் மகிமையும் அவர் அடையவிருக்கும் சிலுவைச்சாவின் மூலம் தான் இறுதியில் புலப்படுத்தப்படும் என்பதை மறைமுகமாகத்தம் சீடருக்கு நினைவுபடுத்தினார் மனிதன் பலவிதமான அடிமைத்தனங்களிலும் தளைகளிலும் சிக்குண்டு தன்னுரு சிதைக்கப்பட்ட நிலையில் வாழ்ந்த போதுதான் கிறிஸ்து உலகின் சகல அடிமைத்தனங்களிலிருந்தும் விடுவிக்க தன்னுயிரை பணயமாக்கினார். இன்றும் மனிதன் தன்னுடைய சுயநலத்தினால், அதிகாரவெறியினால் செல்வத்தால் தனது மனிதத்தன்மையை இழந்து வாழுமளவிற்கு தள்ளப்பட்டிருக்கின்றான் எனவே இத்தகைய தாழ்வு நிலையிலிருந்து மனிதனை மீட்டு அவனுக்கு உண்மையான சுதந்திரத்தையும் மகத்துவத்தையும் அளித்து வாழ்வு கொடுக்கத்தான் கிறிஸ்து அவதாரம் எடுத்தார். ஒவ்வொரு மனிதனும் தன் அயலவனில் கிறிஸ்துவைக் காண்பதில் தான் அவனுடைய வாழ்வின்

வண, பிதா ஸ்ரனி அன்ரனி
[அ. ம. தி.]

நிறைவும் முழுமையும் தங்கியுள்ளது கிறிஸ்த்துவின் உருவையும் சாயலையும் தாங்கி வாழும் எம் சக ஜீவன்களுக்கு வாழ்வு கொடுக்க எம்மை கிறிஸ்துவைப் போல பலியாக்கும் போது வாழ்வின் அர்த்தத்தை உணருகின்றோம், சிலரின் ஆணவத்தினால், குறுகிய மனப்பாங்குகளினால் சுயநலமான அரசியல் சித்தாந்தங்களினால் சிதையுண்ட நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் மக்களுக்கு வாழ்வில் நம்பிக்கையும் ஒளியும் ஏற்றிவைக்கும் போது நாம் இன்னொரு கிறிஸ்துவாக மறுரூபமாகின்றோம். எனவே கிறிஸ்துவின் உருவைத் தாங்கி நிற்கும் மனிதனின் மாண்பை சிதைக்காது அனைது உருவிற்கு உரமூட்டி மிளிரச் செய்வது எம் அனைவரதும் கடமையாகும்.

## இன்று

மாதம் — மாசி
திகதி- 4 [1986 -02-23]
கிழமை - ஞாயிறு
திதி - சதுர்த்தசி முன் இரவு வரை
நக்ஷத்திரம் - ஆயிலியம் முன்இரவு வரை.

# இவ்வாரம் எப்படி?

### மேடம்

முயற்சியால்உயர்ச்சிஉண்டு. விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு. மேலதிகாரிகளின் ஆதரவுதாராளமாகக் கிடைக்கும். நண்பர்கள்மூலம் புதிய தொடர்பு ஏற்படும். தொழிற்துறையில் புதிய உத்வேகம் காணப்படும்.

### இடபம்

மறைமுகமாக நடத்தியகாரியம் ஒன்று அம்பலத்திற்கு வரலாம். குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். நண்பர்களும் காலை வாரி விடுவர். நிதானம் வேண்டும். மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும். கைத்தொழில் விருத்திக்கும் இடமுண்டு.

### மிதுனம்

குறுக்கு வழித்தலையீட்டால் சட்டத்தின் பிடியில் மாட்டிக் கொள்ள நேரிடும். திரைமறைவில் உங்கள் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும். பொறுமையைப் பேணி நடக்கவும். கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும். நிதி நெருக்கடியைத் தவிர்க்க மதிவழி நில்.

### கடகம்

கவலைகள் தாக்கும். கோபத்தை அடக்க முடியாமல் திண்டாடுவீர்கள். கொள்கையிற் கோணலால் நல்ல சந்தர்ப்பத்தையிழக்க நேரும். பிள்ளை [illegible] கொடுக்கும். அமைதியுடன் செயலாற்றவும்.

### சிங்கம்

இதயப்படுதாவில் இன்பக் கூத்து. கற்பதன்பயன்கைமேல் கிடைக்கும். நுட்பவேலைகளில் ஈடுபடுபவர்கள் பாராட்டப் பெறுவர். இன்னலின் பின்னல் சோர்வைத் தரலாம். புகழுக்கும் இடமுண்டு.

### கன்னி

குறை கேட்க நேரிடும். கடமையில் தடை தோன்றும். நஷ்டத்திற்கும் இடமுண்டு நாவடக்கம் நன்று. உடல்நலிவு தோன்றும். பிணிக்கு இடம் கொடாது நடக்கவும். மனையில் பூசல்கள் தோன்றி மறையும். தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும். நண்பர்களும் சூழ்ச்சி வலைவிரிப்பர்.

### துலாம்

அறிவுப் பசிக்குத் தாராளமாக விருந்து கிடைக்கும். ஆராய்ச்சிகளில் ஆர்வம் பிறக்கும் குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை தென்படும். புதிய வாகனம் கொள்வனவு செய்யலாம். வாகனச் சாரதிகள் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெறுவர். தொழிலாளர்களுக்கு மேலிடத்துச் சிபார்சும் கிடைக்கும்.

### விருச்சிகம்

குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்தாக இருக்கும். உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தை அளிக்கும். அடக்கம் வேண்டும். வசதிகள்பெருகும். வாழ்க்கையும் வளமாகும் புத்திரர் வழியாலும் புகழுண்டு. நண்பர்களிடமிருந்து வரவேற்பும் கிடைக்கும்.

### தனுசு

ஆயுத பீடைக்கு இடமுண்டு எதிலும்அவதானம் வேண்டும். வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம். எண்ணத்தின் தாக்குதல் நெஞ்சத்தைப் புண்ணாக்கும். பொறுமை வேண்டும் வயிற்றுக்கோளாறு தோன்றக் கூடும். உணவு விடயத்தில் அதிககவனம் செலுத்தவும். நண்பர் ஒருவருடன் மோதல் ஏற்படலாம் அமைதி நன்று.

### மகரம்

களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம் பெறும். காதலர்களுக்கு குஷியான வாரம். வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாகஇருக்கும். பிரமச்சாரிகள் வாழ்க்கையில் காதல் அரும்பும் பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். புத்திரர் வழியாலும் மகிழ்ச்சியுண்டு.

### கும்பம்

பணத்தைக் கொடுத்துப் பகையைச் சம்பாதித்துக் கொள்வீர்கள். தொழில்துறையிலும் சோர்வு தென்படும். நண்பர்கள் மூலம் புதியதொல்லைகள்தோன்றக்கூறும். நிதான புத்தியுடன் நடக்கவும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமல் வேதனைப் படுவீர்கள். பணத்துடன் பழகுபவர்களுக்கு மிகவும் எச்சரிக்கை வேண்டும்.

(12ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




[8]

கனவுகள் கனவுகளாகவே கலைந்து விடுகின்றன. திட்டத்தில் வாழ்வை மேற்கொண்டால் நல்லஎதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கையில் நிரந்தரமான திரை விழுந்துவிட்டது என்ற எண்ணம்தான் சகலரது உள்ளங்களிலும் நிறைந்து நின்றது. திட்டத்தில் உள்ள சிலர் விரக்தியால் தமதுகாணிகளை இரகசியமாக விலைக்கு விற்க ஆரம்பித்தனர்.

இப்பொழுதெல்லாம் பெண்களை அழைத்துக் கூட்டமெதுவும் கூட்டினுல் கனகலட்சுமி வருவதில்லை. யாராவது கூட்டத்துக்கு ஏன் வரவில்லையென்று கேட்டால், ''பூமணிஒரு கண்டறியாத தலைவி. அவ வேலை மினக்கட்டு கூட்டம்போடுவா. எனக்கு வேறை வேலை இல்லையே'' என்றுஇறு மாப்புடன் மறுமொழி கூறுவாள் அவள். கனகலட்சுமியின் தூண்டுதலால் கதிராசி மூன்று காணித்துண்டுகளை இரகசியமாக விலைக்கு வாங்கிவிட்டான். அவையாவு' கனகலட்சுமியின் காணிக்குப் பக்கத்தில் இருந்தன.

முழங்கேணியில் வேறு பெரிய கடைகள் இல்லாதபடியால் கதிராசியின் கடையில் வியாபாரம் அமோகமாய் நடந்தது. கனகலட்சுமியைக் கடையில் இருத்திவிட்டுஅவன் பூஞ்சோலைக்கு வந்து சகல பொருள்களையும் கொள்வனவு செய்துகொண்டு போவான். அலுப்பு இல்லாமல் முப்பது மைல் தூரம் சைக்கிளில் சென்று ட்டினத்தில் கொள்வனவு செய்தும் வருவான். அவனது கடையில் எந்தப் பொருளும் எப்பொழுதும் வாங்கலாம். கனகலட்சுமி

## குறுநாவல்

இனிக்கப்பேசி எந்தப் பொருளையும் யாருடைய தலையிலாவது கட்டிவிடுவாள்.

''நம்ம பாப்பா, வியாபார இரகசியத்தை நல்லாப் படிச்சிட்டா!'' —கதிராசிபெருமையாய்க் கூறிக்கொள்ளுவான்.

திட்டத்தில் இருபது பெண்களுக்குப் காணி ஒதுக்கிவிடப்பட்டும் இதுவரை அனுமதிப் பத்திரம் வழங்க ஒரு ஏற்பாடும் நடக்கவில்லை. அங்கத்தவர்கள் யாவரும் அக்காணிகள் தம்முடையவை தானே என்ற எண்ணத்தில் அனுமதிப்பத்திரத்தைப் பற்றியே கவலைப்படாமல் இருந்தனர். காணி பரிமாற்றம் செய்வது சட்டவிரோதம் என்பதை அறிந்தவர்கள் மிக இரகசியமான முறையில் பணத்துக்குப் பரிமாறிக் கொண்டனர்.

மூன்று வருடங்கள் மின்னலென ஓடிமறைந்தன!

இதற்குள்தான் எத்தனை மாற்றங்கள்!

அரசகேசரியின் விடாமுயற்சியால் பூஞ்சோலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு இயக்குநர் சபைக்கான தேர்தல் நடந்தது. சகல குறிச்சிகளிலும் கிளைகள் மூலம் அரசகேசரின் ஆட்களே தெரிவாகினர். தலைவர் தெரிவன்று எம்பியின் ஜீப் டீசலையும் செலவழித்துப் பூஞ்சோலையில் பரமலிங்கத்தின் தேவைக்காக ஓடியதுதான் மிச்சம். காசையும் பாராது செலவு செய்து இரண்டு முக்கிய அங்கத்தவர்களைக் கடத்தி, தேர்தலில் குழப்பம் ஏற்படுத்தப் பரமலிங்கம் எடுத்த முயற்சி கூட தக்க தருணத்தில் முறியடிக்கப்பட்டது.

அரசகேசரிக்குத்தந்திரமான முறையில் சிந்தனை ஓடியது. தன் ஆதரவாளர்களை உஷார் படுத்தியிருந்தபடியால் பரமலிங்கத்தின் நிலை படுதிண்டாட்டமாய்ப் போய்விட்டது. இறுதியில் அரசகேசரி தலைவராகத் தெரிவு செய்யப்பட்டான்.

''இப்பதான் நிம்மதி''—அரசகேசரி ஆறுதல் பெருமூச்சு விட்டான்.

★

மந்திரி ஐம்பத்து மூன்று பேருக்கு உத்தியோகம் எடுத்துக்கொடுத்தும், ஒரு குறிச்சிக்கு பஸ்சேவையை ஏற்படுத்தியும் கூட, பூஞ்சோலைத்தேர்தல் அவருக்குக் கைகொடுக்கவில்லை!

இத்தொகுதியில் அவர் கட்சி மண்ணையே கவ்வியது! அவரால்கூட வெற்றியை ஈட்ட முடியவில்லை— மந்திரியின் வெற்றியை மிகப்பெரிய அளவில் எதிர்பார்த்த அரசகேசரிக்கு இந்த அதிர்ச்சி தாங்க முடியாததாகிவிட்டது. ஆனுல் எம் பி. மறுமடியும் தனதுஆசனத்தைக் காப்பாற்றிக்கொண்டார். ஆயினும் பழையபடி பூஞ்சோலையில் தமக்குமுன்னர் இருந்த ஆதரவைத் தேடவோ வேறு பணிகளில் ஈடுபடவோ முயற்சி செய்யவில்லை. 'எத்தனையைச் செய்து கொடுத்திருப்பன்.. நன்றிகெட்ட னங்கள்...!'' இப்படி ஒட்டுமொத்தமாகச் சொல்லிவிட்டுப் பூஞ்சோலையிலிருந்து ஒதுங்கிய இருந்தார் எம். பி.

அரசகேசரி இப்பொழுது முழங்கேணித் திட்டத்துக்கு அடிக்கடி வருவதில்லை. பல ஆயிரக்கணக்கான பணத்தை விழுங்கிய அலுவலகம் உள்ளே தூசும் தும்புமாகக் கிடந்தது, எப்பொழுதாவது அங்கு சென்றுல் கனகலட்சுமியின் கடையில் நின்று கதைத்துவிட்டு சென்றுவிடுவான். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அவனுக்குத் தலைநிறையவேலைகள் இருந்தபடியால் மற்றைய விஷயங்களில் கவனம் செலுத்துவதில்லை.

கனகலட்சுமி பணத்தைச் செலவளித்துத் தனது காணியில் ஒரு குழாய்க் கிணறு அமைப்பித்தாள். காணி செழித்துப் பொலிவாக விளங்கியது.

திட்டத்தில் முதல் அமைத்த குழாய்க்கிணற்றின் மோட்டார் பழுதுபட்டபின் திருத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காத படியால் அது துருப்பிடித்தது.

அங்கு இணைக்கப்பட்டிருந்த எஸ்லோன் பைப் போனஇடம் தெரியவில்லை!

காணிகள் வெளியாருக்கு இரகசியமான முறையில் விற்கப்பட்டன.

ஆரம்பத்தில் திட்டத்தில் மாதர் சங்கத்தில் நிறைவேற்றிய தீர்மானத்துக்கு அமைய வீதி ஓரத்தில் இருந்த காணியைய் சங்க வேலைகளுக்காக பூமணி கேட்டிருந்தும் அது அத்தேவைக்குக் கொடுபடவில்லை. ஆனுல் அதில் இப்பொழுது அரசகேசரி தனது தங்கையின் கணவனைக் கொண் திருத்த வேலைகள் செய்விக்கின்றுன். கடை ஒன்று கட்டி விடப்போவதாகப் பேச்சு அடிபட்டது. திட்டம் முழுவதும் ஒரு அநாதைப் பிள்ளை மாதிரி ஒருவராலும் கவனிக்கப்படாமல் இருந்தது.

தேர்தலுக்குப் பின் மாற்று அரசாங்கம் பதவி ஏற்றதும் எத்தனையோ மாற்றங்கள்! வழமைபோல் முன்னைய அரசு ஆரம்பித்த சில திட்டங்கள் கைவிடப்பட்டன.

''பிரதேச அபிவிருத்தித் திட்டங்களை அவை வெற்றி அளிக்காத காரணங்களால் உடன் மூடி விடவும்!''

இருந்தாற்போல் இப்படியான ஒரு அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

'ஒரு சனியன் ஒழிஞ்சுது! மனுசனுக்கு நல்ல நிம்மதி..' அரசகேசரி மகிழ்ச்சி எய்தினுன்.

பூமணி மனதுக்குள் புழுங்கினுள். அவள் போன்றவர்களால் இதைத்தவிர வேறு என்ன செய்ய முடியும்.

★

''ஐயம்பிள்ளை பூமணி'' லிகிதர் அழைத்ததும் பூமணியின் நீண்ட சிந்தனைகலைந்தது.

உள்ளே சென்றுள்.

இதில் இரும்''
- மாவட்டக்காணி அதிகாரி கூறினுர்.

அவளது விபரங்கள் யாவற்றையும் ஒரு நீண்ட பத்திரத்தில் ஒவ்வொரு குறிப்பாக எழுதினுர்.

''பேமிற் தருவீங்களோ சேர்...?'' -பூமணி வெகு ஆவலுடன் கேட்டாள்

''பேமிற் தாறது பற்றி இப்ப ஒண்டும் சொல்ல முடியாது... ஓ சிலநேரம் பேமிற் தந்தாலும் தருவம். இப்ப நீ காணியில இருக்கிறுய் தானே ?'' எழுதுவதை நிறுத்தி விட்டு பூமணியின் முகத்தைப் பார்த்தார் காணி அதிகாரி.

''ஐயா !'' ஏதோ சொல்ல நினைத்தவள் அதை நிறுத்திக் கொண்டாள்.

''நான் காணியிலிருந்து தான் வாறன் ஐயா !''

''அப்படியென்றுல் சரி...! காணியை மட்டும் விட்டுப் போகாதை! இனி காணியை விற்கிற யோசனை இருந்தால் அதையும் இப்ப சொல்லிப் போட்டுப்போ... பின்னுக்குக் கரைச்சல் படாதை...! '' - மாவட்டக் காணி அதிகாரி இதைச் சொல்லிவிட்டுப் பத்திரத்தில் ஏதோ எழுதினுர்.

''நான் கடைசிவரை காணியை விற்கமாட்டன் ஐயா ... !'' — இதைச் சொல்லும் போது அவளுக்கு அழுகைதான் வந்தது. ஆனுலும் அழுகையை அடக்கிக் கொண்டாள். மெதுவாக எழுந்து வெளியே வந்தாள்.

பூஞ்சோலைக் கடைத் தெருவை நோக்கி நடக்கின்றுள். பதினெருமணி மன்னுர் குடி பஸ் வண்டியைப் பிடித்து அவள் முழங்கேணிக்குப் போக வேண்டும்.

அவள் மனம் கனத்திருந்தது!

[முற்றும்]

[பெயர்கள், இடங்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே]

## 'மின்சார மாந்திரிகன்'— எடிசன்

★ நா. செல்லப்பா

மந்திரதந்திரமோ, பள்ளிப் படிப்போ, வளாக வாசனையோ, மூலதனமோ, முதிசமோ எதுவுமின்றி, மின்சாரக் கண்டுபிடிப்புப் புகழ்ஏணியின் உச்சத்தை அடைந்து, மின்சார மாந்திரிகன் என்னும் பட்டத் பெற்ற ரி. ஏ. எடிசனின் பிறந்ததினம் இம்மாதம் 11-ம் திகதியாகும். விஞ்ஞான உலகில் அவர்புரிந்த அற்புதமான சாதனைகளுக்கு முக்கியமான காரணம், அவருடைய சுயாற்றலும், சுயமுயற்சியும் சுயநம்பிக்கையும், கூர்மையான புத்தியும், ஆழ்ந்த அவதானமும், எதையும் சீர்தூக்கிப் பரீட்சித்துப் பார்க்கும் இயல்புமேயாகும். 1300 புதிய கண்டுபிடிப்புக்கருவிகளுக்கு அவர் அமெரிக்க அரசிடம் பதிவுரிமை கோரியிருந்தார். அவற்றைபெல்லால் இங்கு பட்டியலிட்டுக் காண்பிப்பது இயலாத காரியமாகும்.

அவர்புரிந்த அற்புதசாதனைகள் தோட்டி தொடக்கம் தொண்டமான் வரைக்கும் பயன்படக்கூடியதாகஉள்ளன. வட இங்கிலாந்தைச் சேர்ந்த தாய்க்கும், ஒல்லாந்தைப்பிறப்பிடமாகக் கொண்ட ஏழைத் தந்தைக்கும் இடையே ஏற்பட்ட காதற்கலப்பு மணத்தின்பேருக எடிசன் 1847-ம் ஆண்டு மாசிமாதம் 11-ம் திகதி ஐக்கிய அமெரிக்காவைவைச் சேர்ந்த ஓகியோ நகரில் பிறந்தார் அவருடைய ஏழாவது வயதிலேயே அவரைப் பெற்றேர்பாடசாலைக்குஅனுப்பினுர்கள். வகுப்பு மாணவர்களுள் அவர் கடைசி இடத்தை படிப்பில் பெற்றுர். அவருடைய ஆசிரியர் அவரை— Addled— வெற்று மூளையன் என வருணித்தார். அவருடைய பள்ளிப்படிப்பு மூன்றே மூன்று மாதங்களுடன் முடிவடைந்தது. பின்பு தனது அன்னையிடம் வீட்டில் கல்விபயின்றுர். விரைவில் நன்றுக எழுத வாசிக்கக் கணக்கிடக்கற்றுக் கொண்டார். அன்னையர் அவருக்குப் பாலையும், பண்டையும், ஒன்றுகக் கலந்து ஊட்டினுர். இயற்கை அன்னையின் ஆசீர்வாதத்தால் அவர் விவேகமேதாவிலாசம் அடைந்தார்.

தன்னையே தனக்கு உதவியென்னும் இலட்சியத்துனும், தனது பெற்றேருக்குப் பாரமாக இருக்கக்கூடாதென்ற தெளிவுடனும் பத்திரிகை விற்பனைப் பையனுக வருமானம் பெறத்தொடங்கினுர். ஓடும் றெயிலில் பத்திரிகை விற்பனை செய்வதை ஒரு தனிக்கலையாகக் கருதினுர். பிரயாணிகளின் பாராட்டைப் பெற்றுர். வீண்விரயம் செய்யாது பணத்தை இயன்றளவு சேமித்து, ஓடும் றெயில் பெட்டியொன்றை நிரந்தரமாக வாடகைக்கு அமைத்து அதிலே தனது சொந்தமான ஒரு சிறு அச்சுக்கூடத்தை உண்டாக்கி சொந்தப் பத்திரிகை வெளியிட்டார். காலக்கிரமத்தில் அந்த றெயில் பெட்டியின் ஒரு பகுதியில் சிறிய இரசாயன பௌதிக ஆய்வு கூடத்தை ஸ்தாபித்தார். வேகமாகச் சென்ற றெயில் ஒருநாள்காத்திராப் பிரசாரமாகத் திடீரென நிறுத்தப்பட்டது. அந்த பிறேக் தாக்கத்தினுல் ஆய்வு கூடத்திலிருந்த தீப்பாஷாணத் துண்டுகள் [Phosphorus]வெளியில்வீசப்பட்டன அதனுல் ஒரு தீவிபத்து ஏற்பட்டது. இதைக் கண்டு கோபமுற்ற புகையிரதப் பாதுகாவலர் எடிசனுடைய காதுகளில் தனது கையைப் பொத்திப் பலமாகப் பலதடவைகள் அறைந்தார். அதன்விளைவு? அந்தோ! அவரை நிரந்தர செவிடனுக்கியது.

இதனுல் அவர் அதைரியம் அடையவில்லை. பாதகமான ஒரு சம்பவத்தைக் தனக்குச் சாதகமாக்கிய பெருமை அவருக்கு உண்டு ஒலி அதிர்வுகளைப் [Sound Vibrations] பற்றி ஆய்ந்த அவர் செவிப்புலன் கெட்டவிடத்து ஒலி அதிர்வுகளை மூளை எலும்புகள் மூலம் உட்செலுத்தி அவற்றைகேட்க உதவும் மின்கருவியைக் கண்டுபிடித்தார். கேளாதே கேட்கும் அற்புதத்தைச் செய்தார். இதைத் தொடர்ந்து ஒலியைப் பதிவு செய்யும் தட்டையும், அதனை மீட்டு எடுக்கும் கிராமபோன் யந்திரத்தையும் கண்டுபிடித்தார். இவை சங்கீத உலகுக்கு வரப்பிரசாதமாக அமைந்தன. அத்துடன் கிறஹாம் பெல் கண்டுபிடித்த தொலைபேசிக்குத் தெளிவான ஒலிபெருக்கும் சாதனத்தையும் புதிதாக அமைத்து உதவினுர்.

இதன்பின்பு ஒலி உலகை விட்டு ஒளியுலகில் தனது விஞ்ஞான ஆய்வுகளை ஆரம்பித்தார். மின்னெளியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். பலவிதமான மெல்லிய உலோகக் கம்பிகள் ஊடாக அளவான மின் சக்தியைச் செலுத்திப் பார்த்தார். அவைகள் யாவும் வெப்பத்தினுல் செந்நிறமாக மாறி வெந்து சாம்பராயின. வெளிச்சம் கொடுக்கவில்லை. பின்புஉலோகக் கம்பிகளைவிட்டு தையல் நூலில் தடித்த கரிக் குழம்பைப் பூசி, ஒரு நிக்கல், [Nickel] அச்சிலிட்டு வளைய வடிவில் நெருப்பில் வேக வைத்தார். வெந்த கரி நூல் வளையத்தை நிக்கல் அச்சிலிருந்து பத்திரமாக உடைந்து போகாது எடுத்து அதனூடாக அளவான மின்சக்தியை செலுத்தினுர். என்ன ஆச்சரியம்! அது பிரகாசமான வெளிச்சத்துடன் எரிந்தது. ஆனுல் அந்த வெளிச்சம் அதிக

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதிப்பதியில் திருவாசகதானம் வழங்கும் சுவாமிகள்

சிவபூமியாய்த் தெய்வ மணங்கமழும் நம்நாட்டுச் சினகரங்களுள் பாடல்பெற்ற தலம் திருக்கேதீஸ்வரம். சோழப்பெருமன்னர் காலத்திலும் சோபிதத்தோடு திகழ்ந்தது. ஆரூரரும் ஆளுடைய பிள்ளையும் பதிகம்பாடிய க்ஷேத்திரம் இது. கதம்பநதியெனப் பண்டு வழங்கி இன்று அருவியாறென அழைக்கப்படும் நதியின் பாலாவிக்கிளை சங்கமமாகும் இடப்பகுதியில் இவ்வாலயம் அமைந்துளது. மாந்தை, மாதோட்டம் பெயரளவில் வேறுபடினும் இடத்தால் மாறுபடாது தன்னெழில் மாற்றுக்குறையாமல் வானுற வளர்ந்த கோபுரத்தினுட் பொருளாய் அம்மையப்பன் எழுந்தருளிய கோட்டம் தொன்மையானது. மாதுவட்டாவுக்கும் மாதோட்டத்துக்கும் வேறுபடுத்த முடியாத பிணைப்பு உண்டு. இதை வங்கம் மலிகின்ற மாதோட்டம் எனப்போற்றும் திருமுறை மாசந்தையாயும் துறைமுகப் பட்டினமாயும் திகழ்ந்தது மாந்தை. மேலை கீழை நாடுகளுடன் வணிகத் தொடர்பால் நெருங்கிச், செழிப்புற்றிருந்த மாந்தை இன்று பெயரளவில் நிற்கிறது. சங்க இலக்கியங்களின் மாந்தைக்குத் தனியிடமுண்டு.

''இரைதேர் நாரை யெய்
திய விடுக்குந்
துறை கெழுமாந்தையன்ன
திவணலம்''
'குட்டுவன் மாந்தையன்ன'
[சங்கநூல்]

ஏடுகளில் இடம்பெற்ற மாந்தையில் மன்னர் முத்துக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. மாந்தை முத்தங்கள் என்னும் பிரயோகம் புலவர் நாவில் நடமாடியுள்ளமையை சங்கநூல்களில் பரக்கக் காணலாம். இவ்வாறு புகழ்பூத்த புண்ணிய பூமியைநாடி ஓடி வந்தார் ஒருவர்,

இராமேச்சுரத்தில் இருந்து சிதம்பரத்துக்கு நடந்த பக்தி வைராக்கிய சிந்தையுள்ளவர். பலமுறை மாணிக்க கங்கையைத் தேடிப் பாதயாத்திரையும் செய்திருக்கிறார். பழுத்த அனுபவமும், பக்தி வீறும், ஆத்மீக தாகமும், விடுதலை நாட்டமும் இழுத்துச்சென்றமை யாலோ என்னவோ, கேடிலாத கேதீச்சரத்தை அடைந்தால் பாவம் வினையறுப்பான் பாலாவியின் கரைமேல் இருப்பவன் என்ற நம்பிக்கையொளியில் பாதை பிடித்து விரைந்தார். தேவன் எனை ஆள்வானென்று - அத்தலத்திலேயே தங்கிவிட்டார். இது நடந்தது சுமார் நான்கு தசாப்தங்களுக்கு முன்னாய் அமையலாம். அன்றி ஐந்தாயுமிருக்கலாம்.

ஏதோ கீதாவாக்கின்படி முடிந்த தொண்டாற்றிக் கொண்டிருந்த அந்த மஹாநுபாவர் கோயில் தென்பாரிசத்தில் ஓராலநீழலில் குடிசையமைத்து, மேலுமொருபடி தன்னையர்ப்பணித்தார். பிறருக்காக பரநலத்தோடு பக்குவவாழ்வு மேற்கொண்டார். நெட்டையான உறுதியுள்ள தோற்றம். இடுப்பிலே வெண்மையான வேட்டி தோளிலே சால்வை நறுக்கிவிட்டாலன்ன பல்வரிசை கையிலே திருவாசகம். மெய்யிலே விபூதி, மடியிலே வெற்றிலைச் செல்வம். பேச்சிலும் - மூச்சிலும் மணிவாசகம் முகத்திலேகளை. மனத்திலே தேடுதல் வேட்கை மறந்

ஆழ்கடலான்

தும் புறந்தொழாவாழ்வு. சாத்திரங்கள், தோத்திரங்கள், புராணங்கள் தெரிந்தும் காட்டிக் கொள்ளாத அடக்கம். வாதவூரடிகள் புராணத்தை அநுபவித்து, வாசகத்தைத் தாரகமாய்க்கொண்ட இலட்சியம் பாவெனப்படுவது அவன்பாட்டே [திருவாசகம்] என்ற இறுமாப்புடன் கூடிய ஈரமும் வீரமும் கொண்ட துறவுநிலை.

உணவு போட வேண்டுமே, கறவைகள் வளர்த்தார். கமம் செய்தார். காளை கொண்டு உழுதார். வண்டில் வைத்து ஏற்றி இறக்கினார். அடியார்களையும் அன்பர்களையும் ஆதரித்தார். பழைய அடியார்களின் பரிசத்தால் பரிமள புஷ்பமலராய் மகிழ்ந்தார். ஒரேதிருப்தி, உணவைக் குழைத்து வழங்கி குழைத்த சொன்மாலையையும் கலந்து பரிமாறினார். செவிக்குணவு கிடைத்தது. பசிக்குணவை மறந்தார்கள் அடியார்கள். அன்னருளத்திலே திருவுடைய கருவொன்று அரும்பியது. அதுதிருவாசக மடமாய் மலர்ந்து மணங்கமழ்கின்றது. இதிலிருந்தே அவருடைய திருவாசக உறைப்பை உணரமுடிகிறது அன்றோ.

அருட்செல்வம் முதற்செல்வம் பொருளும் பூமியும் அருளுடனிணைந்து திருமாலின் சக்திகளாயின. எல்லாமவனுக்கே அர்ப்பணமென்றவனுக்கு அ-பயம், பயமில்லை.

அருட்செல்வர் அருளம்பல சுவாமிகள் மகாகவி பாரதியின் குருவானவரிசையில் அவரைப் பாரதியார் ''தேவி பதம்மறவாததீரஞானி'' என்று பாடினார். மகாயோக சுவாமிகளும் தன்குருநாதனை ''செல்லப்பனென்ற சீமான்'' எனவாய்நிறையப்பாடியுள்ளார். இவர்களுடைய பாததூளியில் மிதித்தவர் திருவாசகச் சுவாமிகளெனப் பிரபந்தங்கள் போற்றும் சபாரத்தினச்சுவாமிகள். தொண்டர்-தொண்டர் - தொண்டர் தொண்டரென்ற சடகோபரின் வாக்குப்படி தொண்டரடிப்பொடியான திருவாசகச் சுவாமிகளை இருபிரபந்தங்கள் போற்றியுள்ளன. இவ்விருநூல்களையும் தந்தவர்கள் பொன் கொடுதீவைப் [இதுவும் பெயர் யோகர் சுவமிகள் சொன்னபெயர் புங்குடுதீவுக்கு] பிறப்பிடமாகக் கொண்டவர்கள். ஒருவர் பெரும்புலவர் ச. இ. சதாசிவம்பிள்ளை அவர்கள். மற்றவர் பக்திமான் வித்துவான் ஆறுமுகம் அவர்கள். இதோ திருக்கேதீச்சரநாதர் கிள்ளைவிடுதூதில் ஒருபாடல்.

'ஆரும் பெருந்தவத்தோன்
அன்புருவோன் - ஈரநெஞ்
சன்
தெய்வ நலஞ்சேர் திருவாச
கச் சாமி
செய்ய சபாரத்தினத்தாள்
சென்று பணிந்துய்யத்திரு
திருவாசகமடந்தைச்சார்.

மழைகூட ஒருநாளில் தேனுகலாம் என்னும் கவிஞன் வாக்குக்கு இலக்கியம் தான் சுவாமிகள். தேனுறுமுட்டி மோதிக்கொண்டு வேகவதியாய்ப் பாய்கிறது, எங்கே தொட்டாலும் பட்டாலும் நக்கினாலும் தேன்தானே. அஃதேபோலத் தெவிட்டாத தேன் ஆன திருவாசகத் தேன் மழை பொழிகிறது - சபாரத்தின மென்னும் கார்முகில் செவிவழி சிந்தைவாய்ப் பாய்ந்து ஊனும் உயிரும் கலந்து உவட்டாது இனிக்கிறது. தான் பெற்ற இன்பம் தம்மவர் பெறவைக்கிறார். பேசிப்பேசி நாத்தழும் பேறியும் ஏறவில்லையே என்ற அங்கலாய்ப்பு. தேனுக்குளின்பம் சிறந்தாற்போல் வாசகத்தின்பம் அவர் வாக்கிற் கேட்பதும் பேரின்பமும் பாக்கியமுமாகும். திருவாசகச் சுவாமிகள் நம்மோடு உறவாடும் செல்வம்.

நீதிபதி யொருவன் ஆசனத்திலிருந்து இறங்கிவந்து யாவருடனும் உறவாடி வழக்குக்குமுடிவும் விடிவும் காண்பது போல நீதியே வடிவான செல்வச்சந்நிதி முருகனும் அடியார் துயர் களைகிறான் இப்புனித மண்ணின் தென்கோடியிலமைந்த ஆனந்தாச்சிரமத்தில் சபாரத்தினம் சுவாமிகள் கடந்தசில ஆண்டுகளாகத் தங்கியிருந்து திருவாசகமழை பொழிகிறார்கள். தன்னை அடுத்த அன்பர்கட்கு. தவத்திரு மயில்வாகனம் சுவாமிகள் அவரிலே ஆராத பக்தி பூண்டவர்.

''ஸ்வம்' என்றால் சொத்து. உடமை என்று அர்த்தம் ஸ்வாமி யென்றால் சொத்துக்குரியவன் உடைமையாளன் என்று பொருள். மகான் இராமானுஜர் திருவாய் மொழியிலே ஊறிய வள்ளல். அவரை உடையவர் என்றே அழைப்பர். திருவாய் மொழிக்கு ஒப்பானது திருவாசகம். திருவாசத்தை உடைமையாய்க் கொண்டவரைத் திருவாசகஸ்வாமி என்றழைப்பதும் சாலப் பொருத்தமே. மாணிக்கவாசகர் தந்த வாசகத்தில் 51 பதிகங்கள் 656 திருப்பாடல்கள். பண்சுமந்த பாடல்களவை மண்சுமந்தவன் கைப்பட எழுதியவை. இப்பெருமையை

''பண்சுமந்த பாட்டினுக்
கும் பாவைதந்த பிட்டினுக்
கும்
மண்சுமந்த சோதி மணி
முடியும்'' என்று தமிழ்விடு

தூது பேசுகிறது. திருவாசகத்தை எழுத்தெண்ணிப் படித்து, அகப்பொருளாக உரைபேசுபவர் இன்றும் திருவாசகமும் கையுமாய் விளங்குகிறார். கதிர்காமத்தில் கிடைத்த காவியாடையும், உருத்திராக்கமும், வெண்தாடியும் பொலிய சிவவேடத்துடன் திகழும் அவர் பிள்ளைப் பாசத்துடன் எல்லோருக்கும் திருவாசக அருளமுதம் அள்ளியள்ளியளிக்கிறார், [illegible]

## ஒரு தூபி கண்ணீர் வடிக்கிறது

யாழ். மக்களின்
நிலைகண்டு
வானளாவிய
மணிக்கூண்டு
செயலற்று நிற்கையில்-

மாபெரும் நூலகம்
தன் செல்வங்கள்
நாலாபக்கமும்
சிதறடிக்கப்பட்டு
சோகத்தில் உறங்குகையில்-

திறந்த வெளி யரங்கு
கலைநிகழ்ச்சிகளின்றி
மூடிய கதவுப் போர்வையில்
துயரில் ஆழ்ந்திருக்கையில்-

நெடு நெடு என
உயர்ந்ததோர் தூபி
இவற்றைப் பார்த்து
பனிக்கால விடியலில்
மௌனமாகக் கண்ணீர்
உகுக்குகிறது!

— ச ம. அச்சுதன்

## கடலும் அலையும் -- 8

கசப்பான மாத்திரைகளுக்குப் புறப்பூச்சு வேண்டியிருக்கிறது. ஆதலால், தயாரிப்பாளர்களும் நாவுக்கு இதம் அளிக்கும் புறப்பூச்சான அமிர்தத்தைச் சேர்த்து விடுகின்றனர். இது போன்று, கரவுள்ளம் பொருந்திய வஞ்சனையாளரும், நுனிநாவில் அமிர்தம் தோய்த்துக் கொள்வதால் அவர்தம் உள்ளத்தில் இருக்கும் கசப்பான நஞ்சு வெளித்தெரிவதில்லை. மாத்திரையில் தோய்ந்த அமிர்தம் நன்மை புரிய; இவர் நாவில் தோய்ந்த அமிர்தமோ கேட்போர் செவியில் நல்லதான உணர்வைத் தந்து கரவை மறைத்துப் பெரும் தீங்கை விளைவித்துவிடுகிறது.

யாகக் கொள்ள வேண்டும்'', ''காலத்தினாற் செய்த நன்றி அருமையுடையது'' என்றெல்லாம் எண்ணும் பண்பு இவரிடத்துக் கிடையாது. ''நன்றி கொன்றவர் உய்வடைய மாட்டார்'' என்பதிலும் நம்பிக்கையில்லாதவராகவே இருப்பர். இவர்களிடத்து நீதி செல்லாது. மற்றையோராலேயே தாம் உயர்ந்தோம் என்பதனையும் மறந்து விடுவார். தம்பழைய நிலையை மீட்டுப் பார்க்கும் திறன் இல்லாமலும் இருக்கும். எம்மிடத்தில் ஒரு காலத்தில் அன்பாய் இருந்து தம் வாழ்நாளின் காலத்தைத் தந்தவர்கள் தம் உயர்வையே

### மென்மைப் பண்புகளும் உறவுகளும்

அன்புள்ளவர் — என்மேல் நல்ல அபிமானமுடையவர் இவரென நம்பிப் பழகுவோரை வஞ்சனையாளர் ஒருவர் தன்வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக் கொண்டு உறவு தேய்ந்து தொடர்பு குறைந்து விட்டதன்பின், இப்பொழுது இவனாற் பயன் இல்லை. என்பது போன்ற ஒரு சில காரணங்களுக்காக மறை முகமாகவோ நாலு பேர் முன்னிலையிலோ தூற்றுதல் காண்கின்றோம். பகைத்

வட்டூர் எம். என். கடம்பேசுவரன்

துப் பிரிந்து விட்டாலோ, மிகவேகமாகப் பல்வேறு உருவில் தாக்குதலையும் காண முடியும். உயர்ந்ததோர் கேண்மை பிரிந்த காலத்திலும் தீங்கு தராது. ''பகையான காலத்திலும் பாடு பெற்றது இவர் கேண்மை'' ''அற்றம் மறைத்தது இவர் கேண்மை''. இவர்கள் உடனிருக்கும் போது உவப்பாகவும் நாலு பேர் முன்னிலையில் தூற்றாத உயர்வும் உடையவர்கள்.

இழிந்தோரான வஞ்சனையாளர், தொடர்பு குறைந்த போதே தூற்றத் தொடங்கி விடுவர். ''தினைத்துணை நன்றியானாலும் பனைத்துணையின் மணிவார்த்தை பேசி இருந்தெம்மை ஆளும் இறையடியைச் சிந்தித்துப் பிறப்பறுப்போம். எம்மோடு ஒட்டி உறவாடும் சுவாமிகளிடம் திருவாசகம் கேட்டுச் சிந்தை குளிர்வோமாக.

மறந்து எமக்காகச் செயற்பட்டவர்கள் அவர்கள் என்றெல்லாம் எண்ணிப்பார்க்க மாட்டார் இந்த இழி பிறப்பாளர். இவர்களுக்கு நன்றி செய்தல் எங்ஙனம் பொருந்தும்? இதனைத் போலும் வள்ளுவரும்.

''நன்று ஆற்றல் உள்ளும்
தவறு உண்டு அவரவர்
பண்பு அறிந்து ஆற்றாக்
கடை'' என்றார்.

மனிதப் பிறவி நன்று செய்யவே உண்டானது என்றாலுங் கூட நன்றி பாராட்டத் தெரியாத பண்பிலார்க்கு உதவுதல் கேடுதரும். பண்பிலாதவர் படித்தவராக இருந்தாலும் [தகவல்களைத் தெரிந்தவராக - Facts] கல்விப்பயனில் நம்பிக்கை இல்லாதவர்கள். தம் குறிக்கோளின் நிறைவுக்காகத் தாம் அறிந்த தகவல்களைச் சாதகமாக்கிப்பயன் படுத்துவார்கள். தம்மை நியாயப்படுத்துபவர்களும் இவர்களே! இவர்களிடத்துள்ள அறிவு வெறும் தகவல்களாகத் தானிருக்கும். புடமிடப்பட்டுச் சிந்தனை வயப்பட்டதாக இருக்கமாட்டாது. இத்தகையோரைப் பார்த்துப் படித்திருந்தும் பிழை விடுகின்றாயே! என்று மற்றையோர் இழித்துரைப்பர். படித்திருந்தும் பிழைவிடுவதால், கல்விப் பயனாகிய நீதியில், அறத்தில் நம்பிக்கையில்லாதவர்கள் என்பது பெறப்படும். கல்வியால் வாழ்வியல் உணரப்பட வேண்டும். வேற்று நோக்கத்தை மட்டும் ஈடேற்றக் கல்வி பயன்படக் கூடாதன்றோ!



முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் ஸ்டொக்டன் பிரபு ஹரோல்ட் மாக்மில்லன் லண்டனில் தமது சொந்த உருவப்படமொன்றின் திறப்புவிழாவில் உரையாற்றுகிறார். இலங்கைத் தமிழரும் இளம் ஓவியருமான காண்டீ வைகுந்தவாசனால் இவ்வுருவப்படம் வரையப்பெற்றது. இப்படத்தை வேல்ஸ் இளவரசர் திறந்து வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையும் பண்டைத்தமிழ் இலக்கியமும் - 2

## புறத்திணைப் பாடல்களில் பனை

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
மனோன்மணி சண்முகதாஸ்

பனங்கருக்கினாலே செய்த குதிரையை அழகு செய்யப் பலவித மலர்கள் பயன்பட்டன. நீலமணி போல நிறத்தையுடைய பீலியையும், பூளைப்பூவையும், ஆவிரம்பூவையும் எருக்கம்பூவோடு தொடுத்துக் கட்டிய மாலைகளால் மடல்மா அலங்கரிக்கப்பட்டது. உயிரற்ற குதிரையாகப் பனங்கருக்கு உருவெடுத்து காதல்வயப்பட்டவனைத் தாங்கிச் செல்கிறது. இது அவனது இறுதி முயற்சியாக அமைந்ததெனலாம். தன் எண்ணத்தை எல்லோரும் அறியச் செய்து பெண்ணைக் கொள்ளும் பெருமுயற்சி தமிழர் அகவாழ்வில் தனித்துவமான பண்பும் எனலாம்.

### புறவாழ்வு நிலையில்:

மனிதனின் வீட்டுவாழ்க்கை அகவாழ்வாக, வெளிவாழ்க்கை புறவாழ்வாக அமைந்தது. போரும் அது சம்பந்தமான நிகழ்வுகளும் புறவொழுக்கம் எனப் புலவர்களால் விளக்கப்பட்டுள்ளது. போர்க்களத்திலே உள்ள யானைகளின் துதிக்கைகள் பனைமரத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளன. ''பனை மருள் தடக்கை'' எனப் புறநானூற்றுப் பாடலொன்று யானையின் பெருங்கையை வர்ணிக்கின்றது. பனையின் உயரமும், கருமை நிறமும் வலிமை படைத்த யானையின் துதிக்கையுடன் பொருந்தி நிற்கின்றன. அகநானூற்றுப் பாடலொன்றும் யானையின் துதிக்கையினை ''திரள்பனையன்ன பருஏர் எறுழ் தடக்கை'' என வர்ணித்துள்ளது. பனையின் வலிமையான தோற்றம் புலவன் கண்ணில் நிறைந்து யானைக்கு உவமையாகிற்று. வலிமைநிலையிலே பனை மரமும் யானையின் துதிக்கையும் ஒன்றுபட்டு வீரம் விளக்குகின்றன.

யானை, உருவத்தால் மிருகங்களுட் பெரியது, பனை உருவத்தால் நெடுமையானது. யானையின் வலிமை பனையைய முறிக்கும் ஆற்றல் கொண்டது. மாமூலனார் என்ற புலவர் புறக்காட்சிநிலையிலே இதனைத் தனது பாடலிலே பதிவு செய்துள்ளார்.

''வேனில் வெற்பில் கானங் காய
முனையெழுந் தோடிய கெடு நாட்டாரிடைப்
பனை வெளிறு அருந்து பைங் கண் யானை [அகம்;187]

வேனிற்காலம் வெப்பத்தினால் காடுகள் அழிகின்றன. அக்காடுகளிலே குடியிருந்த மறவர்கள் எல்லோருமே குடியெழும்பிச் சென்றுவிட்டனர். இடமே பாழ்பட்டுக் கிடக்கிறது. அங்கே யானைகள் தான் வாழுகின்றன. அவற்றிற்கும் உணவில்லை. அருகே வளர்ந்திருக்கும் பனைகள்தான் எஞ்சியுள்ளன. உண்ணுவதற்குத் தழைகள் கிடையாமல், பசிமுற்றிய யானைகள் பனையிலே உணவு காண்கின்றன. ஓங்கி உயர்ந்து வளர்ந்திருக்கும் பனைகளை முறித்துப் போடுகின்றன. வைரமான பனந்துண்டங்களை உடைத்து உள்ளிருக்கும் வெளியசோற்றினை உண்ணுகின்றன. பசியைத் தீர்க்க வலிய பனைமரத்தையே அழிக்கும் யானைகள் வலிமை பெரியது. பனைமரத்தின் உள்ளே இருக்கும் சோறு வெண்மையானது. ஈரலிப்பானது. அதனை யானைகள் உண்டு பசியாறுகின்றன. வறண்ட நிலத்திலே வளர்ந்து நிற்கும் பனைகள் மிருக உணவாகவும் பயன்படுவது புலவர் மனதைத் தொட்டுப் பாடலாயிற்று. பனஞ்சோற்றை உண்டயானைகள் பசியாறித் தூங்கும் காட்சியையும் புலவர் காட்டுகின்றார். யானைகள் துயிலும்போது கையையொடுக்கிக் கொண்டு அசைந்த வண்ணமே துயிலும். அவை விடியற் காலத்திலே கடலில் பரதவர் தங்கியிருக்கின்ற தோணிகளைப் போலத் தோன்றுகின்றன. பனைமரம் வளந்தரும் நிலையை சங்கப் பாடல் காட்டும் பண்பு இது.

இரும்பனையன்ன பெருங்கை யானையின் செயல்கள் பனையோடு வேறு நிலையிலும் ஒப்பிடப்பட்டுள்ளன. கூட்டமாக நிற்கின்ற யானைகளை நோயுற்ற பனைகளின் தோற்றத்தோடு ஒற்றுமை காண்கிறார் கல்லாடனார் என்னும் புலவர்

.........
கோடையில்
குருத்திறுபு உக்க வருத்தம் சொலாது
தூம்புடைத் துய்த்தலைக் கூம்பு திரங்கிய
வேனில் வெளிற்றுப்பனை போல கையெடுத்து
யானைப் பெருநிரை வானம் பயிரும் [அகம்: 333]

கோடை காலத்திலே வெப்பத்தின் தாக்கத்தினால் குருத்து இற்று விடுதல் பனைமரத்திற்கு ஏற்படுகின்ற ஒரு வருத்தமாகும். அப்போது அவ்வாறு நோயுற்ற பனைகள் துளையையுடைய பஞ்சு பொதிந்த தலையுடனும் சுருங்கி வற்றிய கோலத்துடனும் நிற்கும். அநேகமாகக் காழ்ப்பு முதிராத இளம்பனைகளே இத்தகைய நோய்க்குள்ளாகின்றன. அவற்றின் தோற்றம் யானைகள் துதிக்கையை உயர்த்தியவாறு செல்லுவதை ஒத்திருக்கின்றது. இங்கு புலவர் நோயுற்ற பனைகளை ஊன்றிக் கவனித்ததை உணரலாம். வெப்பமான காலங்களிலும் வாடிவிடாமல் வாழக்கூடியது பனைமரம். ஆனல் நோயுற்றால் அதுவும் வற்றி வாடிவிடும் தன்மையுடையது. செல்லும் வழியிலே நிற்கும் பனைமரங்களை மரங்களெனத்தள்ளி விடலாகாது. அவற்றை மனிதராகவே நோக்கவேண்டும். யானைகளின் கூட்டத்தைக் காணவிட்டாலும் பனையின் கூட்டத்தை நாம் காணமுடியும். புலவர் பாடல்களில கற்பனையாக அன்றி உண்மைக் காட்சியாகக் குருத்தொடிந்த கோலமுடைய பனைகள் நம் கண்ணிலே தெரியும்.

மதுரை மருதனிளநாகனார் என்ற புலவர் இன்னொரு காட்சியினைத் தமது பாடலிலே காட்டியுள்ளார். யானையின் சினம், பனையின் காட்சியை அவருக்கு ஞாபகப்படுத்துகின்றது. மாலை நேரத்திலே வழி நடந்து செல்கிறது யானை ஒன்று. அதன் பாதையிலே வழியில் வீரத்தின் அறிகுறியாக நட்டுவைத்த நடுகல் படுகிறது. அது வெறும் கல்லாகத் தோன்றவில்லை. உண்மையான மனிதனாகவே தோற்றுகின்றது. யானை கண்டதும் தன் காலால் மனிதனாகவே எண்ணி உதைக்கின்றது. கல்லில் பட்ட காலின் நகம் பெயர்ந்து ஒடிகின்றது. அந்தக் காட்சி பெயர்ந்து விழுகின்ற நகம் கரிய பனை நுங்கினது தோடு போலத் தோன்றுகிறது. பாவம் யானை தன் வலிமையின் செருக்கினால் நகம் இழந்து வருந்துகின்றது. போர்க்களத்திலே முன்னர் நட்ட நடுகல் வீரத்தின் அறிகுறியென்பது. யானை அறியாதது. இரும்பனை நுங்கின்தோடு போல தனது கால் நகம் இலகுவில் கழன்றுவிடும் என்பதையும் அந்த யானை உணரவில்லை.

'சினவல் போகிய புன்கண் மாலை
அத்தம் நடுகல் ஆளென உதைத்த
கானயானைக் கதுவாய் வள்ளுகிர்
இரும்பனை இதக்கையின் ஒடியும்''
(அகம்: 265)

பனை நுங்கினது பண்பு ஒடிந்த யானையின் நகத்தை விளக்குகின்றது. கருமை நிறத்தினையுடைய நுங்கு வெளிய தோடுகொண்டது. மாலைக் கருக்கல் யானையை வெருளச் செய்தது. வீரத்தை அது வீணுக்கி விட்டது.

வீரத்தின் சின்னமாகவும் பனை பயன்படுத்தப்பட்டுள்ளது. புறநானூற்றிலும் பரிபாடலிலும் பனை, கொடிகளிலே பயன்பட்டசெய்தி காணப்படுகின்றது மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாண்டி வேந்தனாகிய இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப்பாடியவர். அம்மன்னனைப் புறநானூற்றுப் பாடலில் புகழ்பெற வைத்துள்ளார். அவன், உலகங்காக்கும் நால்வராகிய மணிமிடற்று இறைவன், பலராமன், திருமால், முருகவேல் ஆகியோருக்கு ஒப்பாக உள்ளான் எனப்பாடியுள்ளார்.

''அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடியோனும்'' எனப் பலராமனது வெற்றிக் கொடியையும் பாடலிலே சுட்டிக் காட்டுகிறார். பனைமரம் எழுதிய கொடி பலராமன் வீரக் கொடியாய் விளங்கியுள்ளது. கலப்பையையும் பனைக்கொடியையும் உடைய பலராமனைப் பாண்டியனும் ஒத்திருந்தான் என்கிறார் நக்கீரனார்.

காவிரிப்பூம் பட்டினத்து காரிக்கண்ணனார் என்னும் புலவரும் பலராமனது பனைக்கொடியைத் தமது பாடலிலே குறிப்பிட்டுள்ளார். புறநானூறு 58-ம் பாடலிலே'' பானிறவுருவிற் பனைக்கொடியோனும்'' என்னும் அடி இதனை உணர்த்துகின்றது. மரநிலையிலேயன்றி உருநிலை எழுதிய கொடியாகவும் பனை புகழ் பெற்றுள்ளது மன்னர் போர்க்களம் செல்லும் போது தத்தம் நாட்டுக்குரிய மாலைகளைச் சூடிச்செல்வர். கோவூர் கிழார் என்னும் புலவர் சேர, சோழ, பாண்டிய மன்னர்க்குரிய பூக்களைத் தமது பாடலிலே எடுத்து விளக்கியுள்ளார்.

'இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்லன்
நின்ன கண்ணியும் ஆர் மிடைந் தன்றே நின்னொடு
பொருநன் கண்ணியும் ஆர் மிடைந் தன்றே
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே'
[புறம்: 45].

சோழன் நெடுங்கிள்ளியும் நலங்கிள்ளியும் ஒருவரோடொருவர் போரிட்டபோது கோவூர்க்கிழார் அவர்களை அறிவுரைகூறி நெறிப்படுத்துகின்றார். ''உமது குடிக்குரிய மாலைகளையே இருவரும் அணிந்து போர் செய்கின்றீர்கள். உம்மில் யார்தோற்றாலும் உமது குடியே தோற்கும். பனம்பூவைச் சூடியவனும் வேப்பம்பூவைச் சூடியவனும் உம்மோடு போரிடலாம்'' என்கிறார் போரிடும் போது சூடியிருக்கும் பூவினைக்கொண்டே குடிகளை இனம் காண்பர். பனம்பூ சேரர்குடிக்குரிய பூவாயிருந்தது.

சேரநாட்டு வீரர்கள் வெறியாடும் குரவைக் கூத்தின் போது அசைந்த தலையினையுடைய பனந்தோட்டைச் செருகி ஆடுவதையும் சங்கப் பாடல் காட்டுகின்றது. நாட்டின் வளமார்ந்த பனையின் பயன்பாடுகள் சேரர் குடியின் வீரச்சின்னங்களாகவும் விளங்கியுள்ளன. சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையின் புகழ் பாடும் புலவர் குறுங்கோழியூர் கிழார் இச்செய்தியைப் பதிவு செய்துள்ளார். சேரமன்னர்களது வெற்றிப் புகழ்பாடும் பதிற்றுப்பத்து பனந்தோட்டாலாகிய மாலை பற்றிய செய்தியினைக் கூறுகின்றது. ''இரும்பனம்புடையல்'' சூடியே சேரவீரர்கள் போருக்குச் செல்கிறார்கள். பதிற்றுப்பத்து 70-ம் பாடலில் ''தண்பனம் போந்தை'' என வரும் தொடர் பனைமாலை பற்றிய விரிவான விளக்கத்தைத் தருகின்றது.

''வண்டிசை கடவாத் தண் பணம் போந்தை
குவிமுகிழூ வெண்டோடு கொண்டு
தீஞ்சுனை நீர்மலர் மிலைந்து மதஞ் செருக்கி
உடைநிலை நல்லமர் கடந்து மறங்கெடுத்துக்
கடுஞ்சின வேந்தர் செம்மற்றொலைத்த
வலம்படு வான் கழல் வயவர் பெரும''

வீரர் தலைவன் வர்ணிக்கும் மேற்காட்டிய பாடலடிகள் பனம்போந்தை அமையுமாற்றையும் விளக்குகின்றன வண்டுகள் மொய்த்துப் பாடுதல் இல்லாத தண்ணிய பனையினது குவிந்த அரும்பு போன்ற கூர்மையுடைய வெள்ளிய பனங்குருத்தோடு இனிய சுனையிடத்து மலர்ந்த குவளைப்பூ விரவிய கண்ணியைச் சூடிப் போருக்குச் செல்கிறான் வீரர் தலைவன். பனங்குருத்திலே தேனின்மையால் வண்டு மொய்த்துப் பாடுதலும் இல்லை அதனால் வண்டிசை கடவாத் தண்பனம் போந்தை' எனச் சிறப்பும் பெற்றது

[இன்னும் வரும்]

---

## ?

பச்சைப்
பொய்களுக்கு
உண்மை
என்று
பெயரென்றால்
உண்மைக்கு
என்ன பெயர்?

---

## ஒரு தாயின் ஏக்கம்!

ஓ மகனே!
நீ உறங்கும் போது
நான் விழித்திருந்தேன்
இப்போது —
நான் உறங்கும் போது
நீ விழித்திருக்கின்றாய்
ஓய்வாக நீ
உறங்குவது தான்
எப்போது?

— கணேஷ்

---

## யார் பெரியவர்?

திருமுருக கிருபானந்த வாரியார் ஒரு தடவை அம்மா, அப்பா இருவரில் யார் பெரியவர் என்ற ஐயத்திற்குப் பின் வருமாறு விளக்கம் தந்தார்.

''சந்நியாசியான ஒருவர் தெருவில் நடந்தால் அவர் தந்தை எதிரில் வந்தால் தந்தையே வணங்குவார்.

ஆனல் அம்மா வந்தால் சந்நியாசி விழுந்து வணங்குவார். இதிலிருந்து யார் பெரியவர் என்று நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

விளக்கம் எப்படி?

— ஸச்சி

---

கறுப்புக்கனல்

## கல்வின் ஹென்ரனின்
# தூரத்துப் பேரிகை

நான் ஒரு குறியீடல்ல;
நீங்கள் கேட்டது மரங்களின் காற்று அல்ல,
வீதியில் முடமாக்கப்பட்டது ஒரு பூனையல்ல;
நானே வீதியில் முடமாக்கப்பட்டேன்.

அழுவதும் சிரிப்பதும்
இன்பதுன்பங்களை உணர்வதும்
அவற்றைச் சொல்வதும் நானே;
ஏனெனில் நான் பிழைத்திருக்கின்றேன்.

இது என் குரல்
இவை என் வார்த்தைகள்
எனது வாய் அவற்றினைப் பேசும்
எனது கை எழுதும்
நான் ஒரு கவிஞன்
உங்கள் செவிப்பறைக்கெதிரே அதிர்ந்திடும்
எனது கை முஷ்டியே நீங்கள் கேட்பது.

**தமிழில்: என். சண்முகலிங்கன்**

கல்வின் ஹென்ரன்: 1952-ல் ரெனிஸில் பிறந்தவர். சர்ச்சைக்குரிய இளங்கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவராக மதிக்கப்பட்டவர். அமெரிக்க பாலியலும் இனவாதமும் [1964], வெள்ளை அமெரிக்கர்களுக்கான வெள்ளையறிக்கைகள் [1965] ஆகியன இவரது நூல்களில் குறிப்பிடத்தக்கவை. பல கவிதைத் தொகுப்புகளில் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடோடிக் கதைகள்

✶ தமிழில்: நீர்வை பொன்னையன்

## விழிப்பு

ஒரு மனிதன் சிலகுரங்குகளை வளர்த்து வந்தான். குரங்கு எஜமான் என்று அவன் அழைக்கப்பட்டான்.

தினமும் அவன் தனது எல்லாக் குரங்குகளையும் வரிசையாக நிற்கச் செய்து, மலைப்பகுதியிலுள்ள வித்துக்களை அவைகள் சேகரித்துக் கொண்டுவந்து தன்னிடம்



கொடுக்க வேண்டும் என்று கட்டளையிடுவான். இவ்வேலைக்கு ஒரு முதிய குரங்குதலைமைதாங்கவேண்டும். குரங்குகள் சேகரித்து வந்த வித்துக்களில் பத்தில் ஒருபங்கை அவைகள் உண்பதற்கு அவன் கொடுத்து வருவான். அவன் எதுவித வேலையும் செய்யாமல் ஒன்பது பங்கு வித்துக்களையும் தானே அனுபவித்து வந்தான். ஏதாவது ஒருகுரங்கு அவனது கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்து அவனுக்கு வரி கொடுக்கத் தவறினால் அக்குரங்கிற்குக் கடுமையாக சவுக்கடி கொடுப்பான். குரங்குகள் கடுமையாகக் கஷ்டப்பட்டு உழைத்தும் துன்பமான வாழ்க்கைநடத்தினாலும் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க மறுப்பதற்கு பயப்பட்டன.

''மலைகளிலுள்ள எல்லா மரங்களும் எமது எஜமானால் நாட்டப்பட்டவையா?

—ஒருசிறிய குரங்கு கேட்டது.

''இல்லை. அவை தாமாகவே வளர்ந்தவை''

—எல்லாக் குரங்குகளும் ஒன்று சேர்ந்து கூறின.

''இப்படியானால் அந்த மரங்களிலுள்ள வித்துக்களை சேகரிப்பதற்கு நாம் ஏன் எமது எஜமானிடம் அனுமதி கேட்க வேண்டும்?''

''இல்லை வேண்டிய எவரும் மலைகளுக்குச் சென்று வித்துக்களை சேகரிக்கலாம்.

அப்படியானால் நாங்கள் ஏன் எஜமானுக்குக் கீழ்ப்படிந்து அடிமைகளாகக் கஷ்டப்பட்டு வேலைசெய்து அவருக்கு வரி கொடுக்க வேண்டும்?''

அச்சிறிய குரங்கு கூறி முடிப்பதற்கு முன்பே அதனுடைய வார்த்தைகளில் உள்ள உண்மையை எல்லாக் குரங்குகளும் உணரத் தொடங்கின.

அன்று இரவுகுரங்குகளின் எஜமான் நித்திரை செய்து கொண்டிருக்கும் பொழுது, குரங்குகள் அவனுடைய களஞ்சியத்தை உடைத்து உள்ளேசென்று அங்கிருந்த வித்துக்கள் எல்லாவற்றையும்கைப்பற்றின அதன்பின் அவை காட்டிற்குள் தப்பி ஓடிவிட்டன. அவைகள் திரும்பி வரவேயில்லை. எஜமான் அவைகளின் வருகையை எதிர் பார்த்திருந்து இறுதியில் பட்டினியால் செத்து மடிந்தான்.

சூழ்ச்சிசெய்து மக்களைக் கொடுமைப்படுத்திச் சுரண்டுபவர்கள் இந்தக் குரங்குகளின் எஜமானைப் போல ஈவிரக்கமற்ற அரக்கர்கள் தமக்குக் கீழே வேலை செய்கின்ற மக்கள்தமது நிலைமையைப் புரிந்துகொள்ளாமல் இருக்கும் காலம்வரைதான் சூழ்ச்சிசெய்து அவர்களைச் சுரண்டிவாழமுடியும். உழைப்பாளர்கள் உண்மையை உணர்ந்து விழிப்படைந்து எழுச்சி பெற்றுவிட்டால் அவர்களை எந்தச் சக்தியாலும் கட்டுப்படுத்த முடியாது. அப்பொழுது எதுவித சூழ்ச்சியும் பலிக்காது. அப்படி அவர்களை யாராவது கட்டுப்படுத்த முற்பட்டால் அவர்களது தர்மாவேசத்திற்கு சுரண்டி வாழ்பவர் பலியாவது திண்ணம்.

## தீக்கோழி

ஒரு நகரத்தின் பாதுகாவலன், தான் சகல வல்லமையும் படைத்த ஒரு பெரும் படைத்தளபதி என்று கூறித் திரிந்தான். அந்த நகரம் துருக்கிய சேனையினால் சுற்றி வளைக்கப்பட்டது. இதை அறிந்த உடனே அந்த நகரத்தின் படைத் தளபதி பயத்தில் தொடை நடுங்கி தன் சொந்த வீட்டிற்குள்ளே பதுங்கியிருந்து கொண்டு வீட்டின்கதவுகளைத் தாழிட்டுப் பூட்டினான். அவன் தனது படைகளுக்கு இடும் கட்டளைகளை எழுதி தன் வீட்டு யன்னலிலுள்ள ஒரு சிறு துவாரத்தினூடாக வெளியே அனுப்பிக் கொண்டிருந்தான்.



துருக்கியப் படைகள் அகழிகளைக் கடந்து நகரத்திற்குள் வந்துவிட்டன என்பதை அறிந்த அந்த நகரத்தின் பாதுகாவலன் தான் தான் என்று கூறிய படைத் தளபதி ஒரு பெரிய மரப்பெட்டிக்குள் ஒளிந்திருந்துகொண்டு ''நான் இப்பெட்டிக்குள்ளே இருக்கின்றேன். நீங்கள் இப்பெட்டிக்கு பூட்டைப் போட்டுப் பூட்டிவிட்டு திறப்பை நீங்களே கவனமாக வைத்திருங்கள். திறப்பை துருக்கியப படை வீரர்கள் கேட்டால் நீங்கள் கொடுக்க வேண்டாம்''

தனது வேலைக்காரர்களுக்கும் அந்த மாவீரன் கட்டளையிட்டான்.

அந்தத் தீக்கோழியின்வீர தீரத்தையெண்ணி அவனது வேலைக்காரர்கள் சிரித்தனர்.

### பித்தளை துலங்க...

கறுத்துப் போய்க் கிடக்கும் பித்தளைச் சாமான்களைத் துலக்குவதற்கு உருக்ளை கிழங்கு வேகவைத்த நீரில் அலசுங்கள். அல்லது ஒருதுளிவினிகிரியை உப்பில் கலந்து துலக்க பளிச் சென்று மின்னும்.

— லச்மி

# மண்மணக்கவாசனை எழுதும் அகஸ்தியர்

## திருச்செந்தூரன்



அகஸ்தியர் என்ற பெயர் தமிழிலக்கிய வரலாற்றில் புகழ்பெற்றது. ஆரியக் கலப்பைத் தமிழிலக்கியத்தில்புகுத்தித் தமிழிலக்கியத்தையும் மொழி அமைப்பையும் புதிய நெறிக்குத் திருப்பியதில் அக்ஸ்தியர் முக்கிய பங்கு பெறுகிறார் என்பது மிகப்பழைய வரலாறு.

1926—ல் பிறந்து அறுபது ஆண்டுகளைச் கடந்து இன்றும் எம்மிடையே இளைஞர்க்காக வாழ்ந்து, அயராது, சோராது இலக்கியப் பணிபுரிபவர் சவிரிமுத்து அகஸ்தியர். பௌராணிக இலக்கண மரபு கூறும் அகஸ்தியர் போல எமது அகஸ்தியரும் புதிய இலக்கிய அரசியற் கோட்பாடுகளைத் தமிழிற் புகுத்தித் தமிழிலக்கியத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய முற்போக்கு இலக்கிய அணியைச் சேர்ந்தவர்.

அசஸ்தியரின் கதைகள் பெரிதும் பயன்படும்.

இன்று தமிழர்கள் பேரினவாத ஒடுக்குமுறைகளுக்கு உலக வரலாறு காணாத அளவு உட்படுத்தப்படுகின்றனர். முற்போக்காளர்கள் பெரும்பாலும் இந்தக் கொடுமைகளைச் சித்தரிக்கும் இலக்கியங்களைப் படைப்பதில்லை என்று பலர் குறைப்படுவர். இதன் மூலம் தமது 'தேசிய கற்பு'ப் பங்கப்பட்டுவிடும் என அவர்கள் கருதுகிறார்கள். ஆனால், இது தவறான போக்கு என்பதையும் எமது சொந்த மக்களின் பிரச்னைகளை எழுதுவதும் பேரின வாத ஒடுக்கு முறைகளுக்கு எதிராகக் குரல்கொடுப்பதும் தவறல்ல என்பதும் அகஸ்தியரின் நம்பிக்கை. அவரோடு உரையாடுவோர் இதனை உணரமுடியும்.

தமிழருடைய அரும்பெரும் நூல்கள் காலத்துக்கு காலம் பகைவர்களாலும் கறையான் போன்றவற்றாலும் அழிந்தன. ஈழத்தில் தென்னிலங்கையில் பேரின வாதத்தீயில் தமிழரின் நூல்கள் எரிந்து சாம்பலாகின. பேரினவாதத்தீ தெற்கில் தனது ஊழிக்கூத்தைமுடித்துக்கொண்டு பின்னே வடக்கு நோக்கி வந்தது. இதனால் கிடைத்தற்கரிய பலநூறுயிரம் நூல்கள் பேரினவாத வேள்வித் தீயில் அவிர்ப்பாகமாக அளிக்கப்பட்டன. அகஸ்தியர் ஈழத்துத்தமிழ் நூல்களைத் திட்டமிட்டுச் சேகரித்து வந்தார்.

மார்க்சீய, லெனினிஸக் கோட்பாடுகளாற் பெரிதும் கவரப்பட்ட அகஸ்தியர் ஏழைகள், பாட்டாளிகள், தாழ்த்தப்பட்டோர் ஆகியோரின் துன்ப துயரங்களைக் கண்டு வடித்த சூடான கண்ணீர்த் துளிகள் நாவலாகவும், சிறுகதையாகவும் உணர்வூற்றுருவகச் சித்திரமாகவும் மலர்ந்தன.

முற்போக்கு இலக்கிய அணியினரின் முக்கிய தத்துவங்களில் ஒன்று மண் வாசனை. மண்வாசனையை உருவாக்கும் உத்திகளில் சிறந்தது. பாத்திரங்களின் இயல்பான பேச்சுத் தமிழைப் பயன்படுத்துதலாகும். படிப்பறிவற்ற ஒடுக்கப்பட்ட தொழிலாள வர்க்கத்தினரைப் பெரிதும் பாத்திரங்களாகப்படைக்கும் அகஸ்தியர் அம்மக்களின் பேச்சை அப்படியே தமது சொல்லோவியங்களில் சிறைப்படுத்துவதில் வல்லவர். பேச்சுத் தமிழ் மூலம் பாத்திரங்களை உயிரோவியங்களாகப் படைப்பதில் அசஸ்தியர் தன்த்துவம் பெற்றவர். பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள், வழக்குத் தமிழை இலக்கியத்தில் திட்டமிட்ட நோக்குடன் சிறப்பாகப் பயன்படுத்தியவர் என்பர். இலக்கியத்துக்கு மெய்ம்மைத் தன்மை அளிப்பதோடு மொழியியல் ஆய்வாளர்களுக்குப் பயன்படும் வகையில் பிரதேசந்தோறும் வழங்கும் தமிழின் திரிபுகளையும் பதிவு செய்ய வேண்டும் என்பது அவர் கருத்து இத்தகைய மொழியியல் அறிஞர்களது ஆய்வுக்கு அவற்றை ஆராய்ந்து விமர்சன நூல்களை எழுதுவது அவரது நோக்காக இருந்தது. அ. செ. முருகானந்தம், அ. ந. கந்தசாமி பற்றிய சிறந்த அறிமுகக் கட்டுரைகளை எழுத அவருக்கு இந்தத் தொகுப்புப் பெரிதும் உதவியது. 1983-ல் தென்னிலங்கையிலே பெருந்தொகையான நூல்களை அக்கினிக்கு அவிர்ப்பாகமாகக் கொடுத்த அகஸ்தியர், வடக்கிலே தமிழ் தெரியாதோருக்குத் தம்மிடம் எஞ்சியிருந்த நூல்களை திறையாகக் கொடுத்துவிட்டு இன்று ஏங்கிநிற்கிறார். அண்மையில் அ செ மு.வின் சிறுகதைகளைக் தேடிக் கொண்டிருந்த போது தம்மிடம் எஞ்சியிருந்த கதைகளில் ஒன்றான ''புகையில் தெரிந்த முகம்'' என்பதை அவர் தந்துதவினார். இரசிகமணி கனக, செந்திநாதன அவர்களைப்போல ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புப் புக்களை தவறாது வாங்கிப் படித்து, சேகரித்துப் பாதுகாப்பவர் அகஸ்தியர். அவரது சொந்தப் படைப்புக்கள் அனைத்தையுமே இழந்து தவிக்கும் இந்த எழுத்தாள அன்பருக்கு யார் ஆறுதல் கூற முடியும்.

இலக்கியப் படைப்புஎன்பது தொழில் உற்பத்தி விவகாரமல்ல. எனினும் சிலர் எழுதாது இருக்க முடியாமல்ஓய்வு ஒழிவின்றி எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வகையைச் சேர்ந்தவர்களுள் அகஸ்தியரும் ஒருவர். முப்பத்தெட்டு ஆண்டுகள் இலக்கிய பணியில் ஈடுபட்டுவரும் அகஸ்தியர் முந்நூற்றறுபது சிறுகதைகளை எழுதியுள்ளார். ஒன்பது நாவல்களையும், எட்டுக் குறுநாவல்களையும் படைத்துள்ளார். கலைஞர்கள், எழுத்தாளர்கள், தலைவர்கள் ஆகியோரின்வாழ்க்கை வரலாறுகளை உரைநடை ஓவியமாகத் தந்துள்ளார். இரண்டு அரசியல் நகைச்சுவை நாடகங்களை எழுதியுள்ளார். பத்துப் பிரமுகர்களைப் பேட்டி கண்டு எழுதினார். தத்துவக் கட்டுரைகள், விமரிசனக் கட்டுரைகள், உருவகக் கதைகள், குட்டிக்கதைகள், நடைச் சித்திரம், உணர்வூற்றுருவகச் சித்திரம் என்ற பரிசோதனை இலக்கிய வடிவம் - இப்படி அவர் எழுதிய இவருடைய படைப்புக்கள் ஈழத்திலும் தமிழகத்திலும் பல்வேறு ஏடுகளில் விரும்பி வரவேற்று வெளியிடப்பட்டன.

இதுவரை அகஸ்தியரின் ஏழு நூல்கள் வெளிவந்துள்ளன. 'இருளினுள்ளே 'என்ற குறுநாவல் தொகுப்பு, திருமணத்திற்காக ஒருபெண் காத்திருக்கிறாள்', 'மண்ணில் தெரியுது ஒரு தோற்றம்', 'எரி நெருப்பில் இடைபாதை இல்லை' ஆகிய மூன்று நாவல்கள், 'கோபுரங்கள் சரிகின்றன' என்ற குறுநாவல், நாட்டுக் கலாநிதி யோசேப்பின் கலையுலக வரலாறு' 'நீ' என்ற உணர்வூற்றுருவகச் சித்திரம் ஆகிய நூல்களை அகஸ்தியர் வெளியிட்டுள்ளார். 'அகஸ்தியர் கதைகள்', 'தண்டனை' ஆகிய சிறுகதைத் தொகுதிகளை

(12ம் பக்கம் பார்க்க)

## எடிசன்

[7ம்- பக்கத் தொடர்ச்சி]

நேரம் நீடிக்கவில்லை. எடிசன் அதிர்ந்து போனார். மின் பொறியியலாளர், ''எடிசனாவது! மின் வெளிச்சத்தைக் கண்டுபிடிப்பதாவது'' இது வீண் கனவு'' எனப்பரிகாசம் செய்தனர்.

பரிகாசங்களால் எடிசன் சலித்துவிடவில்லை. தனது ஆய்வைத் தொடர்ந்தார். பொருள்கள் எதனால் எரிந்து சாம்பராகின்றன? என்னும் பௌதிக ஆய்வில் ஈடுபட்டார். இதற்குக் காரணம் பிராணவாயுதான் என்பதை விளங்கினார் எனவே கண்ணாடிச் சிமிழ் (Bulb) ஒன்றைச் செய்து அதனுள்ளே கரிநூல் வளையத்தைக் தொங்க விட்டு அச்சிமிழின் உள்ளிருந்த காற்றை அப்புறப்படுத்திய பின்பு அளவான மின்சக்தியை செலுத்திப் பரிசோதனை செய்தார். அவருடைய கனவு நனவாகியது. மின் சிமிழிலிருந்து [illegible] வெளிச்சம் வரத்தொடங்கியது. கரிநூல் வளையம் எரிந்து சாம்பராகவில்லை. இதில் வெற்றி பெறுவதற்கு எடிசன் 9999 பரிசோதனைகள் செய்து தோல்வி கண்டார். பத்தாயிரமாவது தடவைப் பரிசோதனையிலே அவர்வெற்றி கண்டார். என்னே அவரின் பொறுமையும், சுயநம்பிக்கையும். நியூயோர்க்நகருக்குமின்இணைப்புக் கொடுக்கும் பணியில் அவர் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றினார். இவரைப் பரிகசித்த மின்பொறியியலாளரிற் சிலர் இவரின்கீழ் வேலை செய்ய நேர்ந்தது ஆச்சரியமாகும்.

தனது ஆய்வு அனுபவங்களைக் கொண்டு பேசாமடந்தையைப் பேசவைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அதுதான் பேசாத திரைப் படத்தைப் பேசும் திரைப்படமாகச் செய்யும் பணியாகும். ஒலியையும் ஒளியையும் ஒன்றிணைத்துத் திரைப்படச் சுருளுக்குள்அமைத்து அவர் வெற்றிகண்டார். பேசும் திரைப்படங்களில்வரும் இனிய பாடல்களின் தொனியைக் கேட்கும் போதெல்லாம் எமக்கு எடிசனின் மேதாவிலாசமே புலப்படுகிறது. 84 வயதுவரை திண்மையான உடலில் ஒண்மையான அறிவு பெற்று விஞ்ஞான ஆய்வுகளைக் கடைசிமட்டும் கைவிடாது வாழ்ந்த எடிசன் 1931-ம் ஆண்டு காலமானார். பணச் சம்பாத்தியத்தைப் பெருக்குவதிலும் பார்க்கத் தான் உற்பத்தி செய்யும் பொருட்களின் தரமும் உபயோகமும் உயர்வாக இருத்தல் வேண்டும் என்பதே அவருடைய அபிலாஷையாகும். இதனைப் பூர்த்தி செய்வதிலே தான் அவர் திருப்தியடைந்தார். காற்றுக்கு எதிராகவே பட்டம் பறக்கும். எதிர்ப்புக்களுக்கு எதிரிலேயே மேதாவியின் ஆற்றல் உயரும் என்பது எடிசனின் வாழ்க்கை வரலாறு புலப்படுத்தும் உண்மையாகும். அவருடைய பிறந்ததின நினைவுகள் விஞ்ஞான மாணவர்களுக்கு விசேடமாக உற்சாகம் ஊட்டுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது சிறுகதை

# அவலம்

* அராலியூர்
ந. சுந்தரப் பிள்ளை

அன்று யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் எனது நண்பன் சுதர்சனனைச்சந்தித்தேன். நீண்ட நாட்களுக்குப் பிறகு தூரத்தில் கண்டபொழுதே மனதில் பொறிதட்ட, உற்று நோக்கினேன்.

உடல் மெலிந்து, முகம் காய்ந்து, தலைமயிர் உதிர்ந்து, வழுக்கை விழுந்து...ஓ... எவ்வளவு மாற்றம்!

இவன் சுதர்சனன்தானு?

இதில் என்ன அதிசயம்? நாங்கள் சந்தித்துக் குறைந்தது இருபத்தைந்து வருடங்களாவது இருக்குமே!

என்னவெல்லாமோ மாறியிருந்தும் அந்த அச்சுமட்டும் மாறுமலிருந்து நண்பனைக் காட்டித் தந்தது!

ஒரு காலத்தில் உற்ற நண்பன். ஒரே அறையில் உடனிருந்து வாழ்ந்தவன். உருக்கமாக, நெருக்கமாக நீண்ட நாட்கள் பழகியவனை இப்படி உற்று நோக்கி அடையாளம் காணவேண்டியிருக்கிறதே என்று நினைக்க எனக்குச் சிரிப்புவந்தது. மனித வாழ்க்கைத் தத்துவத்தின் ஒரு அம்சமே அந்தச் சந்திப்பில் தொக்கி நிற்பதாகப்பட்டது எனக்கு.

நண்பனை கண்டம்து எங்கள் நீண்டகால நட்புறவின் கதை எனது மனத்திரையில் ஓடத் தொடங்கியது நிழற்படமாக.

அப்பொழுது கிளறிக்கல் சேவிஸ்சில் சேர்ந்து புதிதாகக் கொழும்புக்குச் சென்ற நான், இருப்பதற்கு ஒரு அறை தேடிக்கொண்டிருந்தேன். அதே முயற்சியில் ஈடுபட்டிருந்த சுதர்சனனும் ஒஃபிசில் எனக்கு அறிமுகமானுன். இருவருமாகச் சேர்ந்து தீவிரமாகத் தேடி, விரைவிலேயே வெள்ளவத்தை ஹைஸ் ரீற்றில் ஒரு அறையைக் கண்டுபிடித்தோம்.

பழம் வீடு. ஆனல் இட வசதி, குழாய் நீர், மின்சாரம், பாத்றூம் என்று எல்லாம் சரியாக இருந்ததால் நாங்களும் சரியென்றுவிட்டோம்.

வீட்டின் முன் அறை எங்களுக்கு. மாதம் ஐம்பது ரூபா வாடகை. ஆளுக்கு இருபத்தைந்து ரூபா! 'என்ன கொழும்பில் மாதம் ஐம்பது ரூபா வாடகையில் அறையா?' என்று மூக்கின்மேல் விரல் வைக்கிறீர்களா? வையுங்கள். வையுங்கள். இது முப்பது வருடங்களுக்கு முந்தியகதை.

அறையில் இரண்டு கட்டில்கள், ஒரு கதிரை, ஒருமேசை போட மட்டும் இடம் இருந்தது. எங்கள் பெட்டிகள் படுக்கைக்குக் கீழே. எங்களுக்கு போதும்தானே! அடுத்தநாளே குடி வந்து விட்டோம்.

சிங்களக் குடும்பம். அப்பா, அம்மா, நாலு பிள்ளைகள். குடும்பத் தலைவனின் பெயர் குணசேன. இளைப்பாறிய அரசாங்க லிகிதர். மூத்தவர்கள் இருவரும் ஆண்கள். ஏதோ கொம்பனியில் வேலை செய்துகொண்டிருந்தார்கள். பெரிய பெண் பிரேமா படிப்பை முடித்துவிட்டு வீட்டில் அம்மாவுக்கு ஒத்தாசையாகஇருந்தாள். சின்னப்பெண் ஷீலா பள்ளியில் படித்துக் கொண்டிருந்தாள்.

அறைக்குக் குடி வந்ததும் வராததுமாக அந்தச் சின்னப் பெண்ணில் கண்ணைப்போட்டு விட்டான் சுதர்சனன்.

ஷீலா அழகிதான். பிரமாத அழகியல்ல; சாதாரண அழகி. நல்ல உயரம். சிவப்பு. துருதுருவென்ற கண்கள். கருகருவென்ற கூந்தல். நீண்ட இரட்டைப் பின்னல். நல்ல கலப்பாகப் பேசிப் பழகும் சுபாவம்.

குடும்பத்தில் கடைசிப் பிள்ளை. அழகான பெண். செல்லப் பெண். பின் கேட்க வேண்டுமா? வீட்டில் ஷீலாவின் ராச்சியம்தான். எந்த நேரமும் கதையும் பாட்டும் சிரிப்பும் கலகலப்பும் தான்! இந்தக் கவர்ச்சியில்தான் சுதர்சனன் எடுபட்டுவிட்டான்.

சுதர்சனனும் நல்ல கலப் கலப்பான பேர்வழி. அதனுல் ஷீலாவின் பேச்சிலும் சிரிப்பிலும் இவனும் கலந்துகொண்டான். அவள் பாடசாலையில் படிக்கும்வரையும் பகுதிநேரமாக இருந்த கதையும் சிரிப்பும், அவள் படிப்பு முடித்து வீட்டில் தங்கியதும் முழுநேரக் கொண்டாட்டங்களாயின. தேன் குடித்த நரிபோல இவன் எந்த நேரமும் ஷீலாவிடத்தில் சொக்கிப்போய் இருந்தான்.

இவன் அவளுடன் நெருங்கிப் பழகியதை குணசேன குடும்பத்தினர் எவரும் ஆட்சேபிக்காதிருந்தது எனக்குப் பெரிய ஆச்சரியமாயிருந்தது. நாட்செல்லச் செல்லத்தான் தெரிந்தது. அந்தக் குடும்பத்தின் பொருளாதார நிலை படு மோசமென்று. இரண்டு பெண்களையும் கரைசேர்க்கக் கடைசி இரண்டு வீடுகளாவது வேண்டாமா? அவர்களிடத்தில் ஒரு வீடுகூட இல்லை! அவர்கள்குடியிருந்த பழம் வீடுகூட வாடை வீடு. அதில்தான் எங்களுக்கு ஒரு அறை.

ஆரம்பத்தில் சுதர்சனனுடைய நடத்தையைப்பொழுது போக்கு, பெண் மயக்கம், பருவக் கோளாறு என்று பல விளக்கங்கள்கூறி, நான் கவனிக்காது தட்டிக் கழிக்கப் பார்த்தேன். ஆனல் அது முழுநேரத் தொழிலாகி முழுமூச்சுடன் வளரத்தொடங்கிய பொழுதுதான் விழித்துக் கொண்டேன். 'இதை எப்படித் தடைசெய்வது?' என்று சிந்திக்கத் தொடங்கினேன்.

அந்த நேரத்தில்தான் 58 இனக் கலவரம் நாட்டில் வெடித்தது. இலங்கையில் முதன்முதலாகப் பரந்த அளவில் இடம்பெற்ற இனக் கலவரம் அது.

கொழும்பில் தமிழர்கள்தாக்கப்படுகிறுர்கள் என்று கேள்விப்பட்டதுமே நானும் சுதர்சனனும் ஒஃபீசுக்குப் போவதை நிறுத்திக்கொண்டோம். வழக்கமாக எங்களுக்குத் தண்ணி, சாப்பாடு கடையில் இப்பொழுது வெளியே செல்ல முடியாத நிலை. அந்த நாட்களில் எங்களுக்கு வேண்டியவற்றைத் தந்து ஆதரித்தவர்கள் குணசேன குடும்பத்தினர். அவர்கள் எங்களிடம் எந்தத் துவேஷமோ, பாகுபாடோ காட்டவில்லை. தங்கள் குடும்ப உறவினர்கள்போல எங்களைக் கவனித்துக்கொண்டார்கள். வீட்டில் தமிழர்கள் இருக்கிறுர்கள் என்பது வெளியே தெரியாதபடி நடந்கொண்டனர். அதனுல் எங்களுக்குக் கலவரங்களால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்கள் பலர் தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் றேயல் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த அகதிமுகாமில் தங்கியிருந்து அங்கிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் பருத்தித்துறை சேர்ந்தனர். யாழ்ப்பாணத்தில் ஆறு மாதம் ஒரு வருஷம் இருந்து ஆறி தேறி மீண்டும் கொழும்பு திரும்பினர்.

என்னையும் சுதர்சனனையும் பொறுத்தவரை ஒரு மாதத்தின் பின்னர் மீண்டும் வேலைக்குச் செல்லத் தொடங்கிவிட்டோம். நாங்கள் இனக் கலவரத்தின் கோரத்தாக்குதலுக்கு ஆளாகாவிட்டாலும் அதன் அடையாளங்களைச் கொழும்பில் ஆங்காங்கே கண்கூடாகக் கண்டோம். அந்தக் கலவரம் தமிழ் மக்களது உடலை விட, உள்ளத்திலேயே ஓர் அழியாத சுவடுபடுத்துச் சென்று விட்டது.

பயம் காரணமாகவோ என்னவோ கலவரத்தின் பின்பு சில மாதங்கள் சுதர்சனன் அடக்கமாக அமைதியாக இருந்தாள். நிலைமை படிப்படியாக வழமைக்குத் திரும்பியதும் அவனும் தனது வழமையான கைங்கரியங்களில் இறங்கி விட்டான்!

இப்பொழுது அவர்களது பழக்கம் முன்னையையும் விட நெருக்கமாகிஇறுக்கமாயிற்று. இவன் எந்த நேரமும் அவளது வாயைப் பார்த்துக் கொண்டிருந்தது எனக்கு அவமானமாக இருந்தது, நானே மனம் கேளாமல் ஒருநாள் அவனிடம் கேட்டுவிட்டேன்,

"என்னடா சுதர்சனன் ஷீலாவோடை கொண்டாட்டம் ஒரு மாதிரி இருக்கு?"

"என்ன மாதிரி?"

கொஞ்சம் நெருக்கமாய்..." என்று சிரித்தேன். "சத்தியா அப்படி வித்தியாசமா ஒண்டுமில்லை. ஷீலாவும் ஃபிறீயா கலகலப்பாகபழகிறுள்; நானும் கலகலப்பாப் பழகிறன். அவ்வளவுதான்."

"வெறும் பழக்கமில்லை; உதிலை ஏதோ இருக்குது"

"மச்சான் சத்தி, நீ றிசேவ்ரைப் அதுகளோட பழகிறதில்லை நான் ஃபோவேட்ரைப். எல்லாரோடும் ஃபிறியாய் பழகிறன். உன்ரை கண்களுக்கு நான் பழகிறது வித்தியாசமாப்படுது!" என்று சிரித்தான்.

"நான் றிசேவ்ட் ரைப்தான் ஒத்துக் கொள்ளுறன் ஆனு நீ போறபோக்கும் சரியில்லை!"

"இதிலை ஒண்டும் இல்லை மச்சான். பயப்பிடாதை! என்னடா காதல் கீதல் என்று சொல்ல வாறியா?"

"நீ அவளோட பழகிற விதத்தப்பாத்தா, ஆரும் அப்படித்தான் நினைப்பினம்!"

ஆரும் நினைக்கிறத்துக்கு நான் ஒண்டும் செய்ய முடியாது! நான் இப்பிடித்தாள் பழகுவன்" - என்றுன் சற்றுக் கடுமையான குரலில்.

"சுதர்சனன், உப்பிடிப் பழகிறதுதான் மச்சான் பிறகு காதலை முடியிறது.!"

நல்ல அனுபவம் போலை! என்று சிரித்தான்.

"தெரிஞ்சத்திலை தான் சொல்லுறன்".

"மச்சான் சத்தி நீ நினைக்கிற மாதிரி நான் அப்படி ஒண்டும் லேசிலை காதலிலை விழமாட்டன், எனக்கு பலன்ஸ் இருக்கு நிதானம் இருக்கு.

"றூம் மேட்டா ஃபிறெண்டா இருக்கிறனுன் சொல்ல வேண்டியதைச் சொல்லத்தானே வேணும்? அதாலை சொன்னனுன்!"

சரி மச்சான் சொல்லீட்டாயல்லே? சொன்னதுக்கு நன்றி இனிமேல் இது பற்றி என்னேடை பேசாதை!" என்றுன் உறுதியான குரலில்.

இந்தமறுமொழிக்குப் பிறகும் இந்தக்கதையைத் தொடர முடியுமா? அத்துடன் நிறுத்திக் கொண்டேன். அவனது கொண்டாட்டமோ தொடர்ந்தது முன்னையிலும் வேகமாக.

சுதர்சனனுடைய போக்கு இன்னும் வேகமாக' மோசமாகப் போகவே மீண்டும் ஒருமுறை அவனுடன் பேச்செடுத்தேன்.

"மச்சான் சதர்சனன், நீ எவ்வளவுதான் மறுத்தாலும் நான் உதை நம்பப் போறதில்லை. உனக்கும் ஷீலாவுக்கும் இடேலை ஏதோ இருக்கு!"

"சத்தியா" 'காதல் என்று சொல்லுறியா?" என்று கேட்டுச் சிரித்தான்.

"அப்படித்தான் தெரியுது:"

"காதல்தன் மச்சான்!" இப்பொழுது பெருமிதச் சிரிப்பு!

"பாத்தியா! நான் அப்பவே சொன்னன்?"

"அப்ப இல்லை மச்சான், இப்பதான் தொடங்கினது!"

"சரி எப்பஎண்டா என்ன? இப்ப என்ன ஷீலாவைக் கலியாணம் செய்யப் போறியா?"

"காதல் கலியாணத்திலை தானே போய் முடிய வேணும்?

"மச்சான் சுதர்சனன் உது சரிவராது!"

"அவளுடைய பெற்றுர் சம்மதிக் மாட்டினம் எண்டு சொல்லுறியா?"

"அதல்ல, நீ தமிழ் அவள் சிங்களம்!"

"என்னடா சத்தி வகுப்புவாதக்கதை பேசுறுய்?" என்று ஏளனமாகச் சிரித்தான்.

"மச்சான், நான் சாதி சமயம், இனம், மொழி எல்லாத்தையும் கடந்த ஞானி உலகத்திலை உள்ள மனிதர்கள் எல்லாருமே ஒரே சாதி எண்டது என்னுடைய கொள்கை ஆனு இண்டைய சூழ்நிலேலை உந்தக்கலியாணத்தை நீ செய்யிறது அவ்வளவு புத்திசாலித்தனமில்லை இதுதான் நான் சொல்லுறது."

"58 கலவரத்தை வைச்சுக் கொண்டு சொல்லுறியா?"

"இப்படி இன்னும் ஒரு கலவரம் வந்தா நீ என்ன செய்வாய்? அவள் என்ன செய்வள்?"

"இந்த மாதிரி ஒருகலவரம் இனிமேல் வராது மச்சான்!

"அதெப்படி நீ நிச்சயமாச் சொல்லுவாய்?"

"அதெல்லாம் எனக்குத் தெரியும் மச்சான்"

"சரி அப்படி ஒண்டு வந்துட்டுது. எப்படிச் சமாளிப்பாய்! போக்கிடம் இல்லாமல் நிண்டு திண்டாடுவாய்! அவதெப்படுவாய் — கடைசி வாக்கியங்களைச் சொல்லும் போது எனது குரல் தழுதழுத்தது.

"சக்தி. நான் எப்படிச் சமாளிக்கிறன் எண்டதை இருந்து பாரா!" என்று சிரித்தான்.

அவன் எப்படிச் சமாளிக்கிறுன் எண்டதை நான் இருந்து பார்க்கவிரும்பவில்லை. அதற்கு முன்பே அறையைக் காலி செய்யத் தீர்மானித்தேன். இல்லாவிட்டால் நானும் சேர்ந்தல்லவா அவனுக்கு ஷீலாவைக் கட்டி வைத்ததன் என்ற பழியை ஏற்க வேண்டும்.?

நண்பனைத் தடுக்கும் முயற்சியாக இன்னும் ஒரு கேள்வியைக் கேட்டேன்.

"உனக்குக் குடும்பத்திலை பொறுப்புக்கள் இல்லையா?"

"ஒரு தங்கச்சி இருக்கிறுள் அவளுக்குச் குடுக்க எங்களிட்டைச் சீதனம் நிறைய இருக்கு?",

"நீ ஷீலாவைக் கட்டுறதை வீட்டிலை அனுமதிப்பினமா?"

"சத்தியா, நான் கலியாணம் செய்யிறது எனக்காக. மற்றவை சொல்லுறதுகளைக் கேக்க முடியாது! என்றுன், அழுத்தமாக அவன் கருதியது தனது பெற்றேரைக் மட்டுமல்ல. எனக்கு முகத்தில் அடித்தது போலிருந்தது. அப்போதைக்கு விட்டு விட்டேன்.

நண்பனைக் காப்பாற்ற இன்னும் ஒரே ஒரு வழிதான் இருந்தது, யாழ்ப்பாணம் சென்றேன். அவனது ஊருக்குப்போய் அவனது வீட்டைத் தேடிக் கண்டு பிடித்தேன்.

ஏழைக்குடும்பம் சின்னமண் வீடு அப்பா, அம்மா, இரண்டு தங்கைகள் தங்களது வாழ்வை வளமாக்க அண்ணுவின் கையை ஆவலுடன் எதிர் பார்த்து நிற்கும் தங்கைகள்! எல்லோரும் அவனைப்பற்றி அக்கறையாக விசாரித்தார்கள். நான் மற்றவர்களிடம் பொதுவாகப் பேசிவிட்டு, தகப்பனுரிடம் மட்டும் இரகசியத்தைக்கூறி விட்டு, நான் சொன்னதென்று சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, கொழும்பு திரும்பினேன்.

ஊரில் இருந்து சுதர்சனனுக்கு கடிதம் வந்தது. அவன் யாழ்ப்பாணம் போய் வந்தான் வந்ததும் "சத்தி, நீதான் மச்சான் இந்தக் கதையை அப்பா அம்மாவுக்குச் சொல்லியிருக்கிறுய்" என்று என்மீது பாய்ந்தான்!

(12ம் பக்கம் பார்க்க)

## சிவன்பதம் பணிவோம்

புண்ணியந்திகழ் கீரிமலைப்பதி
பொருந்திய உயிர் யாவையும் காக்கும் பொன்
வண்ண மேனிச் சிவனின் பதங்களை
வையமீ தென்றும் வாழ்த்திவணங்குவோம்

அன்னவன் விழாக்காணும் அடியவர்
அல்லல் நீங்கி அமைதியை எய்துவார்
நன்மை யாவுமே நாடும் அவர்தமை
நானிலத்தின் நலன்களை எய்துவார்

நாமும் சென்று வணங்குதல் செய்குவோம்
நம்துயர்கள் தொலைந்திட வேண்டுவோம்
வானும் மண்ணும் தொழுதிடும் ஈசனின்
மலர்ப்பதங்களால் உய்திகள் எய்துவோம்.

— ம. பார்வதிநாதசிவம்

* இன்று கீரிமலை நகுலேஸ்வரர் கொடியேற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாயின் சஞ்சாரம் விபரீதபலனைக் கொடுக்கும்!!

தற்போது கிரக சஞ்சாரங்கள் வரவரப்பாதிப்படைந்து வருகின்றன. ஜனவரி 23ம் திகதியில் இருந்து செவ்வாய் விருச்சிக ராசியில் பிரவேசித்தது. முதலில் சனிக்கிரஹத்தையும் பின்னர் யுரேனஸையும் கடக்கும். இக்காலங்களில் புதன், சுக்கிரன் கிரகங்கள் சனி, செவ்வாய், யுரேனஸ் கிரகங்களுக்கு சதுரப் பார்வையில் வரும். இவை மாசி மாதம் பூராவும் வலிமையாக இருப்பதுடன் பங்குனி முற்பகுதிவரை பாதிப்புக்கள் இருக்கும்.

பொதுவாக இக்காலங்களில் இனக்கலவரங்கள் உள்

பெப்ருவரி மாதம் 18, 19 (மிருகசீரியம்] 21, 22 (பூசம்), 27, 28 (சித்திரை), மார்ச் 2 3 (அனுஷம்)' 8,9 [அவிட்டம்], 11,12 உத்திரட்டாதி, 17,18[மிருகசீடம்], 21, 22 [பூசம்] 27[சித்திரை], 29,30 அனுஷம்] ஆகிய தினங்களில் பெரும் பாதிப்புக்களும் பெப்ருவரி 16,17 [கார்த்திகை], 13,14 உத்தரம் மார்ச் 6 [உத்திராடம்], 15, 16 [கார்த்திகை], 25, [உத்தரம்] ஓரளவு பாதிப்புக்களும் ஏற்படலாம் அவிட்டம் குறிப்பிடக் கூடியமொரு நட்சத்திரமாகும்.

### சோதிடர் ஈ. கே. குலசிங்கம்

கொழும்பு

நாட்டுப் போக்குவரத்துப் பாதிப்புக்கள்' வெளிநாட்டுக் குடிவாசிகளின் நிலைகளில் பாதிப்புக்கள், மாணவர் கல்விப்பாதிப்புக்கள் வாகன, கட்டிட சேதங்கள் விவசாய பாதிப்புகள், வேலைநிறுத்தங்கள், நாட்டின் கௌரவம் பாதித்தல், தலைவர்கட்கும் சோதனைகள் எதிர்க்கட்சியினரின் நிலையிலும் பாதிப்புக்கள் சிறைசாலைகளில் அசம்பாவிதங்கள் இயற்கையின் சீற்றங்கள் ஆகியன ஏற்படலாமென்று கிரகங்கள் எச்சரிக்கை செய்கின்றன. மாசி மாதப் பிற்பகுதியிலிருந்து பங்குனி முற்பகுதி வரை புரட்சிகள், குண்டு வெடிப்புகள் கலவரங்கள், வேலைநிறுத்தங்கள், ஆட்சியாளருககுப் பாதிப்புக்கள் அதிகமாக இருக்க இடம் உணடு.

இப்பாதிப்புக்களுக்கு செவ்வாய், சனி, யுரேனஸ், சூரியன், முக்கியம் பெறுவதால் அவற்றின் சாரங்களில் சந்திரன் சஞ்சரிக்கும் போது பாதிப்புச்கள் நிகழ இடம் உண்டு

மேடம், கடகம் இராசிக்காரருக்கு அதிகபாதிப்புக்களையும் மிதுன, கன்னி இராசிகாரருக்கு அதற்கு அடுத்த பாதிப்பையும் மீனம், தனுசு இராசிகாரருக்கு அதற்கு அடுத்தபாதிப்பையும் கொடுக்கலாம். கும்பம் விருச்சிகத்திற்கும் நன்றல்ல

செவ்வாய்க்கிரகம் சிறுபான்மையினரின் உரிமை, பாதிப்புக்களையும், ஆட்சியாளரின் ஆட்சியையும் குறிக்கும் கிரகம் செவ்வாய்க்கிரகத்தின் தேவதை முருகன். சிறுபான்மையினரின் நலனை விரும்பும் தலைவர்கள் ஆறுமுகனின் அருளைப்பெறவேண்டும். ஆறுமுகங்களினதும் அனுக்கிரகமும் வேண்டும். இப்போது முற்றான அனுக்கிரகம் இல்லை. ஆதலால் சிறுபான்மையினரின் நலனை நாடும் முக்கிய தலைவர்கள் எதிர்வரும் வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திரத்தில் ஆறுபாத்திரங்களில் பால் நிரம்பி முருகன் சந்நிதியில் வைத்து சமர்ப்பிக்கவேண்டும். அருளை நாடிப் பிரார்த்திக்க வேண்டும். இதனுல் பாராமுகமாக இருக்கும் மற்றைய முகங்களும் சிறுபான்மையினரின் பக்கம் திரும்பும். இது விடயத்தை சிறுபான்மையினரின் நலனை விரும்பும் தலைவர்களின் கவனத்திற்கு யாராவுதல் கொண்டுவாருங்கள் இதுஅருள் சக்தி ஆருடமுறையில் அம்பாள் தெரிவித்த குறிப்பாகும் தொடர்ந்துவரும் காலங்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதால் இவ்வாரதனை மிகவும் நன்மை தரும்

இயக்கங்களில் செவ்வாயின் ஆதிக்கத்தில் உள்ள வீரம் பொருந்தியவர்கள் தாக்குதலை ஓரளவு எதிர்த்து தாக்குப்பிடிப்பார்கள் என்றும், சனியின் ஆதிக்கத்தில் உள்ளவர்கள் பாதிப்புக்குள்ளாவார்கள் என்றும் கிரகங்கள் சூசகமாகத் தெரிவிக்கின்றன.

சிறுபான்மையினரின் துயர் தீர எல்லோரும் முருகனை வேண்டிக் கொள்ளுங்கள்.

## ஐயோ பலியானுர்!

ஏறும் போது பஸ்ஸில் ஆணிகுத்தி
ஏற்பூசி போட யாழ்ப்பாணம் போனுர்
வீறுகொண்டோர் சீருடையில் நிற்கும்
வீதியினுல் செல்ல இல்லாள் தடுத்தாள்
கூறுமடியார் வீனை தீர்த்தவனை வேண்டி
குறுக்கு வழி பாதையில் சைக்கிலில் சென்றுர்
ஆறுமைல் உட்பாதை ஊடாகச் செல்ல
ஆகாயதாக்குதலில் ஐயோ பலியானுர்!

— யோகி

## படிப்பது மட்டும்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கும். அதில் நீ எப்படி இருக்கிருய், உன்முகம் எப்படி இருக்கிறது என்பதைத் தெளிவாகக் காண்பாய் அதேசமயம் என்முகத்தை நான் விரும்பவில்லை. நான் அழகாய் இருக்கவேண்டும், நான் ஒரு சினிமா நடிகை போல் இருக்க வேண்டும்'' என நீ நினைக்க ஆரம்பிக்கிருய் ஆனுல் நீ உன்னைப்பார்த்து ''ஆம் இது தான் என் உருவம் என் மூக்கு சரிநேராக இல்லை என் கண்கள் மிகச்சிறியவை மயிர் குத்திட்டு காணப்படுகின்றது'' என்று கூறுவாயனுல், உன்னை நீ ஏற்றுக்கொள்கின்றுய். நீ எப்படி இருக்கிருய் என்பதை நீ பார்ப்பாயானுல், அங்குசலிப்பு இராது. நீ பார்ப்பதை மறுத்து வேறு ஏதோமாதிரி இருக்க விரும்புவாயானுல் சலிப்பு ஏற்படுகின்றது. அதே போல் உன்னை உட்புறமாகவும் சரியாகக் காண்பாயானுல் அது சலிப்பாய் இராது. எவ்வளவு அதிகமாய் பார்க்கிருயோ, அவ்வளவு அதிகமாகப் பார்க்கக்கூடியதாய் இருக்கும். அதனுல் அதிவிசேஷமான ஆர்வமும் பிறக்கும். ஆழ்ந்து ஆழ்ந்தும் விஸ்தாரமாகவும் பார்க்கலாம். அதற்கு முடிவே இராது. அதில் சலிப்புமில்லை. அதைச் செய்ய முடியுமானுல் அப்படிச் செய்வதானது நீ விரும்பிய ஒன்றைச் செய்வதாகும். நீஒன்றைச் செய்ய விரும்பவதானுல் காலம் என்று ஒன்றிராது.

நீமரங்களை வளர்க்க விரும்பினுல், நீர்பாய்ச்ச வேண்டும். கவனிக்கவேண்டும். பாதுகாக்க வேண்டும். நீ உண்மையில் எதைச் செய்ய விரும்புகிருய் என்பதை அறியும்போது, நாட்கள் மிகவும் குறுகி விடுவதை காண்பாய். எனவே நீ எதைச் செய்ய விரும்புகிருய் என்பதை நீயே கண்டறிய வேண்டும் நீ என்ன செய்ய விரும்புகிருய், நீ உண்மையாக என்னத்தை செய்ய வேண்டும் ஒரு தொழிலில் மாத்திரம் அக்கறையுடன் இருந்து விடுவதல்ல.

★ நாம் கட்டுப்பாடுகளுக்குட்பட்டுள்ளோம். குழந்தைகள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறுர்கள். கல்வியினுல் ஒரு புரட்சிகரமான மனதை உருவாக்க முடியுமா? பிரச்னை என்னவென்றுல் இது மிகவும் இளம் வயதில் ஆரம்பிக்கப்படவேண்டும். சிறுவர்கள் பதின்நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட வயதை அடைந்தபிறகு அல்ல. வெறும் பால்உணர்வு, பணம் அந்தஸ்துபோன்றவைவையவிட வேறு விடயங்களும் உள்ளன என்ற உணர்வை குழந்தைகளுக்கு ஏற்படுத்த என்ன செய்யலாம்? அறிவு என்ற முறையில் தகவல்களைக் குழந்தைகளுக்கு கொடுப்பது மட்டுமின்றி உலகம் மட்டுமல்ல அதைவிடவும் மிகப்பெரிய விடயங்களும் உண்டு என்பதை எப்படிக் காட்டலாம்? இதை முதலில் நாம் உணர வேண்டும். அந்தவிடயம் நம்முள் எரிய வேண்டும். எம்முள் எரியும் விடயத்தை எப்படி குழந்தையின் மீது ஆதிக்கம் செலுத்தாமல் அதற்கு உணர்த்துவது? நான் குழந்தைமீது ஆதிக்கம் செலுத்துவதானுல் குழந்தையைக் கெடுக்கிறேன் என்பதாகும். நான் எனது சுயரூபத்தை ஏற்கும்படி செய்கிறேன். எனவே நாம்விளக்கம் பெறவேண்டும். மாணவருடன் எனது தொடர்பு விடயத்தில் அவன் எவ்வளவுதான் சிறியவனுய் இருந்த போதிலும் நான் ஒரு போலியான நடத்தையை அல்லது செயலை ஊக்கப்படுத்தலாகாது இது மிகவும் கஷ்டமான விடயம்.

## சிறுகதை

(11ம் பக்கத் தொடர்ச்சி)

நான் எனக்கு ஒன்றும் தெரியாது என்று நடித்துவிட்டு ''சரி நீவீட்டிலை என்ன சொல்லீட்டு வந்தாய்?'' என்று கேட்டேன்.

''வேறை என்னத்தைச் சொல்ல? ஷீலாவைக் கலியாணம் கட்டப்போறன் எண்டு சொல்லீட்டு வந்துட்டன்!'' என்று சிரித்தான்.

',கலியாணம் கட்டத் தீர்மானிச்சுட்டியா? ''என்றேன் வியப்புடன் ''தீர்மானிச்சுட்டன்? வெகுவிரைவில் கல்யாணம்!'' அவன் மீண்டும் சிரித்தான்.

அதற்கு மேலும் அங்கிருந்து நண்பன் செய்யப்போகும் பிழையான காரியத்திற்கு எனது அங்கீகாரத்தை வழங்க நான் விரும்பவில்லை. அடுத்த நாளே கனத்த இருதயத்துடன் நாண்பனிடமிருந்து விடை பெற்று, அறையையும் காலி செய்தேன்.

சுதர்சனன் ஷீலாவையே கல்யாணம் செய்து கொண்டு குணசேனு குடும்பத்துடன் இருந்து வருவதாகப் பிறகு யாரே சொல்லக் கேள்விப்பட்டேன்.

நான் கொழும்பிலிருந்து மாற்றலாகி வேறு எங்கெங்கோ வெல்லாம் சென்று இறுதியாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தேன் இதற்கிடையில் இலங்கையில் எத்தனையோ இனக்கலவரங்களை நடந்தன. அந்த நேரங்களிலெல்லாம் என்னுல் சுதர்சனனை நினைக்காமல் இருக்க முடிந்ததில்லை! நண்பன் என்ன அல்லல் தொல்லைகளை அனுபவிக்கிறுனே, இந்த நேரத்தில் என்று நினைத்துப்பார்க்கக் கண்கள் பனிக்கும்! நண்பனுக்காகச் சில கண்ணீர் முத்துகளையும் சித்தியிருக்கிறேன்!

சரியாக இருபத்தைந்து வருடங்களுக்குப் பிறகு ஏற்பட்ட சந்திப்பு. நானே வலிய சென்று பேசினேன்.

''என்ன சுதர்சனன்? நீண்ட நாட்களுக்குப்பிறகு ஏது இந்தப் பக்கம்?'' என்று கையைப் பற்றினேன்.

''சத்தி நான் 83 க்குப் பிறகு ஊரோடை வந்துட்டன்'' என்று கூறி அசட்டுச் சிரிப்புச் சிரித்தான் நண்பன்.

''அப்ப குடும்பம்?'' என்று இழுத்தேள்.

''இப்ப குடும்பமும் யாழ்ப்பாணத்திலை தான்!'' என்றுன் சங்கடத்துடன் அவன் அனுபவித்த அல்லல்கள் அவலங்கள் எல்லாம் முகத்தில் எழுதியிருந்தன.

நான் அதற்குமேல் அவனது குடும்பத்தைப்பற்றி எதுவும் கேட்கவில்லை கேட்டு நண்பனைஏன் சங்கடப்படுத்துவான் கேட்டுத்தானு அறிய வேண்டும்?

நண்பனுடன் வேறுவிடயங்கள் பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டு விடைபெற்றேன்.

[யாவும் கற்பனை]

## இவ்வாரம் எப்படி

[6ம் பக்கத் தொடர்ச்சி]

**மீனம்**

கைகொடுத்து உதவுவதற்குத் தந்தை முன்வருவர். காரிய சித்தியும்கிட்டும். நீண்டநாள் எதிரிகள் மீண்டும் நண்பர்கள் ஆவார்கள் கடமையாற்றும் இடத்தில் ஒத்துழைப்புக்கிட்டும். பொதுப்பணி மூலம் புகழுக்கும் இடமுண்டு. வியாபாரிகளுக்கு சிறப்பானதினம்.

திருமலை க.வே. ரவீந்திரன்

## தனது பெயரில்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

வின. புறத்திலிருந்து வரும் உண்மைபற்றிய விளக்கங்களும் பதில்களும் மனிதன் தன்னைத்தானே ஏமாற்ற உதவின. எந்தவொரு குருவினுலும் உண்மையை இன்னெருவருக்குக் கூறிவிடமுடியாது. அப்படி ஏதாவது கூறப்பட்டிருந்தால் அஃதுண்மையாகாது. உண்மையென்பது காலத்துக்கப்பாற்பட்டது என்றும் நிகழ்காலத்திலேயே இருப்பது. அத்தகைய உண்மையைக் காலத்துக்குட்பட்ட அறிவாலோ, சொல்லாலோ அளக்கவோ வெளியிடவோ முடியாது. உண்மையான அனுபவநிலையில் 'அனுபவிப்பவன்' 'அனுபவிக்கப்படுவது' என்ற இருமை நிலையிராது. உண்மையான அனுபவநிலையில் 'அனுபவிப்பவன்' என்பானெருவனிரான். ஒருவனுக்குத் தான் அறிந்ததை வெளியிடுவதற்கு தானென்னும் தனித்தன்மை [ego] யின் உந்தல் தேவை. எனவே அனுபவவித்ததனுல் காலத்துக்குட்பட்ட அறிந்ததையே வெளியிடமுடியும். 'நான்' என்ற அகப்பற்றுலும் 'என்னுடைய என்ற புறப்பற்றுலும் நாளாந்த பொருள்சார்ந்த வாழ்க்கையை வேண்டுமானுல் எம்மால் அமோகமாக வாழலாமேயன்றி அப்பற்றுக்களோடிணைந்து உண்மையை ஒருபோதும் உணரவியலாது. காலத்திற்குட்பட்ட 'எண்ணம்' என்ற கேடுவிளை சக்கரத்திற்குள்சுழன்றுகொண்டிருக்கும் எம்மால் காலம் தீண்டமுடியாத உண்மை நிலையை அடையமுடியாது. இறப்பென்பது வாழ்க்கையின் ஈற்றில் ஒரேயொரு முறை மட்டும் நிகழும்நிகழ்ச்சியன்று. மனிதன் அவ்வுலகிலுள்ளசகல விதஆசாபாசங்களிலும், பற்[illegible]

புகளிலுமிருந்து துறப்பதற்கு மரணம்உதவவேண்டும். மரணமென்பது ஒவ்வொரு கணமும் நிகழவேண்டும். அப்போது தான் நாம் எமது அழுகிப் போன இறந்தகால எண்ணங்களிலிருந்து மீள வழிபிறக்கும்.

## மண்வாசனை

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் 'ஒரு நூற்றுண்டின் இரு தமிழ் நாவல்கள்-பகுப்பாய்வு' நூலையும் அகஸ்தியர் வெளியிடத் திட்டமிட்டுள்ளார்.

மூன்று புதிய நாவல்களை எழுதிக் கொண்டிருக்கும் அகஸ்தியர் தமது வாழ்க்கை வரலாற்றையும் எழுத முன் வந்துள்ளார்.

அகஸ்தியர் தமக்கென்று ஓர் அரசியல் கோட்பாட்டைவரித்துக்கொண்டிருக்கிறுர். அக்கோட்பாட்டுக்காகப்பணியாற்றும் அரசியல் இயக்கத்தைச் சார்ந்திருக்கிறுர். பழகுதற்கு இனிய மனிதரான அவர்மானிடத்தின்உயர்வை நேசிக்கிறுர். அறுபது ஆண்டுகள் நிறைந்து சிந்தனை முதிர்வு பெற்றுள்ள அகஸ்தியர் நூற்றுண்டு வாழ்ந்து இலக்கியப் பணி புரிய வாழ்த்துவோம்.

## அன்பு

தீய செயலை
நீக்கிக்
கொடூர
குணத்தைத் திருத்தி
மனதை
உயர்த்தி
மனிதனையே
மாற்ற
அன்பு ஒன்றுல் தான்
முடியும்.

- மானிப்பாய் நிரஞ்சனு.

## நானே பெண்ணுக

கூவும் குயிலாக
நானிருந்தால்
பாடியே உலகை
மறந்திருப்பேன்
குலவும் தென்றலாய்
நானிருந்தாலும்
குவலயம் எங்கும்
உலவிடுவேன்
இனிய மலராய்
நானிருந்தால்
எந்நாளும் சிரித்திருப்பேன்
மின்னும் தாரகை நான்
ஆனுல்
மேவும் வானில்
உலவிடுவேன்
நானே பெண்ணுய்
இருந்து விட்டேன்
மண்ணில் கவியாய் நான்
இருந்தால்
மருவும் கவியில்
மறந்திருப்பேன்
நற்சுடராக இருந்தாலோ
நல் ஒளி எங்கும்
செய்திருப்பேன்
யாழின் தந்தி நான் ஆனுல்
இனிய இசையை
தந்திருப்பேன்
சின்னக் குழந்தையாக
இருந்தாலும்
செகத்தில் மகிழ்ந்து
நானிருப்பேன்
நானே பெண்ணுக
இருந்து விட்டேன்.

மதி. இமானுவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரிழந்த---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராசா (13 வயது). எம். தியாக ராசா(18 வயது) இவர்கள் சகோதரர்கள். எஸ் சுந்தரம் (20 வயது) ஏ. தருமன் (22-வயது). கே. பத்மநாதன் [24 வயது] இ. சுந்தையா (44-வயது) 6 பிள்ளைகளின் தந்தை எம். ரவீந்திரன் (22 வயது), பி. ராசதுரை (22 வயது).

அக்கரைப்பற்றைச் சேர்ந்த வர்கள்: ஏ நல்லதம்பி [65 வயது] 8 பிள்ளைகளின் தந்தை. இவர் மகன் என் விநாயக மூர்த்தி [34 வயது] 5 பிள்ளைகளின் தந்தை. இவர் மகன் கோபாலன் [சிறுவன்], கணபதிப்பிள்ளை [40 வயது] 5 பிள்ளைகளின் தந்தை, இவரின் மருமகன் பாஸ்கரன் [23 வயது] விவாகம் செய்தவர், கே வயிரமுத்து [45 வயது] 2 பிள்ளைகளின் தந்தை. இரு பிள்ளைகளும்கூடப் பலியானர்கள். ஏ. சோமசுந்தரம் [40 வயது] 5பிள்ளைகளின் தந்தை, கே. ராமலிங்கம் [35 வயது] 2 பிள்ளைகளின் தந்தை, எஸ். தாமோதரம் [35 வயது], சுபாக்கியராசா [27 வயது], குகநிதிராசா [32 வயது], இ.சதாசிவம் [34 வயது], எம். தெய்வேந்திரன் [32 வயது] டிராக்டர் சாரதி. [மா]


**பரி. யோவான் கல்லூரி**

**யாழ்ப்பாணம்**

அபிவிருத்திக் கண்காட்சி செவ்வாய்க்கிழமையும் தொடர்ந்து நடைபெறுவதினல் 25-2-86 பாடசாலை நடைபெறமாட்டாது. விடுதி மாணவர்கள் புதன் காலை சமுகமளிக்கவும்.

அதிபர்,
பரி. யோவான் கல்லூரி.
(A 287)


## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
தெய்வநாயகி சணமுகராசா



தோற்றம்: 10-01-1939
மறைவு: 06-03-1985
திதி: 23-02-1986

எங்கள் ஆருயிர் அன்னையே, உங்கள் பிரிவு எங்களை வாட்டுகிறது, உங்கள் நினைவு எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கின்றது, உங்களுக்காகப் பிரார்த்திக்கிறோம் அம்மா.

பிள்ளைகள்.
32, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். C 819

# 'முகமூடிமனிதர்' துணையுடன் நோயாளிகள் 'கைது!

[மட்டக்களப்பு] மட்டக்களப்பு அரசாங்க ஆஸ்பத்திரிக்கு முகமூடி மனிதர்களுடன் வந்த 'கமாண்டோக்கள்' இரு நோயாளர்களைக் கைது செய்துள்ளனர்.

கடந்த 10 நாட்களாகவே ஆஸ்பத்திரிக்கு அண்மையில் முகமூடி மனிதர்களின் நடமாட்டம் அதிகமாக இருந்தது எனத் தெரிய வருகின்றது. அத்துவேளையில் நேற்றுமுன்தினம் மேற்படிஆஸ்பத்திரியில் கைது செய்யப்பட்டோர் நோயாளிகளானமகாலிங்கம்[22வயது], சேகரம் எனப்படும் குணம் மாஸ்டர் ஆகியோராவர்

மூளைக் காய்ச்சல் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டிருந்த குணம் மாஸ்டர் கொழும்புக் களைத்துச் செல்லப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
நா. அருமைநாயகம்
(முன்னுள் ஆசிரியரும் ஆத்மஜோதி அச்சக உரிமையாளரும்)



தோற்றம்: 24-02-1924
மறைவு: 23-02-1984
திதி: 03-03-1986

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர்கள்.
'குருபவனம்'
கண்டிவீதி,
சாவகச்சேரி. C 920

## அக்கரைப்பற்று...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டுத்துதுவர்கள் தமது ஆழ்ந்த கவலையை இலங்கை அரசிடம் தெரிவித்துள்ளதாக பி பி ஸி. செய்தியை மேற்கோள் காட்டி அகில இந்திய வானொலி கூறியது. (செ)

## ஷெல் தாக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சியம் சேதமடைந்ததுடன் சில வீடுகளின் கூரைகளும் சேதமடைந்தன. களஞ்சிய ஊழியர் சிலரும், கடை ஊழியர்கள் சிலரும் காயமடைந்தனர்.

இதனையடுத்து இப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது நண்பகல் 1 30 மணியளவில் இராணுவத்தினர் தமது நடைபவனியை காங்கேசன்துறையிலிருந்து ஆரம்பித்து பலாலி சென்றடைந்தனர்.

வீதியாலும், கடற்கரையாலும், வீட்டு வளவுகள் ஊடாக

## 3 பிணக் குவியல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பி. ப. 7 மணிக்கு மட்டக்களப்பு பிரஜைகள் குழு செயலாளர் திரு. சாம். தம்பிமுத்துவும், உறுப்பினர் வண. பிதா சந்திரா பெர்னண்டோவும் உயிர் தப்பி வந்த மூன்று பெண்களுடன் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர். இவர்களுடன் 3 ட்ரக்டர்களில் கிராமவாசிகளும் உடன்சென்றனர்.

இப்படுகொலைச் சம்பவம் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் நீதிவிசாரணை நடாத்கப்படவேண்டும் என்றும் பிரஜைகள் குழுச் செயலாளர் ஜனதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சருக்கும், பிரதமருக்கும் திரு. சரத் முத்தெட்டுவேகமவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

களத்தமேட்டில் சூடடிக்கப்பட்ட 150 மூடை நெல்லும், 3 ட்ராக்டரும் இச்சம்பவத்தின் பின் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது

காணமற்போன மூன்று ட்ராக்டர்களும் அக்கரைப்பற்றைச் சேர்ந்த எஸ்.பொன்னம்பலம், கே. நாகராசா, இளையதம்பி ஆகியோருக்குச் சொந்தமானவை.

இப்படுகொலைசம்பவத்தில் முஸ்லிம் விவசாயத் தொழிலாளர்களும் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

அதேசமயம் தங்கவேலாயுதபுரத்தில் 8 வீடுகள் தீவைத்து எரிக்கப்பட்டன.

கவும் பெருந்தொகையான இராணுவத்தினர் சென்றதாகத் தெரிவிக்கப் பட்டது.


## கடைசிநேர வரிவிளம்பரம்

### தேவை

தட்டச்சு, சுருக்கெழுத்து கற்பிக்க ஆசிரியை தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். பைலட் இன்ஸ்ரியூட், 151, செம்மணி ரோட், (நாயன் மார்கட்டு சந்தி) நல்லூர். [C-915]


**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30, 9-15
விஜயகாந்—நளினி
**நானே உனது நாள்**

**லிடோ சினிமா**
10-30, 2-30, 4-45 6-30
James Bond 007
in
**Octo Pussy**
(Cinemascope Colour)
[Sexy Action and Thrills]

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதா-சுரேஸ் நடித்த
**ஆனந்த ராகம்**
(புதிய பிரதி கலர்)

**உஷா மினி**
SAVAGE SISTERS
இராணுவத்தினரால் சிறைப்பிடிக்கப்பட்ட இளம்பெண்கள், முகாமிலிருந்து தப்பி ராணுவத்தினருடன் மோதும் சண்டைப்படம்.
(Adults only)
A 289


## ஓராண்டு நினைவஞ்சலி



இரா. சிவரெத்தினம்
மலர்வு: 02-10-1955
உதிர்வு: 06-04-1985
திதி: 24-02-1986

அன்பின் உருவமே, அழகிய தோற்றமே, குழந்தை உள்ளமே, கனிவின் நிறைவே நீ ஆழ்கடலின் மடியில் கொடிய அரக்கர்களின் குண்டுக்கு பலியாகி, உன் அன்பு முகத்தையே காணுது ஓராண்டு ஆகியும், உன் நினைவும், உன் கனவும் எமக்கு என்றும் பசுமையே. எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீட்குதற்கரிய காலத்துள் மீளாத்துயில் கொண்ட எம் அன்பே, உனக்கு இறைவன் கட்டாயம் சாந்தி அளிப்பான்.

24ந் திகதி அதிகாலையில் நடைபெறஇருக்கும் அந்தியேட்டி கிரியையில் சகலரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

உங்கள் நினைவால்வாடும் பெற்றோர், மனைவி (ரூபசௌந்தரி), பிள்ளைகள், குடும்பத்தினர் அனைவரும், மற்றும் நண்பர்களும்.
ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.
(A 290)

## ஓராண்டு நினைவஞ்சலி

மூ. கதிரவேலு
பபியன் இராஜ்குமார்



அன்னமடியில்:
07-03-1930

அவ்வுலகோன்அடியில்:
23-02-1985

'உத்தானமும் உயிரும் நானே, என்னில் விசுவாசமாய் இருக்கிறவன் இறந்தாலும் பிழைப்பான்' (அரு 1125)

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட அன்புத் செய்வமே! ஆண்டுகள் நூறு சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி புளோறு ரெட்ணசோதி,
பிள்ளைகள் சுகந்தி, சுகுமார், சுமி, சுரேஸ், சுசாந்தி, சகோதரிகள், அத்தான், மைத்துனி, சகோதரன், மருமக்கள்.
431, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். C 921


## விற்பனையாகின்றது

**50-வது சிறப்பிதழ்**
(தை-மாசி—1986)

# ஊற்று

(அறிவியல் ஏடு)

★ மாணவர்கள் ★ சிறு கைத்தொழிலாளர்
★ பொதுமக்கள் ★ அனைவருக்குமான

**ஓர் அறிவுக் களஞ்சியம்**

50-வது சிறப்பிதழ் பிரதி ஒன்று ரூபா 6-50
(தபாற் செலவு -/75சதம்)

ஆண்டுச் சந்தா
சாதாரண பதிப்பு—ரூ. 30-00 (நியூஸ் தாள்)
விசேட பதிப்பு —ரூ. 40-00 (வெள்ளைத் தாள்)

தொடர்பு
''ஊற்று நிறுவனம்'',
மாரியம்மன் ஒழுங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22047

(C 916)

## வேலையாட்கள் தேவை

மன்னர் நீர் விநியோகத் திட்டத்தில் Pipe Fitter (பைப் பொருத்தும் வேலை) ஆக வேலை செய்வதற்கு PVC, Ductile iron, (300MMDIA) Cast iron பைப்புட்டுவதில் முன் அனுபவமுள்ளவர் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு 25-02-86 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பஸ்நிலையம் முன்பாகவுள்ள சாமுவேல் அன் சன்ஸ் கம்பெனி, 206-208 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். என்ற விலாசத்திற்கு காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை வரவும்.

**SITE ENGINEER**
Mannar Water Supply Project
SAMUEL SONS and CO LTD
**MANNAR**
(A 288)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் துயர்தீர்க்க சண்டிகா ஓமம்

தரை, கடல், ஆகாயம் ஆகிய முப்முனைத் தாக்குதலால் ஈழத்தமிழ்மக்கள் உயிரையும், உடமையையும், வசிப்பிடங்களையும் இழந்துள்ளனர். அகதிகளாக்கப்பட்டு அல்லற்படும் மக்களின் துயரத்தைத் தீர்த்தருள வெண்டி புங்குடுதீவு - மத்தி முத்துமாரி அம்மன் கோயிலில் ஆண்டு தோறும் நடைபெற்று வரும் சண்டிகா ஓமம் இம்முறை மிகச் சிறப்பாகச் செய்யப்படுகின்றது. ஒன்பது நாட்களாக நடைபெற்று வந்த யாகம், நாளை பூரண ஆகுதியுடன் நிறைவு பெறுகின்றது நயினைக் குருமணி, பிரதிஷ்டா பூஷணம், சிவஸ்ரீ சுவாமிநாத பரமேசுவரக் குருக்கள் தலைமையில் சிவாச்சாரியர் பலர்சேர்ந்து வேத, ஆகம விதிப்படி வெகு விமரிசையாக அபிஷேக ஆராதனை, நிவேதனம், இயந்திர பூசை, தர்ப்பணம், இலட்சார்ச்சனை, தேவிமகாத்மிய பாராயணம், சாண்டிகாஓமம் என்பவற்றைப் பக்திசிரத்தையுடன் தினந்தோறுஞ் செய்து வந்தனர்.

அண்ட சராசரங்கள் அத்தனையையும் படைத்துக் காத்தருளும் பராசக்தியே சண்டிகா பரமேஸ்சுவரி. இவள்தான் மூலப் பிரமசக்தி. தீமைவரும் போதெல்லாம் அதைத்தீர்த்தருளத்தான் அவதாரஞ்செய்தருளுவதாகத் திருவாய்மலர்ந்தருளியவளும் இவளே. இந்தச் சண்டிகா தேவியே ஆன்மாக்களை வதைக்கும் அசுர நிட்டூரங்களை அழித்தொழிக்க அவ்வப்போது துர்க்கை, இலக்குமி, சரசுவதி, சாமுண்டி, சப்தமாதராக அவதரித்தருளுபவள் ஒவ்வோர் அவதாரமும் பூரணபிரம்ம சத்தியே. ஒவ்வோர் அவதாரத்திலும் ஒவ்வோர் அமிசஞ் சிறந்து விளங்கும். (சச்சிதானந்தப் பிழம்பான பரம்பொருளோடு நம்மைக் கூட்டிவைப்பதற்காக வந்தனவே வெவ்வேறு அவதாரங்கள் இன்டசக்தி - காளி; ஞானசக்தி - இலக்குமி; சத்தியசத்தி - சரசுவதி; போக சத்தி - சாமுண்டி இவ்வாறு) ஒவ்வொரு காரியத்திற்காக ஒவ்வோர் அம்சமாகக் காட்டிக் கொண்டாலும், ஒவ்வொரு தேவியும் பூரணபிரம சத்தியே. இவ்வாறு சர்வசுவரயாக விளங்குபவள் சண்டிகா பரமேசுவரி. அரச பயங்கரவாதத்தால் அல்லற்பட்டு ஆற்றுது கண்ணீரும் கம்பலையுமாய் நின்று தவிக்குந் தமிழ் மக்களாகிய நம்மை இத்தருணத்தில் அணைத்து ஆதரித்தருள வல்ல அன்னை சண்டிகா தேவியே. ஆருமற்றவருக்குத் தெய்வமே துணை உயிர்துணையாக உள்நின்று இயங்கும் அன்னை அம்பிகையிடமன்றி வேறுயாரொடு நோவோம்! யாருக்கு எடுத்துரைப்போம்!

இந்தச் சண்டிகாஓமம் உலக ஷேமத்தின் பொருட்டு அம்பிகைக்கு அர்ப்பணமாகச் செய்யப்படுகின்றது. இது தார்மீக நெறியில் சாந்தியளிப்பது. சண்டிகஓமம் அங்கமாகஇங்கே பாராயணஞ் செய்யப்பெறும் தேவிமான்மிய வாசகசப்த அதிர்வுகளால், பகைஅசுர சத்திகள் நிலைகெட்டு அழிந்துவிடும். மக்களுக்கு இவ்வுலக வாழ்வில் பசுமைதளிர்க்கும். மான்மியத்தில் வரும் தேவி அசுரரை அழித்த கட்டங்கள், அரசபயங்கரவாதத்தை அழிக்கும், கூட்டாகக் குடிமக்களைக் கொன்று குவிக்கும் கொடுமையைத் தடுக்கும் அரசகோபத்திற்கு ஆளான போதும், கோர யுத்தத்தில் விண்வெளித் தாக்குதல் ஏற்பட்ட சமயம்' பாதுகாப்புப்படையில் அகப்பட்ட நேரத்திலும் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகள் அத்தனையையும் உடைத்தெறியும் சக்தியுள்ளது சண்டிகா ஓமம். இதுவே சடசக்திவாய்ந்த அணுகுண்டு சலவாயுக்குண்டுகள் அனைத்தையும் நிர்மூலமாக்கும்; அருட்சக்தியை அகில உலகத்திலும் வியாபித்து விளங்கச்செய்து உலகசாந்தியை உண்டாக்கும்.

-பொன்கிழார்


கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ


## கிளிநொச்சி விவசாயிகளின் பரிதாபநிலை

[கிளிநொச்சி]

கிளிநொச்சிப் பகுதியில் நெல் அறுவடை நடைபெற்று வரும் அதேவேளை அறுவடை செய்யப்பட்ட நெல்லை வீதிக்கு கொண்டுவர விவசாயிகள் அச்சம் கொண்டுள்ளனர்.

அது மட்டுமல்லாமல் ஆயுதப்படையினரின் கெடுபிடி நடவடிக்கைகள் ஆகாயத்தாக்குதல் முதலான சம்பவங்களால் நிம்மதியை இழந்துள்ள விவசாயிகள் தமது வயல்களில் வேலைசெய்ய தொழிலாளர்களைத் தேடிப்பிடிப்பதில் கஸ்டமடைந்துள்ளனர்

தொழிலாளர்களும் வயல்களில்வேலைசெய்வோர் கைதாவதைத் தொடர்ந்தும் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களைத் தொடர்ந்தும் வயல் வேலை மேற்கொள்ள அச்சமடைந்துள்ளனர்.


சமுத்திரா மல்ரி சேவிசஸ்
வழங்கும் திருமண சேவை

உங்கள் அபிலாசைக் கேற்ற மணமக்களை உடனுக்குடன் தெரிவு செய்து கொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

காணி வீடு வாங்கிவிற்கும் சேவை, மின்சார உபகரணங்கள் வாங்கிவிற்கும் சேவை, பாஸ்போட், பிறப்புச்சான்றிதழ்கள் போன்ற எந்தச் சேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

எமது தேவை:
சுழிபுரத்தில் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் எமது கிளை நிறுவனத்திற்கு நிருவாகி (ஆண் பெண் இரு பாலாரும்) வெளிக்கள உத்தியோகத்தர் (ஆண்) லிகிதர்கள்(பெண்) உடன் தேவை. 30/2/86க்கு முன் விண்ணப்பப் படிவத்துடன் நேரில்எமது தலைமைச் செயலகத்திற்கு வரவும்.

தொடர்பு:
தலைமைச் செயலகம்,
303, பலாலி ரோட்,
கோண்டாவில்.

கிளை நிறுவனம்:
1. முருகமூர்த்தி லேன், நெல்லியடி, கரவெட்டி.
2. கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பளை.

உங்கள் தேவை! எங்கள் சேவை!
A 280



யாழ். மக்களுக்கு
ஓர் நற்செய்தி
வெளிநாட்டுப் பயணத்திற்கான
விமான டிக்கட்டுகள், பாஸ்போட்,
விசா, பிரயாணிகள் காசோலைகள்
மற்றும் பிரயாணங்களுக்குத் தேவையான
சகல ஒழுங்குகளும் செய்துதரப்படும்.
தொடர்பு கொள்ளுங்கள்:
விஜயமாலா ரவல்ஸ்,
213, 215, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி: 547205
நேரில் தொடர்புகொள்ள முடியாதவர்கள்
யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்:
திருமதி சி. கஜமுகலிங்கம்,
ரஜனி நிலையம், ஊரியாட்டி, சுன்னாகம்.
9315



யானை மார்க்
ஒவ்வொரு போத்தலிலும் மேலதிகமாகக்
கிடைக்கிறது




சிலோன் கோல்ட் ஸ்ரோஸ் லிமிட்டெட்
ரூ:2/10 முதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடி நவீல்ட் பாடசாலை
## வெற்றிடங்கள்

ஆசிரியர் க. பொ. த. (உயர்தரம்) 4 பாடங்களும் ஆண் / பெண் விடுதி மேற்பார்வையாளர் க. பொ. த. (உயர்தரம்) 2 பாடங்களும் குறைந்த தராதரம. ஆண் விடுதி மேற்பார்வையாளர்க்கு விவசாய அனுபவம் அவசியம். விண்ணப்ப முடிவு திகதி7-3-86. முத்திரை ஒட்டப்பட்டு சொந்த விலாசமிடப்பட்ட நீள உறையை அனுப்பியோ, நேரிலோ விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்.

A 282



## பிறநாட்டில் மேற்கல்வி

இங்கிலாந்து, அமெரிக்கா, மேற்கு ஜேர்மனி, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் பணம் செலுத்தி மேற்கல்வி கற்க உகந்த கல்லூரிகளில் இடமும் தங்கும் வசதியும் பிறநாடு செல்ல விசாவும் ஒழுங்கு செய்து தரப்படும்.

Eva Agency &
Consultancy Service

18G 2, Chalemont Road,
Colombo6-.
T'phone: 501121

எல்லா நேரங்களிலும் தொடர்பு கொள்ளலாம்)

A 276



## எவர் விஷன்

★ உங்கள் மங்கள வைபவங்களை என்றும் நினைவில் நிறுத்திக்கொள்ள,

மிகக்குறைந்த ஒளியிலும் தெளிவான சாட்சிகளைப் படமாக்கிக்கொள்ளும் கம்பியூட்டர் முறையில் இயங்கும் இவ்வருடத்தில் வெளியான நவீன மொடல், வீடியோ கமெருவால் படம்பிடித்துக் கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள்.

★ அத்துடன் T. V., வீடியோ டெக் என்பவற்றையும் பழுது பார்ப்பதற்கும்,

★ புதிய,பழைய வீடியே படங்களையும் வாடகைக்கு தரமான பிரதியில் பெற்றுக்கொள்வதற்கும் நாடுங்கள்:


**எவர் விஷன்**
136, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடிச் சந்தி,
யாழ்ப்பாணம்

C 738



## BRITE SOAP WASHES BRIGHT

Net Weight 130 Grams




Rs. 2-25

பிரகாசமான சலவைக்கு **பிறைற் சோப்**

★ ★ ★ ★

கைதேர்ந்த தொழிலாளர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிப்பவர்கள்

Turbow Commercial
Alaveddy.

[A 239]


# "நாடு வேண்டிப் போராடும் நாம் ஒழுக்கத்தைப் பேணவேண்டும்"
## தே. இ. மா. அமைப்பு அறிக்கை

[யாழ்ப்பாணம்]

''தமிழ் மக்களுக்கு ஒருநாடு வேண்டும் என்று போராடும் சமூகம், போராட்டத்தின் முக்கிய பகுதியாகஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். இன்றைய நிலையில் 'ருசகிங்' என்ற துன்புறுத்தல் தவிர்க்கப்பட வேண்டியது அவகியமாகும்'' என்று தமிழீழ தேசிய இராணுவத்தின் மாணவர் அமைப்பாகிய தேசிய இராணுவ மாணவர் அமைப்பின் (சோறு) சார்பில் அதன் நெறியாளர் ஜெ ரி. வாசு அறிக்கை யொன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

எமது தமிழீழப் போராட்டத்தின் முனைப்ப சிந்தனை வடிவிலும் செயல்வடிவலும் அமைய ஊக்கப் போராட்டப் பங்களிப்புச் செய்த பல்கலைக் கழகங்களில் தமிழீழ தாய்ப் பல்கலைக்கழகமாம் யாழ் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு முக்கியமாக இருந்தது, இதன் வழியில் இன்றைய நிலையில் ''ருக்கிங்'' எனப்படும் ஒருவித ''சட்டை இழுபறி உற்சாக மூட்டல் முறை'' தவிர்க்கப்பட வேண்டியது அவசியமாகிறது. இத்தகைய செயல் முறைகள் தமிழர் கலாசாரத்தின் அம்சங்களா என்று சிந்தித்துப் பார்த்தால் எக்காலத்திலும் தமிழரின் கல்வி நெறி முறையில் மாணவரின் அம்சமாக இச்செயல் இருந்ததில்லை என அறியலாம். இது முற்று முழுதாக மேற்கத்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு நோய் எனலாம்.

''தமிழர்களாகிய நாம் அதிலும் விடுதலைப் போராட்டத்தை முனைப்படுத்திச் செயற்பட்டு வரும் வேளையில் நன்கு உணர்ந்து இதனை தவிர்க்க வேண்டியது அவசியமாகும். யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், தலைவர்கள், அமைப்புகள் புதுமுகங்களாக உள்வரும் மாணவர்களுக்கும் மக்களுக்கும் தெளியவைத்து, தமிழ் மாணவர்களிடம் ஒழுக்கத்தையும், தமிழரின் நாகரிகத்தையும் வலுப்படுத்தி மது விடுதலைப் போராட்ட செயற்பாடுகளைப் புனிதப்படுத்த ஆவன செய்யவேண்டும்.''

## மண்வாசனை மணக்க எழுதும் அகஸ்தியர்

இவ்வார மலரின் 10-ம் பக்கத்தில் அகஸ்தியர் பற்றி வெளியாகியுள்ள கட்டுரையின் தலைப்பு 'மண்வாசனை மணக்க எழுதும் அகஸ்தியர்' என்றிருக்க வேண்டும். வாசகர்களுக்கு ஏற்படும் குழப்பத்திற்காக வருந்துகிறோம். [ஆர்]

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடத்தை இம்மாதம் 28 ம் திகதி கல்வி வலயப் பணிப்பாளர் எம். சிமியாம்பிள்ளை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைப்பார்

கல்லூரி அதிபர் திருமதி பி. இராஜேந்திரசிங்கத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இத் திறப்பு விழாவில் வட்டாரக் கல்வி அதிகாரி வி. கே. ஈசுரபாதம் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார்.

## விடுதலை செய்யப்பட்டார்

(வவனியா)

ஆயுதப் படையினரால் கடந்த புதன் பிற்பகல் கைதான வவனியா தபால் நிலைய சிற்றூழியர் வெற்றிவேலு சின்னராசா அடுத்த நாள் விடுவிக்கப்பட்டார்.

கடமையினை முடித்துக் கொண்டு வீடு திரும்புகையிலேயே இவர் ஹொறவப் பொத்தானை வீதியில் வைத்து கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பென்சனியர் பங்குபற்றுவர்

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரில் இம் மாதம் 27 ம் திகதி நடைபெறவிருக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஓய்வூதியம் பெறுவோரும் பங்குபற்றுவார்கள்.

வட இலங்கை பென்சனியர் நலன் புரிச் சங்க செயலாளர் திரு எஸ். ஆர். அருமைநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

ஊர்வலத்தில் பங்கு பற்றக் கூடிய உடல் நலமுள்ள பென்சனியர்கள், அன்று காலை யாழ் சிவன் கோவிலடிக்கு வருமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். [க]


## தேவை

நல்ல நிலையிலுள்ள பாவித்த 31 H. P., 1000 R. P. M , 21 K. W. மின் இயக்க இயந்திரம் ஒன்று (Generator) உடனடியாகத் தேவை.

விலை விபரங்களுடன் உடனடியாக கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு சொள்ளவும: விளம்பர இல. A 284 C/o., ஈழநாடு, யாழ்ப்பாணம்.

A 284



## தேவை

சூழை வைத்த அல்லது சூழைவைக்காத முருகக்கல் ஒரு லொறிலோட் உடனடியாகத் தேவை. விலை விபரங்களுடன் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
மகேந்திரா கண்ணாடி தொழிற்சாலை,
9, கண்டி வீதி,
நாவற்குழி.

A 285



# வெளிநாட்டு பிரயாணம்

★ கனடா — ★ அமெரிக்கா
★ ஜேர்மனி — ★ பிரான்ஸ்

இந்நாடுகளுக்குப் பிரயாணஞ் செய்ய என்னை ஏற்கனவே சந்தித்து பாஸ்போட் கொடுத்தவர்கள் உடனே வந்து சந்திக்கவும் உங்களைக் கூட்டிச் செல்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளும் செய்து வந்துள்ளேன்.

மற்றவர்கள் பாஸ்போட்டுடன் வந்து சகல விபரங்களையும் அறிந்து கொள்ளவும்.

சனி, ஞாயிறு, திங்கள் காலை 9-00 மணிமுதல் மாலைவரை.

வ. நல்லையா,
அளவெட்டி.

C 844



உலகப் பிரசித்திபெற்றதும்
ஸ்ரீலங்காவின் விற்பனையில்
முதன்மை பெற்றதும்

# நெஷனல்

இதோ!
புத்தம் புதிய மொடல்

## 14" கறுப்பு வெள்ளை

பூஸ்ரர் உள்அமைந்த விசேட அமைப்பு
வெளிப்புறம் மரத்திலுல் செய்யப்பட்டது
தன்னியக்க வோல்றேச் சீராக்கி
80V — 290V அல்லது
12V கார் பற்றி

## V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23447.

A-215


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

# "ஐக்கியத்தின் அவசியத்தைப் பூரணமாக உணருகிறோம்"

## ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை

[யாழ்ப்பாணம்]

ஐக்கியத்தின் அவசியத்தை நாம் பூரணமாக உணருகின்றோம். ஐக்கியத்தைக் காரணம் காட்டி எமது வீரமிக்க தோழர்களைப் பறி கொடுக்க நாம் தயாராக இல்லை. ஐக்கியத்தை எம்மிடம் வலியுறுத்துபவர்கள் முதலில் சம்பந்தப்பட்ட மற்றவர்களிடமும் வலியுறுத்துமாறு தோழமையுடன் வேண்டிக் கொள்கின்றோம்',

யாழ். நகரில் கடந்த இரு நாட்களாக இரு குழுக்கள் மத்தியில் நிலவி வந்த மோதல்கள் பொது மக்களின் தலையீட்டினைத் தொடர்ந்து நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் மூலமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதை அடுத்து இவ் விவகாரம் தொடர்பாக 'ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' (ஈ. பி. ஆர். எல். எவ்) விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:

ஈழப் போராட்டத்தை நசுக்க ஸ்ரீலங்கா அரசு முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இராணுவ வெறியாட்டத்தாலும், விமானத் தாக்குதல்களினாலும் எமது மக்கள் கொன்றழிக்கப்படுகின்றார்கள். இந்நெருக்கடியான சூழ்நிலையில் போராளிகள் இடையேயான ஐக்கியத்தின் அவசியம் மேன்மேலும் வலுவடைகிறது.

''ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் விடுதலை இயக்கங்களிடையேயான ஐக்கியத்திற்காக விடாப்பிடியாக உழைத்தோம். ஈழப் போராட்டச்சூழ்நிலைகளிலும். சர்வதேசியத் தேவைகளின் அடிப்படையிலும் பல்வேறு முரண்பாடுகள் இருந்தபோதும் ஈழதேசிய விடுதலை முன்னணியைக் காப்பதில் எமது முழுமையான பங்களிப்பைச் செலுத்தினோம். இயக்க முரண்பாடுகளால் போராளிகள் கொல்லப்படும் கோர நிகழ்வுகளுக்கெதிராக அரசியல் ரீதியான வழிமுறையைக் கையாண்டு விடாப்பிடியாகப் போராடி வந்தோம்.

இயக்கங்களிடையேயான மோதல் தவிர்க்கப்படவேண்டியதை! இதனால் ஏற்படும் இழப்புக்கள் அநியாயமானவை.''

# வவுனியா நேரத்துடன் அடங்குகிறது

(வவுனியா)

வவுனியா நகரம் மீண்டும் நேர காலத்தோடு உறங்கி விடுகிறது.

தினமும் பகல் மூன்று மணிக்கு முன் கடைகள் மூடப்படுகின்றது அதன் பின் நகரப் சன நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடக்கின்றது

அங்காடி வியாபாரிகள் நண் பகல் 12 மணியுடன் புறப்பட்டு விடுவதை அவதானிக்க முடிகின்றது,

# "தாவடித் தாக்குதல்: ராணுவத் தீர்வின் பரவலாக்கமே!"

(சென்னை)

யாழ். மாவட்டத்திலுள்ள தாவடிப்பகுதியில் கடந்த 19ம் திகதி பாதுகாப்புப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுத்தாக்குதல்கள் ராணுவத் தீர்வின் பரவலாக்கத்தையே காட்டுகிறது என தமிழீழமக்கள் விடுதலைக் கழகம் (புளட்) கூறியுள்ளதாக சென்னை 'ஹிந்து' செய்திவெளியிட்டுள்ளது.

'ஹிந்து' செய்தி மேலும்

## 'புளட்' அறிவிப்பு

தெரிவிக்கையில், தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்படும் இனப்படுகொலைத் தாக்குதல்களை நிறுத்துமாறும், யுத்தத்தில் பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான விதிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் கேட்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றது.

(ய-செ)

## சித்தாந்த...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

பனை அபிவிருத்திச்சபை, யாழ். பல்கலைக்கழகம், பரியோவான் கல்லூரி, வட்டுக்கோட்டைக் கல்லூரி, டைனமிக் என்ஜினியரிங், குளோபல், யாழ்ப்பாண மருத்துவச் சங்கம். ஏனைய உள்ளூர் உற்பத்தி நிறுவனங்கள் பங்குகொள்கின்றன.

இக்கண்காட்சி புத்திஜீவிகளின் பங்களிப்பை வெளிப்படுத்தியுள்ளதாகப் பரியோவான் கல்லூரி அதிபர் கா. ஜெயசீலன் தெரிவித்தார். கண்காட்சி இன்று நடைபெறுது. திங்கள், செவ்வாய் வழமைபோல் நடைபெறும்.

# பென்சனியர்கள் மரணம் கொலையெனத் தீர்ப்பு

[கா. யோகநாதன்]

''சம்பவம் நடந்த இடத்துக்குக் காலையில் சென்றபோது 'படபட' வென வெடிச் சத்தம் கேட்டது. நான் குப்புறப்படுத்துவிட்டு பின்னர் மெதுவாக வந்த வழியால் கொஞ்சத் தூரம்சென்றபின் திரும்பிப் பார்த்தபோது வேட்டி உடுத்தஇரண்டுபேரும் கால்சட்டை அணிநத ஒருவரும் இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடப்பதைக் கண்டேன்.''

யாழ். கோட்டைப் பகுதியில் உள்ள ஒய்வூதியக்கொடுப்பனவு நிலையத்துக்குச் சென்ற வேளையில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 3 பென்சனியர்களின் மரணவிசாரணையில் சாட்சியமளிக்கையில் கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த முன்னாள் யாழ். ஆஸ்பத்திரி ஊழியர் ஜேம்ஸ் சின்னராசா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மேலதிக நீதவான் கே பி.எஸ். வரதராசா மரண விசாரணை நடத்தினார்.

இச்சம்பவத்தில் கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த எம். செல்லத்துரை (77 வயது) யாழ். டேவிட் வீதியைச் சேர்ந்த எம் இளையதம்பி (55-வயது), இளவாலையைச் சேர்ந்த வி. எஸ். அருளப்பா (77 வயது) ஆகியோர் பலியானார்கள்.

மேற்படி மரணவிசாரணையில் சாட்சியமளித்த சட்ட வைத்திய அதிகாரி, மூவரின் மரணங்களும் கொலை என வைத்திய ஆதாரங்களைக் காட்டித் தீர்ப்பளித்தார்.

'வீதியில் சம்பவங்களைப் பற்றிக் கதைத்துக் கொண்டு சென்றவர்களை எனக்குத்தெரியாது. அவர்களிடம் யார் யாரைச் சுட்டார்கள் என்று கேட்டேன். பெரியபுலானைச் சேர்ந்த ஒருவரும் சுடப்பட்டதாக கூறினார்கள், எனது மச்சான் அருளப்பா முதல் நாள் என் வீட்டில் வந்து தங்கியிருந்துவிட்டுத்தான் காலையில் பென்சன் எடுக்க சென்றார். உடனே நான் ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்தபோது அவர் இறந்துகிடந்தார்'' என பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த பி. அருளப்பு தமது சாட்சியத்தின்போது கூறினார்:

கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த பிரான்சிஸ் மரியநாயகம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ''சம்பவதினம்காலை 5-30 மணிக்கு பென்சன் எடுக்க கடற்கரை வீதியால் சென்றேன். கடற்கரைவீதி மாநகர சபை வீதி சந்திக்கு கிட்ட வந்தபோது வெடிச்சத்தம் கேட்டது நான் படுத்துவிட்டேன். வந்த பக்கமாக திரும்பி ஊர்ந்து சென்றேன். பென்சன் கொடுப்பனவுப் பக்கத்திலிருந்து சூடு விழுந்தது. என் வலது காலிலும், வலது கை விரலிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயம் ஏற்பட்டது. தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றேன்''.

# லலித் கூற்றுக்கு 'ஈரோஸ்' மறுப்பு

(சென்னை)

தமது இயக்கத்தின் முகாமொன்றை ஆயுதப் படைகள் குண்டு வீசி சேதமாக்கிவிட்டன என்ற அரசாங்க அறிக்கையை ஈரோஸ்' இயக்கம் மறுத்துள்ளது.

இது சம்பந்தமாக, இயக்கத்தின் திரு பாலகுமார் சென்னையில் விடுத்துள்ள அறிக்கையொன்றில், ''கடத்தப்பட்ட பிரிட்டிஷ் பெண்மணியான திருமதி வில்லிசை நாங்கள் வைத்திருந்த முகாமைப் பாதுகாப்புப் படைகள் குண்டு வீசிச் சேதமாக்கியுள்ளன என தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத்முதலி கூறியிருப்பதை மறுக்கிறோம். இத்தகைய ஒரு சம்பவம் நடை பெறவில்லை'' எனக்குறிப்பிட்டுள்ளார். அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

ஈழ தேசிய விடுதலை முன்னணியில் அங்கம் வகிக்கும்இயக்கங்களில் ஏதாவது ஒன்றைப் பாதுகாப்புப் படையினர் அழித்தோ அல்லது சேதப்படுத்தியோ உள்ளனர் எனக் கூறுவது வழக்கமாகி விட்டது இத்தகைய செய்திகளால் தவறாக வழி நடாத்தப்பட வேண்டாமென சிங்கள மக்களை 'ஈரோஸ்' இயக்கம் கேட்டுக் கொள்கிறது.' [ய-செ]

## கொழும்புக்குண்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கக்கருதப்படும் பி.எல். ஜெயசீலன் வெளிநாடொன்றில் தலைமறைவாகியுள்ளதாக ஊர்ஜிதமற்ற சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜெயசீலனின் கடலைக்கடையில் வேலைசெய்தவர்களென்றும் பாதுகாப்புக் காரணங்களையிட்டு இவர்களின் பெயர்கள் வெளியிடப்படவில்லையென்றும் கொழும்பு பொலீஸார் தெரிவிக்கினறனர்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49 Telegram Eelanadu, Telephone 22389 24125

# மரண அறிவித்தல்

## G. T. வின்சன்ற்

G. T. வின்சன்ற் (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை) 21-2-86 இல் காலமானார். இவர் திருமதி வெலிஷியா வின்சன்ற் (சென். திரேசா மகளிர் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், செல்வி சசிரேகா, சுசி, ஆஸ்லி (சென். திரேசா ம. ம. வி.) ஜொராட்சங்கர் (கிளிநொச்சி மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புத் தந்தையும், அன்ரனி ஜோர்ஜ் (புத்தளம்), திருமதி இராஜேந்திரா (மானிப்பாய்), திருமதி ஜஸ்ரின் உந்துகொடை என்பவரின் அன்புச் சகோதரனும், அருட்செல்வி (திருக்க. மடம் பம்பலப்பிட்டியா) அவர்களின் அன்பு மருமகனுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்கு 23-2-86 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2 மணிக்கு பரந்தனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி F. S. வின்சன்ற்.

[C 918]

## இரட்ணசபாபதி விஜயரட்ணம்

தும்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொம்மந்தறையை வசிப்பிடமாகவும் கொண்டவருமான இரட்ணசபாபதி விஜயரட்ணம் (பொறியியலாளர், சவூதி அரேபியா) 5-2-86 அன்று காலமானார். இவர் 'சுசி'யின் அன்புக் கணவரும், சிவறஞ்சனியின் அன்புத் தந்தையும், திரு. திருமதி துரைசாமியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரட்ணசபாபதி, திருமதி இரட்ணசபாபதியின் அன்பு மகனும், முத்துலட்சுமி, ராஜலட்சுமி, சரோஜினிதேவி, கிருஷ்ணமூர்த்தி (கனடா), பராசத்தியின் அன்புச் சகோதரரும், ஞானசேகரம்பிள்ளை, ஜெயபாலன், சுபாஜினியின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 23-2-86 ஞாயிறு காலை 10 மணியளவில் கொமந்தறையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

K. நல்லையா.

[C 907]

## திருமதி நமசிவாயம் நாகம்மா

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த திருமதி நாகம்மா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் நமசிவாயத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராமப்பிள்ளை - தங்கமுத்து தம்பதிகளின் மூத்த மகளும், கமலாதேவி, திலகமணி, யுகநாதன் (பண்ணிசை ஆசிரியர்), மகேசன் (சவூதி அரேபியா), கேசவன் (மிருதங்கக் கலைஞர்) ஆகியோரின் அன்புத் தாயாரும். சதாசிவம், காலஞ்சென்ற குமரகுருபரன், ரோகிணி ஆகியோரின் அருமை மாமியாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (C.G.R.), சின்னத்துரை, செல்லம்மா, பாக்கியம், நடராசா (ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர், பட்டக்களப்பு) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற முருகேசு, சபாபதி தையல்முத்து ஆகியோரின் மைத்துனியும், பாக்கியம், செல்லம்மா, சுப்பிரமணியம், காலஞ்சென்ற இரத்தினம், இராசையா, காலஞ்சென்ற மலேசியாவைச் சேர்ந்த கமல் ஆகியோரின் சிறிய தாயாரும், கருணாகரன், (சிற்பக் கலைஞர்), கிருபாகரன் (U. K.), இந்திரன், சிவகுமார் (U. S. A.), திலகராணி, பரமேஸ்வரன், உருத்ராணி, ஜனார்த்தனி ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24-02-1986 திங்கட்கிழமை பி. ப 2-00 மணிக்கு திருநெல்வேலி செம்பாடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

[C 925]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org